பக்கங்கள்: இருபத்துஎட்டு +06

# உதயன்


விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 21 புதன்கிழமை (06.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 222



15 யுத்தக் குற்றப் பிரசுரம்



17 ஆடுவோம் பாடுவோம்



25 காலிறுதியில் பிரேஸில்

# கூட்டமைப்பு ஊடாகவே தமிழருக்கான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும்

## சபையில் செல்வம் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஜூலை 06

''தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே வழங்கப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் தமிழர்களின் குரலாக ஒலித்து வருகின்றது. தீர்வைப் பெறுவதற்காக அரசுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது.''

- இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அவசரகாலச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதால் எமது தமிழ் மக்கள் மிகவும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். தமிழர்களைத் தொடர்ந்தும் அடிமையாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே அரசு அவசரகாலச்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் 41 சதவீதமானவர்களின் ஒருநாள் வருமானம் ரூ.210!

கொழும்பு, ஜூலை 06

நாட்டில் 41 சதவீதத்துக்கும் அதிகமானோரின் ஒரு நாள் வருமானம் 210 ரூபாவுக்கும் குறைவாகவுள்ளது. இந்த நிலைமையில் நாட்டு மக்கள் சந்தோஷமாக வாழ்கின்றனர் என்று அரசு எவ்வாறு கூறும்?

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நாட்டின் பொருளாதாரம் உறுதியான நிலையில் உள்ளது என்று அரசு தெரிவிக்கிறது. ஆனால், இந்த நாட்டு மக்களில் 41 சதவீதத்துக்கும் அதிகமானோர்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க இடத்தில் உடல் பரிசோதனை

# பெண் கைதிகள் பலருக்கு உளவியல் ரீதியாகப் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 06

தமிழ்ப் பெண் அரசியல் கைதிகளை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும் போது பெண் இராணுவச் சிப்பாய்கள் பகிரங்க இடத்தில் அவர்களைச் சோதனையிடுவதனால் கைதிகள் வெட்கத்தால் கூனிக் குறுகிப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பல ஆண்கள் பார்த்திருக்க சோதனையிடுவதால் பெண் கைதிகள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டு சுகயீனம் அடைகின்றனர் - இப்படி ''நாம் இலங்கையர்'' அமைப்பு விசனம் தெரிவிக்கின்றது.

நீதிமன்ற விசாரணைகளுக்காக தமிழ் அரசியல் கைதிகள் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு

(27 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக முகாம்களில் தங்கியிருந்த 40 அகதிகள் தாயகம் திரும்பினர்



கொழும்பு, ஜூலை 06

தமிழக அகதி முகாம்களில் தங்கியிருந்த இலங்கை அகதி கள் 40 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர் என மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்தது.

பதினொரு குடும்பங்களை சேர்ந்த 40 பேர் தமிழக அகதி முகாமிலிருந்து இலங்கை

(27 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு பிரேரணை நேற்று சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை

### பிறிதொரு தினத்தில் கொண்டுவரப்படுமென திடீர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

அரசியல் தீர்வு யோசனையைத் தயாரிப்பதற்கான உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதற்கான பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இறுதிநேரத்தில் தெரிவுக்குழு பிரேரணை பிறிதொரு தினத்தில் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று சபாநாயகர் அலுவலகம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

எனினும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி ஆகியவற்றின் எதிர்ப்புக் காரணமாக பிரேரணை

(27 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சுடர்

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல.8 இன் வினாத்தாள்-I இன்றைய உதயனின் 16,17ஆம் பக்கங்களில் வெளியாகியுள்ளது.

## கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரத்துக்கு முட்டுக்கட்டை போட்டு வரும் இராணுவம்

### கிளிநொச்சி மலையாளபுரத்தில் நேற்றும் அச்சுறுத்தல்

முறிகண்டி, ஜூலை 6

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக நடைபெறும் பிரசார நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர் மறைமுகமாகவும் நேரடியாகவும் தடங்கல்களையும் கெடுபிடிகளையும் விளைவிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு இராணுவத்தினர் ஆதரவாகச் செயற்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றும் கூட கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபை வேட்பாளரான வடிவேல் நகுலேஸ்வரனை ஆதரித்துப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை அங்கு நின்றிருந்த இராணுவத்தினர் அச்

(27 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலி உறுப்பினர்களில் பலர் இன்னமும் சுதந்திரமாக நடமாடுகின்றனர்

## பிரதமர் ஜயரத்ன புதுத் தகவல்



கொழும்பு, ஜூலை 06

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது புலிகள் அமைப்பிலிருந்து தப்பிவந்து கைது செய்யப்படாத நிலையில் புலி உறுப்பினர்கள் பலர் இன்னும் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்றும், அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பிரதமர் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு-

வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்கும் நடவடிக்கையில் எமது அரசு ஈடுபட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் இப்போது அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர். இது நாம் பெற்ற வெற்றியாகும். பயங்கரவாதம் முற்றாக முடிவடைந்து விட்டது. அதற்கு மீண்டும் உயிர்கொடுக்க பல்வேறு சக்திகள் முயன்றபோதும் அரசின் செயற்பாட்டால் அவை தோற்கடிக்கப்பட்டுவிட்டன.

(27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933 021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இணைய முகவரி: www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான காலநிலை காணப்படும் சாத்தியம் உள்ளது

COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆடி 05, 2011

| | |
|---|---|
| பங்குச்சந்தைச் சுட்டிகள் | |
| அனைத்துப்பங்கு(ASPI) | 6862.79↑ |
| மிலங்கா(MPI) | 6449.58↑ |
| உரிமைமுத்தல் தகவல்கள் | |
| வியாபாரப்புரள்வு(Rs.) | 2.5Bn |
| பங்குகளின் அளவு(No.) | 47.39Mn |
| வியாபாரம்(No.) | 17600 |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | |
| அதிகரிப்பு(Top 5 gainers)விலை | Rs. |
| ஏம்எப் பினான்ஸ் | 450.00 |
| ஒன்னலி | 134.00 |
| கொன்பிபி | 284.00 |
| சதோசா மோட்டர்ஸ் | 275.00 |
| சிலோன லெதர் புறடக்ஸ் | 14.00 |
| குறைவு(Top 5 losers) - விலை | Rs. |
| இன்டஸ்றியல் அஸ்பர்ஸ் | 382.00 |
| ஹேய்லீஸ் எக்ஸ்போட்ஸ் | 44.00 |
| கஸ்ரெர்னர் | 251.00 |
| அமாயா லெஷர் | 115.00 |
| பைன்லேஸ் கொழும்பு | 260.00 |

மேலதிக தகவல்கள்- www.cse.lk

# போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசே சர்வதேசத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்

## இந்திய நிலைப்பாடு குறித்து நிருபமா ராவ்

புதுடில்லி, ஜூலை 6

ஐ.நா. நிபுணர் குழுவால் வெளியிடப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தமது நிலைப்பாடு என்ன என்பதை இலங்கை அரசே சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்த வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் இந்தியா, 13 ஆவது திருத்தம் தொடர்பாகவும் இலங்கை இறுதி முடிவை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்திருக்கின்றது.

இந்தியாவின் புதுடில்லிக்கு இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளிலிருந்து விஜயம் செய்துள்ள பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மத்தியில் நேற்று உரையாற்றிய போதே இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டால் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஏதாவது எடுக்கப்படும் பட்சத்தில் இலங்கையைப் பாதுகாக்க இந் தியா முன்வருமா என இலங்கைப் பத்திரிகையாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே நிருபமா ராவ் இதனைத் தெரிவித்தார்.

புதுடில்லியில், சவுத் புளொக் எனப்படும் வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை மற்றும் மாலைதீவுடனான இந்தியாவின் உறவுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதில் இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் விஷ்ணு பிரசாத் மற்றும் ஹர்ஷ் சிறிங்லா ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் அண்டை நாடுகளான மாலைதீவு மற்றும் இலங்கையுடனான உறவுகள் முக்கியமானவை. அவற்றுடனான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை வலுப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாக நிருபமா ராவ் தெரிவித்தார்.

மறைமுக வேலைத்திட்டம் எதனையும் அடிப்படையாகக் கொண்டு இதற்கான செயற்பாடுகளை இந்தியா மேற்கொள்ளவில்லை. இலங்கையின் நலன் விரும்பியாகவே இந்தியா இருக்கின்றது என்றும் நிருபமா ராவ் மேலும் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடமைப்பு மற்றும் வடபகுதியில் இந்தியா மேற்கொள்ளும் திட்டங்களையும் அவர் அங்கு விளக்கினார். (ஒ)

# தேர்த்திருவிழா

புங்குடுதீவு மேற்கு, 4 ஆம் வட்டாரம், பிட்டியம்பதி காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

இந்த ஆலயத்தின் பெருந்திரு விழா கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(சிறப்பு மலர் B,C பக்கங்களில்)

(ற)

* * *

கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9.30 மணிக்கு தேர்த்திரு விழா இடம்பெறும்.

(சிறப்பு மலர் 18 ஆம் பக்கத்தில்)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய காம்யோற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் காம்யோற்சவ திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை கார்த்திகைத் திருவிழாவும், ஷண்முகார்ச்சனையும் இடம்பெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் சனிக்கிழமை கீரிமலையில் கண்டகி தீர்த்தமும் இடம்பெறும். திருவிழா தினங்களில் தினமும் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை பூசை வழிபாடுகள் இடம் பெறும். (ற)

# காரைநகர் பிட்டியெல்லை கிராமத்துக்கு மின்சாரம்

காரைநகர், ஜூலை 6

காரைநகர், பிட்டியெல்லைக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் இருந்து 7 லட்சம் ரூபா பிட்டியெல்லை கிராம மின் விநியோகத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படாத இந்தக் கிராமத்துக்கு புதிதாக மின் இணைப்பைப் பெற்றுத் தருமாறு விடுத்த வேண்டுகோளை அடுத்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (த-250)

# ஐ.தே.க. சண்டே லீடருக்கு மாதாந்தம் வழங்கிய ரூ. 40 லட்சம் பணம் தேர்தல் விளம்பரத்துக்காகவே

## வெள்ளைக்கொடி விவகார வழக்கில் கரு ஜயசூரிய சாட்சியம்

கொழும்பு, ஜூலை 06

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விளம்பரத்துக்காகவே சண்டே லீடர் பத்திரிகை நிறுவனத்துக்கு மாதாந்தம் 40 லட்சம் ரூபாவை வழங்கியது. நிதி உதவியாக இத் தொகை வழங்கப் படவில்லை.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்று மேல்நீதி மன்றில் தெரிவித்தார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்றுக்காலை மேல் நீதிமன்றில் நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என். பி.பி. வராவெவ, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்றும் இரண்டாவது நாளாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய சாட்சியமளித்தார். பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி தொடர்ந்து குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டார்.

கே: சண்டே லீடரில் வெளிவந்த செய்தியைப் பார்த்தபின்னர் அது தொடர்பாக விளக்கம் கோரியதாக நேற்று (நேற்று முன்தினம்) நீதிமன்றில் நீங்கள் தெரிவித்திருந்தீர்கள்.

ப: ஆம்.

கே: அப்போது சரத் பொன்சேகா என்ன கூறினார்?

ப: தன்னால் கூறப்பட்ட விடயங்கள் இன்றி கூறப்படாத விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

கே: அன்றைய தினத்தின் மறுநாள் சரத் பொன்சேகாவின் காரியாலயத்துக்கு நீங்கள் சென்றீர்களா?

ப: வழமையாகத் தேர்தல் பிரசார நடவடிக்கை தொடர்பாக ஆராய்வதற்கு செல்வோம். அதுபோன்றே நான் அன்று சென்றேன்.

கே: காரியாலயத்தில் அவரைச் சந்தித்து என்ன விடயம் தொடர்பாகக் கலந்துரையாடினீர்கள்?

ப: பிரசாரக் கூட்டங்கள் தொடர்பாக அமைப்பாளர்களை வரவழைத்துக் கலந்துரையாடுவது தொடர்பாகக் கலந்துரையாடினேன்.

கே: சண்டே லீடர் பத்திரிகை தொடர்பாக எதுவும் பேசப்பட்டதா?

ப: பிரட்றிகா ஜான்ஸ் சரத் பொன்சேகாவைச் சந்தித்து பேசிக்கொண்டிருந்தார்.

கே: அப்பொழுது பிரட்றிகா ஜான்ஸின் முகம் எவ்வாறு இருந்தது?

ப: நான் அவர்கள் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்கவில்லை.

(இதனுடன் பிரதிவாதி சட்டத்தரணி தனது குறுக்கு விசாரணைகளை நிறைவுசெய்து பிரதி சொலிசிட்டர் ஜெனரல் புவனேக அலுவிகாரவுக்கு சந்தர்ப்பம் வழங்கினார்).

கே: 2009ஆம் ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையில் வெளிவந்த செய்தி குறித்து நீதிமன்றில் சாட்சியமளித்திருந்தீர்கள்.

ப: ஆம்.

கே: நீங்கள் இந்த விவகாரம் தொடர்பாக நேற்று (நேற்று முன்தினம்) வரை பொலிஸாரிடமோ அல்லது வேறு எங்கேயுமோ முறைப்பாடு செய்திருந்தீர்களா?

ப: இல்லை.

கே: கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா பொது வேட்பாளராகப் போட்டியிட்டார்.

ப: ஆம்.

கே: பிரதான எதிர்க்கட்சி என்ற வகையிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் என்ற வகையிலும் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்தீர்கள் என்றால் சரியா?

ப: முழுமூச்சாக ஆதரவு அளித்தோம்.

கே: சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பது தெடர்பாகக் கட்சியின் செயற்குழு தீர்மானித்திருந்ததா?

ப: ஆம்.

கே: சண்டே லீடர் பத்திரிகையின் உரிமையாளர் லால் விக்கிரமதுங்கவை உங்களுக்குத் தெரியுமா?

ப: தெரியும்.

கே: பிரட்றிகா ஜான்ஸ்?

ப: தெரியும்.

கே: கட்சியின் செயற்குழு எடுத்த முடிவுக்கு இணங்க 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பிரசார நடவடிக்கைக்காக சண்டே லீடர் பத்திரிகைக்கு பணம் வழங்கப்பட்டதா?

ப: விளம்பரம் செய்ய இத் தொகை வழங்கப்பட்டது.

கே: அவ்வாறு ஏனைய பத்திரிகை நிறுவனங்களுக்கும் பணம் கொடுக்கப்பட்டதா?

ப: வேறு கட்சிகளும் பிரசாரங்களை மேற்கொண்டன.

கே: இந்தத் தொகையானது பத்திரிகைக்கு மாதாந்தம் 40 லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது என்றால் சரியா?

ப: இல்லை.

கே: அச்செய்தியால் சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசாரத்துக்கு எவ்வாறாபாதிப்பு ஏற்பட்டது.

கே: இந்தச் செய்தியை ஏன் வெளியிட்டீர்கள் என்று பிரட்றிகா ஜான்ஸிடம் வினவினீர்களா?

ப: இல்லை.

கே: பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு இந்த விடயம் தொடர்பாக முறையிட்டுள்ளீர்களா?

ப: இல்லை.

இதனையடுத்து கரு ஜயசூரியவின் சாட்சியம் முடிவுற்றது. அத்துடன் முன்னாள் பேராசிரியர் ஏஷ்லி அலபே சாட்சியமளித்தார்.

சண்டே லீடரில் வெளிவந்த பத்திரிகையின் முதலாவது பக்கத்திலுள்ள செய்தியிலுள்ள Shot மற்றும் Kill ஆகிய இரண்டு சொற்கள் தொடர்பாக விளக்கமளித்தார். இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-சி)

# நவோதய நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 6

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலையின் நவோதய வார இறுதிநாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய அழகியற் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி இன்பமலர் பரமலிங்கம் கலந்துகொள்வார். (ற-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோலிய அமைச்சின் செயலாளர் இராஜினாமா

பெற்றோலிய வள அமைச்சின் செயலாளர் டைட்டஸ் ஜயவர்தன நேற்றுத் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். ஓய்வுபெறுவதற்கு முன்பாக விடுமுறைக்கு அவர் விண்ணப்பித்துள்ளார்.

அவரின் ராஜினாமா கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மற்றொரு தகவல் வெளிவந்தது.

பெற்றோலிய வள அமைச்சு எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனங்களுக்கு இலக்காகியுள்ள நிலையில் இவரது இராஜினாமா அறிவிப்பு வெளிவந்துள்ளது. (ஒ-10)

# இலங்கைக் கடற்படையினருடன் சேர்ந்து சீனப் படையினர் செயற்படுகின்றனரா?

## இந்திய அதிகாரிகள் விசாரிப்பதாகத் தகவல்

இலங்கையின் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் போது இலங்கை கடற்படையினருடன் சீன வீரர்களும் இருந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அண்மையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களே இதனை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாக கூறப்பட்ட 14 தமிழக மீனவர்களும் இலங்கை கடற்படையினருடன் சீன வீரர்கள் இருந்தனர் என்று கூறுகின்றனர் என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தமிழக கியூ பிரிவு, கரையோரக் காவல் படையினர் மற்றும் மத்திய அரசின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அண்மையில் இலங்கையால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு சீன வீரர்கள் கச்சதீவில் முகாமிட்டிருப்பதை கண்டதாக அங்கு சென்று திரும்பிய தமிழக மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் சீன வீரர்கள் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து தமிழக எல்லை பகுதி மற்றும் பாதுகாப்பு குறித்து கண்காணித்து வருகின்றனரா என்ற சந்தேகம் இந்திய பாதுகாப்புத் தரப்புக்கு ஏற்பட்டுள்ளதாகக்கூறப்படுகின்றது. (ஒ-10)

# கொழும்பு பஸ் நிலையத்தில் விரைவில் தமிழ்மொழியிலும் இனி அறிவித்தல்கள்

## போக்குவரத்துச் சபைத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 06

தமிழ் பயணிகளின் வசதிக்காக கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் மக்கள் தொடர்பான அறிவித்தல்களை மும்மொழிகளிலும் வழங்குவதற்கு இன்னும் ஒரு மாத காலத்துக்குள் தொலைக்காட்சி சேவை ஒன்று ஆரம்பிக்கப்படும்.

- இவ்வாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் எம்.டி. பந்துசேன நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து வடக்கு, கிழக்கு உட்பட தூர இடங்களுக்குச் செல்லும் மக்கள் தொடர்பான அறிவித்தல்கள் தனிச் சிங்களத்தில் இடம்பெறுகின்றன எனத் தமிழ் மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் பந்துசேனவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

பயணிகளின் நலன்கருதி நாம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். மத்திய பஸ் நிலைய அலுவலகத்திலுள்ள எமது பிரதான அலுவலகத்தில் தமிழ்மொழி தெரிந்த அதிகாரிகள் உள்ளனர். எனவே, தமிழ் மக்கள் அவர்களிடம் சென்று தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இன்னும் சில நாள்களில் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட அறிவித்தல் பலகைகள் பஸ் நிலையத்தில் பொருத்தப்படும். அதுமட்டுமின்றி ஸ்ரிக்கர்களும் காட்சிப்படுத்தப்படும்.

அதேவேளை, மக்கள் புறப்படும் நேரம், டிக்கெட்டுகள் தொடர்பான தகவல்கள் உட்படப் பல்வேறு அறிவித்தல்களை வழங்குவதற்கு தொலைக்காட்சிச் சேவை ஒன்றையும் இன்னும் ஒருமாத காலத்துக்குள் ஆரம்பிக்க உள்ளோம் - என்றார். (சி)

## வெள்ளைக்கொடி விவகார வழக்கு: பிரதிவாதிகளின் சாட்சியங்கள் முடிவு

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் பிரதிவாதி சார்பிலான அனைத்து சாட்சியங்களும் நேற்றுடன் நிறைவுபெற்றன.

இந்த வழக்கு மேல் நீதிமன்றில் மூவரடங்கிய நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரதிவாதி தரப்புச் சாட்சிகளில் ஒருவரான ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்று சாட்சியமளித்தார்.

அத்துடன், பிரதிவாதி தரப்பு சாட்சிகளில் இறுதி சாட்சியான சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் ரய்ஷா விக்ரமதுங்கவின் சாட்சியம் அவசியமில்லை என்று பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவ ஹெட்டி நீதியரசர்களிடம் கூறினார்.

இந்த நிலையில், எதிர்வரும் 25ஆம் திகதி மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றையதினம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இணையச் செய்திகள்



இலங்கையின் 33ஆவது பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்றுக்கொண்ட என்.கே.இலங்கக்கோன் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கண்டியிலுள்ள ஜனாதிபதி இல்லத்தில் சந்தித்தார். அதன்போது பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்குகிறார்.

## காலி மேயர் பதவி நீக்கம்

கொழும்பு, ஜூலை 6

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த காலி மாநகரசபை மேயர் மெத்சிறி டி சில்வாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து, உடனடியாக அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா விடுத்துள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி மாநகர சபையின் மேயர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாநகர சபையின் பிரதி மேயர் மொஹமட் ஹுசைன் ரியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

# தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதிக்கான பொறுப்பை ஏற்று அமைச்சர் பதவி விலகவேண்டும்

## ஐ.தே. கட்சி கோரிக்கை



கொழும்பு, ஜூலை 06

தரம்குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்ததற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவி விலக வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தரம்குறைவான பெற்றோலினால் வாகனங்கள் பழுதடைந்துள்ளன என்பதை நிரூபித்தால் தாம் பதவியிலிருந்து விலகுவதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கடந்த மாதம் 30ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், தரம் குறைந்த பெற்றோலியப் பாவனையால் பல வாகனங்கள் பழுதடைந்துள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் பதவியிலிருந்து அமைச்சர் விலகுவது தொடர்பாக நாட்டு மக்களுக்கு அவர் தெளிவாக அறிவிக்கவேண்டும்.

பெற்றோல் களஞ்சிய தாங்கிகளில் தேங்கி நிற்கும் கழிவுப் பொருள்களினால் பெற்றோலின் தரத்தில் சிறிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துவரும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அதற்கான பொறுப்பை ஏற்காமல் நழுவப் பார்க்கின்றார்.

தரம்குறைந்த பெற்றோல் காரணமாக பல வாகனங்கள் பழுதடைந்துள்ளன. பலருக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், பெற்றோல் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கவேண்டிய பணத்தை வழங்கவேண்டாம் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பணித்துள்ளார். இந்த நடவடிக்கையானது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எடுக்கப்பட்ட தந்திரோபாய முயற்சியாகும்.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். அத்தோடு, தரங்குறைந்த பெற்றோல் இறக்குமதியுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கூட்டுறவுத் தின விழாவில் சங்க உறுப்பினர்களுக்கு வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

சர்வதேச கூட்டுறவுத் தின விழாவில் வசதி குறைந்த கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு வீடுகள் அமைத்து கையளிக் கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த விழா கடந்த 2ஆம் திகதி குருநாகல் மாவட் டத்தில் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறி சேன தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட கூட்டுறவுத் உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன. யாழ். மாவட்டத்தில் 4 கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள சங்கங்களாக பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம் ஆகிய சங்க உறுப்பினர் நால்வருக்கு வீடுகள் வழங்கப்பட்டன.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 வீடுகளும் வவுனியா மாவட்டத்தில் 6 வீடுகள் வட மாகாணத்தில் மொத்தமாக 12 வீடுகள் அமைத்து கூட்டுறவாளர்களுக்கு கையளிக்கப்பட்டன.

ஒவ்வொரு வீடுகளும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதிக்கு குறையாத வீடுகளாக அமைக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் ஆகியோரின் ஆலோசனைகளின் அடிப்படையிலேயே இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட சங்க உத்தியோகத்தர்கள் காணி ஒவ்வொன்றும் தமக்கு உரியன என உறுதிப் படுத்தப்பட்ட பின்னரே அந்தக் காணிகளில் வீடுகள் அமைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவுத், இலங்கை தேசிய கூட்டுறவுச் சங்கத் தலைவர் பந்துரணவக்க, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிரிசேன ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-311)

# பருத்தித்துறை - ஆழியவளை பஸ்சேவை நேர அட்டவணை

யாழ்ப்பாணம்,ஜூலை 6

பருத்தித்துறை - ஆழியவளைப் போக்குவரத்துக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இ.போ.ச. பருத்தித்துறைச்சாலை பொது முகாமையாளர் குகபாலச்செல்வம் இந்த நேர அட்டவணையை அறிவித்துள்ளார்.

அதன்படி, பருத்தித்துறையிலிருந்து ஆழியவளை வரையும் 6 தடவைகள் பஸ்போக்குவரத்து இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 6.30 மணி, 8.30 மணி, 10.30 மணி, பிற்பகல் 12.30 மணி, பிற்பகல் 3.00 மணி, மாலை 5.00 மணி என 6 தடவைகள் போக்குவரத்து இடம்பெறவுள்ளது. மாலை 5.00 மணிக்குப் புறப்படும் இறுதி பஸ் ஆழியவளையில் இரவு தரித்து நிற்கும்.

அதேபோல ஆழியவளையில் இருந்து பருத்தித்துறை நோக்கியும் தினமும் 6 தடவைகள் பஸ் போக்குவரத்து இடம்பெறவுள்ளன. காலை 6.30 மணி, காலை 8.30 மணி, முற்பகல் 10.30 மணி, பிற்பகல் 1.00 மணி, பிற்பகல் 3.00 மணி, மாலை 5.00 மணி என்ற அட்டவணையில் இந்தச் சேவை இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை - ஆழியவளை, ஆழியவளை - பருத்தித்துறை ஆகிய இரண்டு மார்க்கங்களிலும் 12 தடவைகள் இவ்வாறு பஸ் போக்குவரத்து இடம் பெறவுள்ளது. இந்தச் சேவைகள் இரண்டு பஸ்களைப் பயன்படுத்தியே நடைபெறவுள்ளன.

இந்த நேர அட்டவணை இன்று புதன்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது-என்றார். (த-14)

# றோட்டறக்ட் கழகத்தின் சுருதி-5 சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 6

சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் சுருதி-5 சஞ்சிகை வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் தலைவர் எஸ்.சபேசன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் எஸ்.சங்கர் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக ரில்கோ ஹொட்டல் நிர்வாக முகாமையாளர் ரி.தியாகராஜாவும், கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர் லயன் என். சண்முகவேலும், உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையின் அதிபர் ஐ.விஜயேந்திரனும் பங்குபற்றவுள்ளனர். (ற)

# மணி விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 6

தென்மராட்சியின் மூத்த தமிழாசிரியரும் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளருமான க.தர்மராசாவின் மணிவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியரின் பழைய மாணவர்களையும் ஆர்வலர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ற)

# கோப்பாயில் நாளை கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 6

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை கணித விஞ்ஞானக் கல்விக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜேந்திரசர்மா மற்றும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் ஐ.சுரேஷ்கரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ஒ-323)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 764 திகதி 04-07-2011

வெற்றி எண்கள்

22 32 43 58 G (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 16,511,830/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 16,511,830/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 18 | 50,000/= | 900,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 356 | 1,000/= | 356,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 633 | 1,000/= | 633,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15660 | 60/= | 939,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8057 | 40/= | 322,280/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 205339 | 20/= | 4,106,780/= |
| ஆங்கில எழுத்து | 29899 | 20/= | 597,980/= |
| | | மொத்தம் ரூ. 8,255,640/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 600285492-5-05 |
| திருகோணமலை | 600296237-0-40 |
| களுத்துறை | 600284118-4-44 |
| அம்பாந்தோட்டை | 600285060-6-36 |
| கம்பஹா | 600297662-5-15 |
| மாத்தறை | 600284451-7-27 |
| கொழும்பு | 600289079-4-14 |
| கம்பஹா | 600298383-2-12 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,655,640/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 16,913,350/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஜூலை 07 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02

தொ.பே: 2333546/7

Enriching Your Life

Development Lottery



**மணப் பெண் தேவை**

சுண்டுக்குளியை வசிப்பிடமாகக் கொண்ட பெற்றோர் இலங்கையில் தொழில் செய்யும் 1981 இல் பிறந்த MBBS டாக்டருக்கும் 1983 இல் பிறந்த சிவில் பொறியியலாளருக்கும் டாக்டர்,எஞ்ஜினியர், பெண்களை எதிர் பார்க்கின்றனர். சமயம் R.c

தொடர்பு: 0213219124
0772850795



**SHAMROCK(Ja)**

ENGLISH ESSENTIAL
* GEN.ENGLISH-A/L
G.RANGIT, HNDE
M.KINGSTAN,B.A.
* Gr10,11 ENG.SPOKEN & LIT.
K.JEYAKUMAR B.A.
* Gr. 6 to 9 & O/L REPEAT
A.THIYANAMUTHU. (ENG.TEACHER-COLLEGE)
* Gr. 6 To 11 ENG. MED.



**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இரும்புக் கடைக்கு அனுபவமுள்ள காசாளர், கணக்காளர் விற்பனையாளர் தேவை.
(வயது 30- 50) விரும்பத்தக்கது.
தொடர்பு: 0777773975



**தேவை**

* சாரதி
* கணக்காளர் (ஆண், பெண்)
* அலுவலக மேற்பார்வையாளர் (ஆண், பெண்)

தொடர்புகளுக்கு: Elephant House
நடமாடும் சேவை
இல.56, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0779910154



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 22 ★ 11 ★ 1930



மறைவு 06 ★ 06 ★ 2011

அமரர் கந்தையா கனகரட்ணம்

(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி, இலங்கை இராணுவம்)

கடந்த 06.06.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.07.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நெல்லை முருகன் திருமணமண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தும் மலர்வளையங்கள் வைத்தும் இறுதிச்சடங்கில் அஞ்சலி செலுத்தியும் பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

[illegible] வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (5503) குடும்பத்தினர்-



**தேவை**

அனுபவமுள்ள/ அனுபவமற்ற பெண்களும் 40 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும் தேவை. நேரில் வரவும்.

லைடன் புடைவை நிலையம்
இல.410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2381



**மணமகள் தேவை**

யாழ்.RC கௌரவ குடும்பம், 1978 கார்த்திகை 3 ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய், கிரகபாவம் 28½, U.K பிரஜாவுரிமை மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:0777111041



**பிரபல தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குப் பின்வரும் பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவை**

தமிழ் - தரம், 6-8,
கணிதம் - தரம், 6-8,
விஞ்ஞானம் - தரம், 6-11
ஆங்கிலம் - தரம், 6-8
புவியியல், குடியுரிமை, சித்திரம்- தரம்,6-9

அத்துடன் புலமைப் பரிசில் பரீட்சை வினா, விடைத்தாள்கள் தயாரிக்கக்கூடிய நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும் தேவை. தகுதியுடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0778578737


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வரவேற்புக்குரிய அரசின் மனமாற்றம்

**வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் மக்கள் இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறத் தேவையில்லை. இந்த நடைமுறை நீக்கப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

வெளிநாட்டுக் கடவுச் சிட்டை உடையவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வது போன்று, யாழ்ப்பாணத்துக்கும் வர முடியும். யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதி வழங்குவதற்கெனப் பாதுகாப்பு அமைச்சில் இயங்கிய விசேட பிரிவும் நேற்று முன்தினம் திங்கட்கிழமையுடன் மூடப்பட்டுவிட்டது.

அரசாங்கத்தின் இந்த முடிவும் அதன் செயற்பாடும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி வடக்கிலுள்ள அவர்களின் உறவுகளுக்கும் இனிப்பான செய்தியாகும்.

நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலிருந்து வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் தொண்ணூறு சதவீத மானோர் சொகுசு வாழ்க்கையை நாடி அங்கு சென்றவர்கள் அல்லர். எண்பதுகளின் முற்பகுதியில் வடக்கில் பெரியளவிலும் கிழக்கிலும் அப்போதைய அரசுகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளால் - ஆரம்பத்தில் பொலிஸாராலும் பின்னர் இராணுவம் மற்றும் கடற்படையினராலும் ஏவப்பட்ட ஜனநாயக விரோத ஒடுக்குமுறை நடவடிக்கைகளால் - இங்கு உயிர்வாழ முடியாது என்ற அச்சத்தினாலேயே வெளிநாடுகளுக்கு பெரும் பணச் செலவில் புலம்பெயர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அவ்வாறு தப்பியதாலேயே உயிருக்கு எப்போது என்ன நடக்கும் என்ற அச்ச நிலையைத் தாண்டி, மனிதாபிமான நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும் வெளிநாடுகளில், அவற்றின் அரசுகளின் தயவினால் புலம்பெயர் மக்களாக, அகதிகளாகப் பல வருடங்களாக வாழ முடிகிறது. மகிழ்ச்சியோடு இல்லாவிட்டாலும் மனிதர்களுக்குரிய அடிப்படைச் சுதந்திரங்களுடன் நிம்மதியாக வாழ்கிறார்கள்.

நீண்ட நெடு வருடங்களாக தமது பிறந்த மண்ணைப் பிரிந்து, அகதிகளாக வாழ்ந்தவர்களில் மிகப் பெரும் எண்ணிக்கையானோர் தாம் சென்றடைந்த நாடுகளின் பிரசைகளாக மாறிவிட்டனர். எனினும் அவர்கள் சொந்த நாட்டுக்கு வந்து தமது முந்திய சொந்த வீட்டைப் பார்க்க வேண்டும், பல வருடங்களாகப் பிரிந்திருந்த உறவுகளு டன் நேருக்குநேர் பேச வேண்டும் என்ற ஆவலும் ஆர்வமும் கொள்வது இயல்பே. சொர்க்கமே ஆனாலும் அது நம் சொந்த ஊர் போல் வருமா? எந்நாடு ஆனாலும் அது நம்நாட்டுக்கு ஈடா குமா? என்ற மனதுடன் புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு வரத்தொடங்கியுள்ளனர்.

சொந்த நாட்டில் சமாதானம் பிறந்து விட்டது, அமைதி தோன்றி விட்டது என்ற சூழ் நிலையில் புலம்பெயர் தமிழர்கள் பலரும் யாழ்ப்பாணத்துக்கு வரத்தொடங்கினர். அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் பயண அனுமதியும் வழங்கின. அப்போது தெரிவிக்கப்படாத, முன்னறிவித்தல் தரப்படாத பாதகமான நடைமுறையை புலம்பெயர் தமிழர்கள் கடந்த சுமார் ஒரு வருட காலத்துக்கு எதிர்கொள்ள நேர்ந்தது.

கொழும்பில் வந்திறங்கியதும், வெளிநாட்டுக் கடவுச் சீட்டைக் கொண்டிருப்போர், பாதுகாப்பு அமைச்சில் அனுமதி பெற்றாக வேண்டும். அந்த விசேட அனுமதி பெறாதவர்கள் ஓமந்தைக்கு இப்பால் வரமுடியாது; பயணம் செய்ய முடியாது என்ற கட்டுப்பாடு நேற்று முன்தினம் வரை நடைமுறையில் இருந்தது.

அதனால், தமது உறவுகளின் மரணச் சடங்குகளுக்கும், நோயுற்று உயிராபத்திலுள்ள மூப்படைந்த பெற்றோரை இறுதி நேரத்திலாவது பார்த்து விடுவோம் என்ற பாசத்துடனும் வந்தவர்கள், பாதுகாப்பு அமைச்சின் விசேட அனுமதி பெறவில்லை என்ற காரணத்தினால் ஓமந்தையில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்ட மனித நேயமற்ற சம்பவங்கள் பலவும் இடம்பெற்றன.

நீ, வடக்கைச் சேர்ந்தவனா, வெளிநாட்டுக் கடவுச் சீட்டுடன் வந்தாலும், எந்தக் கொம்பனாக இருந்தாலும் ஓமந்தைக்கு அப்பால் செல்ல முடியாது என்ற மனிதநேயமற்ற தடை. அவ்வாறு செல்வதற்கு விசேட அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனை.

அந்த நிபந்தனையால் யாழ்ப்பாணத்தில் பிறந்த புலம்பெயர்ந்த மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் தமது பெற்றோரின் மரணச் சடங்குகளுக்குக் கூட வரமுடியவில்லை. சமாதானமும் அமைதியும் பிறந்துவிட்ட ஒரு நாட்டில் இத்தகைய நடைமுறை தேவைதானா என்று பல தரப்புகளும் ஆட்சேபமும் கண்டனமும் தெரிவித்திருந்தன.

சமாதானம் வந்துவிட்டது என்று வாய் ஓயாமல் கத்திக்கொண்டு, புலம்பெயர் தமிழர்கள் தமது சொந்த மண்ணுக்கு வருவதற்கு மறைமுகத் தடை உத்தரவு போடுவது சுத்த அராஜகம். (இதனை, என்று மாறும் இந்தச் சந்தேகப் போக்கு? என்ற தலைப்பில் கடந்த மே மாதம் ஏழாம் திகதியன்று இதே பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம்) இப்போது அரசு புத்தி தெளிந்து, மனம் மாறி புலம்பெயர் நாடுகளில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு வழிவிட்டிருப்பதை இங்கு வாழும் அவர்களின் இரத்தத்தின் இரத்தங்களின் பாச உணர்வுடன் பாராட்டுகிறோம்; வரவேற்கிறோம்.

## வட மாகாணத்தில் 11 சங்கங்கள் சிறந்த நிறுவனங்களாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

கூட்டுறவுத் தின விழாவை முன்னிட்டு மாகாண ரீதியாக நடத்தப்பட்ட நிகழ்வில் வட மாகாணத்தில் 11 சங்கங்கள் சிறந்த முதன்மையான கூட்டுறவு நிறுவனங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களுக்குக் கடந்த வாரம் குருநாகலில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவுத் தின விழாவில் பணப் பரிசும் கேடயங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வட மாகாணத்தில் சிறந்தவையாகத் தெரிவு செய்யப்பட்ட 11 சங்கங்களில் 10 யாழ். மாவட்டத்தையும், ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தையும் சேர்ந்தவை.

முதன்மையான சங்கங்களாகத் தெரிவு செய்யப்பட்டவற்றின் விவரம் வருமாறு:

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (சிறந்த கூட்டுறவு நகர்), யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை, யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட பாரவூர்தி கூட்டுறவுச் சங்கம், கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மாவைக் கந்தன் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம், அளவெட்டி வடக்கு மகளிர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம், துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (சிறிய சிறப்புக் கூட்டுறவு நகர்). (த-26)

## வடக்கில் அபிவிருத்தியை விரும்பாதவர்கள் இலங்கை அரசுக்கு எதிராகப் பொய்ப்பிரசாரம்

### அமைச்சர் கஜதீரவின் கண்டுபிடிப்பு இது

வவுனியா, ஜூலை 6

வடக்கில் அபிவிருத்தியை விரும்பாத சக்திகள் பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர். இதேபோன்று இந்தியா, தென்னிலங்கையில் மேற்கொள்ளும் அபிவிருத்திக்கு எதிராக பொய்ப் பிரசாரங்களை அங்குள்ள சக்திகள் மேற்கொள்கின்றன.

இந்தச் சக்திகளின் வலைகளுக்குள் சிக்கி விடாதீர்கள். வடக்கின் வசந்தம் அபிவிருத்திப் பணிகளில் இணைந்து நாட்டை வளமாக்குங்கள். சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மேற்கண்டவாறு ஆலோசனை கூறியுள்ளார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் வைத்து 552 முன்னாள் போராளிகளை விடுதலைசெய்து இந்த ஆலோசனையையும் வழங்கினார் அமைச்சர். அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

புணர்வாழ்வு பெற்ற பலர் விடுதலை பெற விரும்பவில்லை. முகாம்களில் தங்கியிருக்கவே விரும்புகிறார்கள். எனினும் மனைவி, உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காகவே செல்கிறார்கள்.

சந்தோஷமாக பல்வேறு பயிற்சிகளை அவர்கள் பெற்றுள்ளனர். கிரிக்கெட் போட்டியில் பங்கேற்று தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். கலாசார நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்தனர். தமது பங்களிப்பையும் அவர்கள் வழங்கினார்கள்.

புனர்வாழ்வு முகாமில் பெற்ற பயிற்சிகளை முறைப்படி வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த வேண்டும். வடக்கின் வசந்தம் அபிவிருத்திப் பணிகளில் இணைந்து நாட்டையும், உங்கள் வாழ்க்கையையும் வளமாக்க வேண்டும். இப்போது நல்ல வாய்ப்புக் கிட்டியுள்ளது. தவறான பாதையில் செல்லாது அபிவிருத்தியில் இணையுங்கள் - என்றார் அமைச்சர். (ஐ)

## சர்வதேச அபிவிருத்தி நிறுவன உதவியுடன் யாழ். மாவட்டத்தில் முதலில் 6 திட்டங்கள்

### பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை அரசினால் இதற்காக சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து வடக்கின் துரித மீட்சித் திட்டச் செலவினத்துக்காக கடன் பெறப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியினை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 6 திட்டங்களுக்கு அரசு ஒதுக்கியுள்ளது. மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட தெல்லிப்ழை பிரதேசத்தில் தபால் நிலையம், பஸ் நிலையம், சந்தைக் கட்டடம் என்பனவற்றை நிர்மாணிப்பதற்கு 26 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரசபை கட்டடம் நிர்மாணிப்பதற்கு 42.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய வகுப்பறை திருத்தங்களுக்காக 8.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வடமராட்சி வயலக் கல்விப் பணிமனையின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக 22.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீரிமலையில் கமநல கேந்திர நிலையம் அமைப்பதற்காக 9.06 மில்லியன் ரூபா நிதியும், அரியாலை ஜி.ரி.எம்.எஸ். பாடசாலையின் வகுப்பறைக் கட்டடம் அமைப்பதற்காக 8.5 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைகள் அனைத்தும் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-15)

## "ஆதி மாவை கந்தனே அனைத்துயிரும் காத்திடவே அம்பிகை பாலா கொடியேற்று"



அகங்காரம் நீங்கிடவே அயன் தனை சிறைவைத்த
அருள் முருகா கொடியேற்று
ஆதி மாவை கந்தனே அனைத்துயிரும் காத்திடவே
அம்பிகைபாலா கொடியேற்று
மா முகத்தை நீக்கியவா மாருதப்புரவீகவல்லி பேற்றியவா
மால் மருகா கொடியேற்று
சிங்கார மயிலேறும் பெருமானெம் குருநாதா
சிவ சுப்பிரமணியா கொடியேற்று
சீருடனே வேலேந்தி அசுரர் படையோட்டி
தேவர் சிறை மீட்டவனே கொடியேற்று
சாந்தி சமாதானம் சர்வமெங்கும் நிலவ
சங்கரனார் மைந்தா கொடியேற்று

தொல்புரத்தூர்: க. லோகேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனல் - 4 தொலைக்காட்சிக்கு எதிராக குடாநாட்டிலும் ஆதரவு திரட்ட முயற்சி

## சமாதான நீதிவான்கள் கூட்டத்தில் இந்தக் கைங்கரியம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

இறுதிப்போரில் இடம் பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக அரசுக்கு சர்வதேச அழுத்தம் அதிகரித்து வரும் நிலையில் யுத்தக்குற்றம் தொடர்பான வீடியோ ஆவணங்களை வெளியிட்ட சனல் -4 தொலைக்காட்சிக்கு எதிரான பிரசாரத்தை அரசு யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சில நிழ்வுகளை அரசு இதற்காகப் பயன்படுத்திக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கை சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் பேராசிரியர ஜயந்த களுபோவில, சனல் - 4 தொலைக்காட்சிக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஆதரவைப் பெறும் வகையில் உரையாற்றியுள்ளார்.

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்டப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜயந்த களுபோவில இந்த ஆதரவைக் கோரினார். எனினும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அவரது கோரிக்கைக்கு எவ்வித பதிலையும் வழங்கவில்லை எனத் தெரியவருகிறது.

இந்தக் கூட்டம் யாழ்.கடற்கரை வீதியில் உள்ள பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய களுபோவில, சனல் -4 காணொளியில் காண்பிக்கப்பட்டவை அனைத்தும் போலியானவை எனக் குறிப்பிட்டார். அதுமட்டுமன்றி அந்த வீடியோ மூலம் இலங்கை அரசுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் எனவே அதற்கு எதிராக மக்களின் ஆதரவு தேவை எனவும் கோரிக்கை விடுத்தார்.

பேராசிரியர் ஜயந்த களுபோவிலவின் உரையானது நிகழ்வுக்கு வந்திருந்தவர்களுக்குப் பெரும் தர்மசங்கடத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும்; எனினும், அங்கிருந்த மக்கள் எவ்வித பதிலையும் வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-14)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். கல்வி வலயத்தின் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் செல்வி மலர் சின்னையா உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுக்காலை ஆரம்பித்தார். எனினும் மதியவேளை அவ்விடத்துக்கு வந்து பொலிஸாரினால் அவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபராகக் கடமையாற்றிய செல்வி மலர் சின்னையா, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இவர் நேற்றுக் காலை முதல் யாழ். கல்வி வலயப் பணிமனை அமைந்துள்ள செம்மணி வீதியில் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தன்னிடமிருந்து நியாயமற்ற வகையில் அதிபர் பதவி பறிக்கப்பட்டதாகவும், தனக்கு 9 மாதச் சம்பளம் வழங்கப்படவில்லையென்றும் மீண்டும் அதிபர் பதவி வழங்கக்கோரியும் அவர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

காலை 9 மணியளவில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் இவருடன் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் மீண்டும் அவர் தனது உண்ணாவிரத்தை தொடர்ந்து மேற்கொண்டார்.

மதியவேளை அங்கு வந்த பொலிஸார்,பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் அரச ஊழியர் உண்ணாவிரதம் இருப்பது சட்டத்துக்கு முரணானது என்று தெரிவித்து தன்னை வெளியேற்றியதாக மலர் சின்னையா தெரிவித்தார். (த-15-288)

# அரியாலை கிழக்குப் பகுதியில் தபால் சேகரிப்புப் பெட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

அரியாலை கிழக்கில் மீளக் குடியமர்ந்த மக்களின் தபால் சேவை வசதி கருதி அந்தப் பகுதியில் தபால் சேகரிப்பு பெட்டிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மணியந்தோட்டம், பூம்புகார், தாளையடி ஆகிய இடங்களில் உள்ள மக்களின் தபால் சேகரிப்புத் தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருவதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் தமது தபால்களைச் சேர்ப்பதற்குத் துறைமுகச் சந்திக்கே வரவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## கைகொடுப்போம்...



நல்மனதுடன்: கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மாற்றுவலுவுள்ள ஒருவருக்கு சக்கரநாற்காலி ஒன்றை அன்பளிப்பாக வழங்குகிறார். (த-121)

# ஆவணங்கள் எதுவுமின்றி 'மப்பில்' வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

வாகனத்துக்கான உடைமைகள் எதுவுமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய வேலணை வாசிக்கு யாழ்.நீதிமன்றம் 14 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

வேலணையில் இருந்து தனது மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது இவர் யாழ்.போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரணை செய்த யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா சாரதி அனுமதிப் பத்திரமின்மைக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும், காப்புறுதிப் பத்திரமின்மைக்கு 5 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்கு 6 ஆயிரம் ரூபாவும், வருமானப் பத்திரமின்மைக்கு 500 ரூபாவும் அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (த-9)

# காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் திருட்டு

காரைநகர், ஜூலை 6

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் இரவு வேளை உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டதுடன் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் உடைமைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இது தொடர்பாக பாடசாலை அதிபர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் முறையிட்டதை அடுத்து அவர்கள் பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

மாணவர்களின் மதிய உணவுக்காக வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகள், தேங்காய் எண்ணெய் பரல்கள் என்பன சேதமாக்கப்பட்டு நிலத்தில் வீசப்பட்டுள்ளதுடன் அதிபரின் அலுவலகம், புத்தக அலுமாரிகள் திறக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் சிதைத்து வீசப்பட்டுள்ளன.

இவ்வாறு பாடசாலை உடைமைகள் பல சேதமாக்கப்பட்டுள்ளதுடன் தொலைபேசி உள்ளிட்ட பல பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைக்கு முன்பாக உள்ள ஆலயத்தில் இரவு வேள்ளைகளில் பெருந்திருவிழா இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-250)

# யாழ்.சிறையில் 98 வீதமானோர் 27 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்

## கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் கைதிகளின் எண்ணிக்கையும் குறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.சிறைச்சாலைக்கு வரும் கைதிகளின் எண்ணிக்கை கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் குறைவடைந்துள்ளது. எனினும், அங்கு வரும் கைதிகளில் 98 வீதமானவர்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 27 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களாகவே உள்ளனர் என்று யாழ்.சிறைச்சாலை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தமை வருமாறு:

யாழ்.சிறைச்சாலையில் கைதிகளின் எண்ணிக்கை 2006 ஆம் ஆண்டில் 300 இற்கும் 350 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் காணப்பட்டது. புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல் ஆரம்பமானதைத் தொடர்ந்து 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து கைதிகளின் எண்ணிக்கை 500 வரை காணப்பட்டது. பின்னர் 2009 இல் 300 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் காணப்பட்டது.

கடந்த வருடம் சராசரியாக சுமார் 300 பேர் வரை சிறைச்சாலைக்கு வந்தனர். இந்த வருடம் 300 இற்கும் குறைவான கைதிகளே சிறைச்சாலையில் உள்ளனர். முன்னர் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்ததனால் இடப்பற்றாக்குறையும் நிலவியது. தற்போது எண்ணிக்கை குறைவடைந்தமையால் அந்தப் பிரச்சினை இல்லை.

சிறுகுற்றச் செயல்களில் ஈடுபட்டு தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் வழக்குகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளமையால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டும் வருகிறார்கள்.

இது தவிர சிறைச்சாலைக்கு செல்லும் கைதிகளில் 98 வீதமானவர்கள் 27 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக உள்ளனர். களவு, கொலை, பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு, ஆபாசப் படங்களை வைத்திருத்தல், வீதிகளில் நின்று பெண்களுடன் அங்கசேட்டையில் ஈடுபடுதல், போக்குவரத்தில் ஈடுபடுபவர்களுடன் வீதியில் நின்று இடையூறு விளைவித்தல் எனப் பல குற்றச்செயல்களிலும், சட்டவிரோத செயற்பாடுகளிலும் ஈடுபடுபவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் யாழ்.சிறைச்சாலைக்கு வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது களவு, கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 14 வயதுக்கு உட்பட்ட 15 சிறுவர்களும் யாழ் சிறைச்சாலையில் உள்ளனர். இவர்கள் பின்னர் உரிய அனுமதியின்படி சிறுவர் இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச்செயல்கள் பற்றியும் அதனால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வுகள் போதாமையே இதற்குக் காரணம் என்றன அந்த வட்டாரங்கள். (த-4-26)

# பௌதிகவியல் செயல்முறைப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 6

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்று ஆரம்பமாகியுள்ள ஜி.சீ.ஈ. உயர்தர (2011) மாணவர்களுக்கான செய்முறைப் பட்டறை இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறும்.

வலிகாமம் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்தச் செய்முறைப் பரீட்சையில் மாணவர்கள் பங்குபற்றி பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வாக்காளர் அட்டை நாளை முதல் விநியோகிக்கப்படும்

## வேட்பாளர் பட்டியலும் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 6
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்காக வாக்காளர் அட்டைகள் நாளை வியாழக்கிழமை முதல் விநியோகிக்கப்படும் என்று யாழ்.பிரதம தபாலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வாக்காளர் அட்டைகள் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல அஞ்சல் நிலையங்களுக்கும் நேற்று செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்காளர் அட்டைகளுடன் வேட்பாளர் பட்டியலும் சேர்த்து வழங்கப்படும்.

வாக்காளர் அட்டைகள் யாவும் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் விநியோகித்து முடிக்கப்படும்.

தொடர்ந்து 18 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை சகல அஞ்சல் நிலையங்களிலும் வைத்து இந்த வாக்காளர் அட்டைகளும் வேட்பாளர் பட்டியலும் உரியவர்களுக்கு வழங்கப்படும் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-26)

## புனரமைப்புப் பணிகள் எதுவுமின்றி

# கவனிப்பாரற்ற நிலையில் சுண்டுக்குழி உப தபாலகம்



கொழும்புத்துறை, ஜூலை 6
சுண்டுக்குழி உப தபாலகக் கட்டடத்தின் ஒரு பகுதி பல வருடங்களாகச் சேதமடைந்த நிலையில் புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது.

நாட்டின் அசாதாரண நிலைமைகளின் போது பாதிப்படைந்த கூரைப் பகுதி மற்றும் கட்டடங்கள் திருத்தம் செய்யப்படாமையால் மழை காலங்களில் தற்போது இயங்கி வரும் பகுதிக்குள்ளும் வெள்ளம் வழிந்தோடி பல அசௌகரியங்களை உருவாக்கும் நிலை காணப்படுகின்றது. இங்கு உள்ளக வசதிகளும் சிறந்த முறையில் அமைக்கப்படவில்லையெனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அண்மையில் உள்ள இந்தத் தபாலகத்தின் சேவையை தினமும் ஏராளமான மக்கள் நாடிவரும் நிலையில் இதை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்திகளிலும் கவனம் செலுத்தப்படும் இந்த வேளையில் பொதுமக்களின் தொடர்பாடலுக்கும் அரச கருமங்களைப் பரிமாறவும் உதவும் இந்தத் தபாலகத்தை இதுவரை யாரும் கவனிக்கவில்லையா எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்தத் தபாலகத்தைப் புனரமைக்க 2000 ஆம் ஆண்டில் நிதி வழங்கப்பட்டதாகவும் அதற்கான பணிகளை அப்போது மேற்கொள்ளாமையினால் அந்த நிதி ஒதுக்கீடு திரும்ப பெறப்பட்டதாகவும் கூறப்பட்டது. (த-135)

# வடமராட்சி கிழக்கில் குடியமர்ந்த 309 குடும்பங்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடமராட்சி கிழக்கில் மீள் குடியமர்த்தப்பட்ட 309 குடும்பங்களுக்கு நேற்று அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவல்லாத பொருள்களை வழங்கியுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 411 குடும்பங்களில் குடத்தனை திறந்த வெளி முகாமில் இருந்த 102 குடும்பங்களுக்கு ஏற்கனவே அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் உணவல்லாத பொருள்களை வழங்கியுள்ளதால் இராமாவில் நலன்புரி முகாமில் தங்கியிருந்த 309 குடும்பங்களுக்கும் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

முள்ளியான், போக்கறுப்பு, வெற்றிலைக்கேணி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இந்தக் குடும்பங்களுக்குத் தற்பொழுது சமைத்த உணவுகளை யாழ். மாவட்ட செயலகம் வழங்கி வருகிறது.

இந்தக் குடும்பங்களின் விவரங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து 'என்றிப்' திட்டத்தின் மூலம் அவர்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு சொந்தக் காணிகளில் குடியமர்த்தப்படவுள்ளதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-313)

# ஓலைக் குடிசை தீக்கிரையானது

கொழும்புத்துறை, ஜூலை 6
கொழும்புத்துறை எழிலூர் பகுதியில் மீளக்குடியமர்வதற்காக அமைக்கப்பட்ட ஓலைக் குடிசையொன்று கடந்தவாரம் விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள அரச காணிகளில் சட்ட பூர்வமற்ற முறையில் பல குடும்பங்கள் இடம்பெயர்வுக்கு முன்னரே வாழ்ந்து வந்தன. இவ்வாறு வசித்தவர்களிடையே ஏற்பட்ட காணி உரிமம் தொடர்பான முரண்பாடுகளே இந்தத் தீ வைப்புக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட வீட்டின் ,உரிமையாளர் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (த-135)

# வேட்பாளர் அடையாள அட்டை வழங்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
எதிரவரும் 23 ஆம்திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சயேட்சைக்குழுக்கள் ஆகியவற்றின் வேட்பாளர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட செயலகத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட 19 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் இந்த மாதம் 23 ஆம்திகதி இடம்பெறவுள்ளது.இதற்கான பணிகள் தேர்தல் திணைக்களத்தால் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2010 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்கு அமைவாக வாக்காளர் அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்து வாக்களர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாக தேர்தல் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளமுடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கான அடையாள அட்டைகளும் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மேலும் கூறினர்.(த-15)

## நன்றியுடன்...



பணி சிறக்க: ஆயர் தினவிழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் நன்றித் திருப்பலி நடைபெற்றது. இதில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சிறுமியர்களால் வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்றார். (த-23)

# நாணய வெளியீட்டுத் திணைக்கள உயரதிகாரிகள் யாழ். வருகின்றனர்

## போலி நாணயத்தாள் விழிப்புணர்வுக்காக

யாழ்ப்பாணம், ஜூலை 6
இலங்கை மத்திய வங்கியின் நாணய வெளியீட்டுத் திணைக்கள அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர், போலி நாணயத்தாள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுக்காக முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் இ.சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வட மாகாணத்தில் போலி நாணயத்தாளின் புழக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிலும் புதிய நாணயத்தாள்கள் தொடர்பாக மக்களிடத்தில் போதுமான விழிப்புணர்வு ஏற்படவில்லை. எனவே மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த விழிப்புணர்வுச் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மக்களின் பல்வேறு தரப்புக்களிடம் இந்த விழிப்புணர்வு தொடர்பான செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இதற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணய வெளியீட்டுத் திணைக்கள அத்தியட்சகர் சி.பி.ஏ. கருணாதிலக தலைமையிலான குழுவினர் யாழ். வருகை தரவுள்ளனர்.

நாளை மறுமதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இதில் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், மாகாணத் திணைக்களங்கள் ஆகியவற்லிருந்து இரண்டு பிதிநிதிகள் வீதம் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் முற்பகல் 11 .30 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான செயலமர்வும், பிற்பகல் 2.30 மணிமுதல் 4.30 மணிவரை யாழ்.பொது நூலகக்கேட்போர் கூடத்தில் மாவட்டத்தின்அனைத்துப் பொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சகல வங்கி உத்தியோகத்தர்களுக்கும், பிற்பகல் 2.30 மணிக்கு வர்த்தக சமூகத்தினர், சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு வங்கி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான செயலமர்வும் இடம்பெறவுள்ளது-. என்றார். (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
06 ஜூலை 2011 புதன்கிழமை

# அதிர்ச்சி தரும். போர்க்குற்றங்கள் ஐ.நாவின் மீள் விசாரணை அவசியம்

## ஆஸ்திரேலியா கோரிக்கை

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை மீள் விசாரணை நடத்த வேண்டும் என்ற ஆஸ்திரேலியா கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும்-

இந்த நிலையிலேயே இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக மீள் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஆஸ்திரேலிய வெளி விவகார அமைச்சர் கெவின் ரூட் கோரிக்கை விடுத்துள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்டுள்ள ஆவணப்படம் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் தொடர்பாக போதிய கவனம் செலுத்தி ஆராயவில்லை என்றே தான் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே இதுகுறித்து இன்னமும் ஆழமாக விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.



அத்துடன் ஆஸ்திரேலிய அரசின் சார்பில் ஜெனீவாவில் உள்ளதமது செயலகத்தின்ஊடாக தான், ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் இந்த விவகாரம் குறித்து மீள்விசாரணை செய்யுமாறு கோரப் போவதாகவும் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

காத்திருப்பு ஏனோ....



அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலில் கலப்படம் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிலையில் கொழும்பிலுள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்புவதற்காக நேற்றுமுன்தினம் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றன. (ச)

# கொழும்புக்கான சொகுசு கப்பல் சேவையை நிறுத்துமாறு தூத்துக்குடி ஆளுநருக்கு மனு

தூத்துக்குடி - கொழும்பு கப்பல் போக்குவரத்து சேவையை நிறுத்துமாறு தூத்துக்குடி தமிழ் இன விரோத சுற்றுலா சொகுசு கப்பல் எதிர்ப்பு பரப்புரை இயக்கத்தினர் தூத்துக்குடி ஆளுநரிடம் மனுவொன்றை கையளித்துள்ளனர் என்று என இந்திய ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளன.

அந்த மனுவில் கூறி இருப்பதாவது:

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பலலட்சக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கையில் கொலை செய்யப்பட்டனர். அந்த நாட்டுக்கு சொகுசு கப்பல் இயக்குவதால் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி பெறுகிறது. இதனால் தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்தை நிறுத்த வேண்டும்.

இலங்கையைச் சேர்ந்த கப்பல் நிறுவனத்திடம் இருந்து இந்தியாவின் கடலோரப் பாதுகாப்புக்காக சுமார் 80 அதிநவீன படகுகளை வாங்க இந்திய அரசு ஒப்பந்தம் செய்து உள்ளது. இந்த ஒப்பந்தத்தை உடனடியாக அரசு ரத்துச் செய்ய வேண்டும். ராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே ஆரம்பிக்கப்பட உள்ள சொகுசு கப்பலையும், அதற்கான ஆயத்த பணிகளையும் உடனே நிறுத்த வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறி உள்ளனர்.

# மீனவர் பிரச்சினைக்கு இரு நாட்டு கடற்றொழிலாளர் அமைப்புகளுடன் பேசித் தீர்வுகாண வேண்டும்

## இலங்கை, மாலைதீவு ஊடகவியலாளர்கள் வலியுறுத்து


தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுதல், சிறைப்பிடிக்கப்படல் ஆகிய பிரச்சினைகளை இரு நாட்டு அரசு அதிகாரிகள் அளவில் மட்டு மல்லாமல், இரு நாடுகளின் கடற் றொழிலாளர் அமைப்புகளின் சார்பாகவும் பேசித் தீர்க்க வேண் டும் என்று இந்திய, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளின் ஊடகவியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.,

இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளில் இருந்து ஊடகங்களைச் சார்ந்த 13 ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் இந்தியாவில் நடைபெறும் ஊடக மாநாட்டில் கலந்து கொண்ட போதே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், இலங்கையில் யுத்தம் முடிந்து இரண்டு ஆண்டு காலம் ஆன நிலையில், இலங்கை தமிழர்கள் கண்ணியத்துடனும், அரசியல் ரீதியாக சம உரிமையுடன் வாழத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசு பெருந்தன்மையுடன் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என அந்த நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், இலங்கையில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக வாழ்வாதாரங்களை இழந்த தமிழர்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி வாழ்க்கையை ஆரம்பிக்க அந்தநாட்டு அரசு கால தாமதம் செய்யாமல் உதவி வழங்க வேண்டும் என்றும் வலியுறுத் தப்பட்டது.

# மரண அறிவித்தல்



## திருமதி சந்திரராசா பரமேஸ்வரி

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, சுதுமலை வடக்கு த.க.வித்தியாலயம்)**

உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி சந்திரராசா பரமேஸ்வரி கடந்த 03.07.2011 இல் காலமானார்.

அன்னார் மாப்பாண்ட முதலியார் பரம்பரையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், நந்தாவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சந்திரராசாவின் (நவாலி மகாவித்தியாலயத்தின் முன்னாள் உப அதிபர், ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையின் உப தலைவர்) அன்பு மனைவியும், செந்தில்ராஜன் (லண்டன்), சுயாதா (கனடா), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பிரபாலினி(லண்டன்), பிரபாகரன் (கனடா), சுகிர்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், மகேஸ்வரியின் அன்புச் சகோதரியும், பாலசிங்கம், காலஞ்சென்ற முருகையா மற்றும் கனகராணி, செல்வராஜா-பத்மாதேவி, காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சரோஜினிதேவி, இந்திரன் - சந்திரலேகா, பாக்கியராஜா - கருணாரூபி, காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் ஈஸ்வரோதயம், இந்து மதி-விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சபேஷரூபன் -ஆஷா, கஜேந்திரரூபன் - செல்வானந்தி, அம்பிகைரூபன்-உமாமகேஸ்வரி, சுஜீவா-பிறேம்குமார், சிந்தூரரூபன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், பிரதீபன் - சோபனா, பிரதாப்- சுமதி, ஜனகன் ஆகியோரின் அன்பு மாமியும், விஸ்ணுப்பிரியன், ஜரண்யா, தனுஷா, கபீஷன், அனீஷ், விபூஷன், ஹரிரித்தேஷ், தக்சிகா, தனுரா, பவதாரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் நாகராசா-தேவியின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.*

(5492)

தகவல்:
சி.சந்திரராசா (கணவர்).

5492

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரளவு சர்வாதிகார ஆட்சிமுறை இலங்கையில் இருந்தால்தான் நல்லது

## நிமால் சிறிபால டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 6

சர்வாதிகார ஆட்சி இலங்கைக்கு நன்மையை ஏற்படுத்தும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சட்டம் மற்றும் ஜனநாயக கொள்கைகள் அபிவிருத்திப் பணிகளை சீர்குலைக்கும் என அவர் தெரிவித்துள்ளார். அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்த வேண்டுமாயின் ஓரளவு சர்வாதிகார ஆட்சி அவசியமானது என அவர் கூறியுள்ளார். அதிகளவு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதனை தடுக்க முடியாது.

எனினும் நாட்டின் நலனுக்காக அவற்றை பொறுத்துக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிங்கப்பூரின் முன்னாள் தலைவர் லீ க்வான் யெவ் இவ்வாறான ஓர் அணுகு முறையைப் பின்பற்றி நாட்டை ஆட்சி செய்ததாகவும் இதனால் சிங்கப்பூர் அதிக அபிவிருத்தி அடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



# நிதிமோசடி விசாரணை இரகசியப் பொலிஸாரிடம்

திருகோணமலை,ஜூலை6

நிதி மோசடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட மூதூர் பிரதேச செயலகத்தின் உதவிச் செயலாளர், பிரதான லிகிதர் மற்றும் கிராம சேவகர் என மூவர் மீதான விசாரணைகள் இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் மீதான விசாரணைகளை கணக்காய்வாளர் திணைக்களம், திருமலை கச்சேரியின் உள்ளக கணக்காய்வாளர் பிரிவு மற்றும் அரச நிர்வாகத் திணைக்களம் ஆகியனவும் மேலதிகமாக மேற்கொண்டு வருகின்றன. மூதூர் பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கான உணவுகளை வழங்கும் நடவடிக்கைகளில் நிதி மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே இந்த அரச உத்தியோகத்தர்கள் மூவரும் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடவடிக்கையின்போது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட நிலையிலேயே அவர்களை சேவையிலிருந்து இடை நிறுத்துவதற்கான உத்தரவினை திருமலை அரச அதிபர் ரஞ்சித் டி சில்வா பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)


# டுபாய் செல்ல முயற்சித்த இலங்கையர் கைது

கொழும்பு,ஜூலை6

போலிக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி டுபாய் நாட்டுக்குச் செல்ல முற்பட்ட இலங்கையர்கள் இருவரை கொல்கத்தா, என்.எஸ்.சி.போஸ் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுபா கீதராணி (வயது 25) மற்றும் பர்ஸான் (வயது 32) ஆகிய இருவருமே போலிக் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி டுபாய் செல்ல முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

பாதிக்கப்பட்ட மாணவர்கள்...



சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் பாடசாலையின் மாணவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை திடீர் சுகவீனமுற்ற நிலையில் சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (30)

# குடிதண்ணீர் அருந்திய மாணவர்கள் சுகவீனமுற்று வைத்தியசாலையில்

அம்பாறை, ஜூலை 6

சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் வித்தியாலயத்தில் நேற்றுக் காலை குடிதண்ணீர் அருந்திய மாணவ, மாணவியர்கள் திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இணைப்புடனான நீர்த்தாங்கியொன்றும், கிணற்றுத் தண்ணீர் சேமிக்கும் நீர்த்தாங்கியொன்றும் உள்ள நிலையில் கிணற்று தண்ணீர் தாங்கியிலிருந்து வந்த குடிதண்ணீரைப் பருகிய மாணவ, மாணவியர்களே திடீர் சுகயீனத்திற்கு உள்ளாகினர்.

சம்மாந்துறையில் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 74 மாணவ, மாணவியர்கள் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குள்ளாகியதாக வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஏ.இஸடீன் தெரிவித்தார்.

இந்தக் குடிதண்ணீர் அருந்தியதால் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்குத் தொண்டை நோவு, வயிற்றுநோவு, வாந்தி, தலையிடி, மயக்கம் ஏற்பட்டதாகவும் உயிராபத்தான நிலையில் மாணவர்களெவருமில்லையெனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் அறிந்ததும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம். எல். ஏ.அமீர் சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம் நௌஸாத், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.எஸ். இப்றா லெவ்வை உட்பட பிரமுகர்கள் பலரும் வைத்தியசாலைக்கு வருகை தந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ச-30)

# குடிதண்ணீர் நஞ்சு: விசாரணை நடத்த உத்தரவு

அம்பாறை,ஜூலை 6

சம்மாந்துறை பிரதேச பாடசாலையொன்றில் குடிதண்ணீர் நஞ்சானமை குறித்து உடனடியாக விசாரணைகளை நடத்துமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் டப்ளியூ. குணவர்த்தனவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விசாரணை தொடர்பான முழுமையான அறிக்கையை விரைவில் தனக்கு சமர்ப்பிக்குமாறு மாகாண அமைச்சர் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்ற மாகாண அமைச்சர், சம்மாந்துறை வைத்தியசாலைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சென்று நிலைமைகளை நேரில் அவதானித்ததுடன் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான சிகிச்சைகளை வழங்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார். (ச-30)

# தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லையேல் நாடு முன்னேறாது

## சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 6

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டும். அதனைத் தீர்க்காது விட்டால் நாடு தொடர்ந்தும் முன்நோக்கிச் செல்ல முடியாது என மனித வளம் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

அரசின் 'தினமின' சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். தேசியப் பிரச்சினையானது இந்தியாவினதோ, சர்வதேசத் தினதோ பிரச்சினை அல்ல. அது இலங்கையின் பிரச்சினை. தற்போதைய அரசு சர்வதேச தேவைக்கமைய செயற்படாது என்பதை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் உறுதிப்படுத்தியுள்ளது. அத்துடன், இந்தியாவும் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்காது எனக் கூறியுள்ளது.

யுத்தம் முடிவடைந்துள்ளதால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுள்ளதாகக் கூறமுடியாது. ஏற்றுக்கொள்ள முடியாது போனால் மீண்டும் பிரச்சினை ஏற்படும். பயங்கரவாதம் அல்லது பிரிவினைவாதம் ஏற்படுவதற்கு சமூகப் பொருளாதார அரசியல் விடயங்கள் உள்ளன. இவற்றை அரசியல் தீர்வின் மூலமே தீர்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் வளர்ச்சியடைய சகல அரசியல் கட்சிகளும் பொறுப்பு கூறவேண்டும்.



இதனால் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அனைத்துக் கட்சிகளுக்கும் பொறுப்புள்ளது. அத் தோடு, இது எதிர்காலச் சந்ததியைப் பாதிக்கும் விடயமாகும்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு 50 வருடகால வரலாறு உண்டு. இதனடிப்படையில் 30 வருடகாலம் யுத்தம் நீடித்தது.

நாட்டின் இருப்புக்கும் அபிவிருத்திக்கும் அரசியல் தீர்வு நேரடியான பாதிப்புக்களை ஏற்படுத்தும். இதனால் தொடர்ந்தும் தாமதிக்காது அதற்குத் தீர்வை வழங்க வேண்டியது சகலரதும் பொறுப்பாகும்.

வரலாற்றில் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தேசியப் பிரச்சினை குறித்து இரண்டு தரப்பு மாத்திரமே பேச்சுக்களில் ஈடுபட்டதால் ஏனைய தரப்பினர் அதனைச் சீர் குலைத்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு தனி நிலைப்பாட்டுக்கு அமைய யோசனையை முன்வைக்காது.

சகல கட்சிகளும் இணைந்து யோசனையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கி அதனை ஏற்றுக்கொள்வதாக அறிவித்ததன் மூலம் புதிய நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது-என்றார். (ச)

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த தடுப்பூசிகள் மீட்பு

## சுகாதார அமைச்சர் உடனடி விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜூலை 6

ஆபத்தான நிலையிலிருக்கும் புற்று நோயாளர்களுக்கு செலுத்த வேண்டிய முக்கியமான தடுப்பூசி ஒன்று கைவசம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில், பெருந்தொகையான மருந்தை மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை களஞ்சியசாலையிலிருந்து அரச மருந்து விநியோகப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பில் அரச மருந்து விநியோகப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்ததாவது:-

இந்தத் தடுப்பூசி ஒன்றின் விலை 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவாகும்.

ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளுக்கு ஏற்ற வேண்டிய மிகமுக்கிய மருந்து இது. எனினும், பாதிப்புற்ற நோயாளர்களிடம் தடுப்பூசி கைவசம் இல்லையென வைத்தியசாலை அதிகாரிகள் பொய் கூறியுள்ளனர். சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் விசேட பணிப்புரையின் கீழ் இந்தக் களஞ்சியசாலை முத்திரையிடப்பட்டு மூடப்பட்டது.

சாதாரணமாக புற்று நோயாளிகளுக்கு வருடம் ஒன்றுக்கு கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான மருந்துகள் தேவைப்படுகின்றன.

இந்த மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காகதான் நூற்றுக்கணக்கான கொள்வனவுக் கட்டளைகளில் கையொப்பம் இட்டுள்ளார் என்றும்,எனவே, மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட வழியில்லை என்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

எனவே, இதுபற்றிய விசாரணையைத் துரிதமாக முன்னெடுத்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மருந்துகள் விநியோகப் பிரிவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எனினும், இது தொடர்பில் மஹரகம வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

களஞ்சியசாலையிலிருந்த மருந்து இரண்டு வருடங்களுக்குப் போதுமானது .

எனினும், கடந்த காலங்களில் இந்த மருந்துக்கு அவசியம் ஏற்படாததால். அவை விநியோகம் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளன.

இந்த மருந்து கையிருப்பில் இருக்கும் நிலையில் அவற்றை ஆபத்தான நோயாளிகளுக்கு வழங்காமல் இருந்தமை மனிதாபிமானமற்ற செயல் என சுகாதார அமைச்சர் கண்டித்துள்ளார் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட காலத்துக்குப் பின் வவுனியா நகரசபையால் வேலைத்திட்டம்

வவுனியா, ஜூலை 6

நீண்ட காலத்துக்குப் பின்னர் வவுனியா நகர சபையின் வேலைத்திட்டங்கள் தற்போது மிகவும் சிறந்த முறையில் இடம்பெற்று வருவதாக நகரசபையின் உப தலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

தற்போது நகர சபையினால் 90 நாள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கபட்டு வருகின்றன. வவுனியாவில் 32 வீதிகளைப் புனரமைப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டமும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென மூன்று லட்சம் ரூபாவை வவுனியா நகரசபை ஒதுக்கியுள்ளது.



வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகளை வவுனியா நகரசபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் பார்வையிடுகின்றார்.

கடந்த காலங்களில் வவுனியா நகரசபை உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டு வந்த சில பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட்டுள்ளது. இதனால் எந்தவிதப் பிரச்சினையுமின்றி எமது மக்களுக்கான பணிகளை முன்னெடுக்க முடிகின்றது.

இதற்கு நகரசபை எந்த நேரமும் தயாராக உள்ளதாகவும் வவுனியா நகரசபையின் உப தலைவர் மேலும் தெரிவித்தார். (க-601)

# நூற்றாண்டு விழாக் காணும் ஓமந்தை மத்திய கல்லூரி

வவுனியா, ஜூலை 6

வவுனியா, ஓமந்தை மத்திய கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் விமரிசையாகக் கொண்டாடவுள்ளது.

இதற்கென அமைக்கப்பட்ட விழாக் குழுவினர் இந்த விழாவுக்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

நூற்றாண்டுச் சிறப்பு மலர் வெளியிடுதல், ஞாபகார்த்த மண்டபம் அமைத்தல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றது.

இதற்கான ஒத்துழைப்பை பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர் ஆகியோரிடம் பெறும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதிதான் நூற்றாண்டுத் தினமாகும். ஆனால் கல்லூரி சீராக இயங்கத் தொடங்காமையால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம்தான் நூற்றாண்டு விழா கொண்டாடப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பேராசிரியர்கள், உயரதிகாரிகள், கல்விமான்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் என எண்ணற்றோரை உருவாக்கிய பெருமை உள்ளதாக இந்தக் கல்லூரி விளங்குகின்றது.

கடந்த இருபது வருடகால யுத்தத்தில் தீவிர யுத்தக் களமுனையாக ஓமந்தை பல ஆண்டுகள் விளங்கியமையால் இந்தக் கல்லூரி மோசமான அழிவுகளைச் சந்தித்துள்ளது.

அண்மைக் காலத்தில்தான் கல்லூரியின் கட்டடங்கள் பலவும் புனரமைக்கப்பட்டன. இந்தக் கல்லூரி இன்னமும் சீரான முறையில் இயங்கத் தொடங்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (க-121)

# புனர்வாழ்வு நிலையத்துக்கு நாமல் எம்.பி. விஜயம்

வவுனியா, ஜூலை 6

வவுனியா பூந்தோட்டம் கூட்டுறவுக் கல்லூரியில் உள்ள முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு நிலையத்துக்கு கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விஜயமொன்றை மேற்கொண்டார்.

இவர் அங்கே முன்னாள் போராளிகளால் வரையப்பட்ட சித்திரங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருள்கள் முதலானவற்றைப் பார்வையிட்டார். இவருடன் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலையின் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.திசாநாயக்க, பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் எனப் பலர் சென்றிருந்தனர்.

இந்தச் சித்திரங்களைக் கூடிய விரைவில் சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்லக் கூடிய வகையில் சில நிலையங்களைத் தெற்கில் ஆரம்பிக்க உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (க)

## நல்ல வரவேற்பு...



அபிவிருத்தி தொடரட்டும்: கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பால் நிலை சமத்துவ நிபுணர் திருமதி கல்யாணி, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா ஆகியோர் அழைத்துவரப்படுகின்றனர்.

# இந்து நிறுவனங்களின் அபிவிருத்திக்கு வவுனியாவில் பிரதமரால் நிதியுதவி

வவுனியா, ஜூலை 6

வவுனியா மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கென ஒரு கோடியே 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்துக்கான காசோலையைப் பிரதமரும் புத்தசாசன அமைச்சருமான டி.எம். ஜயரத்ன வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் வைத்து வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸிடம் கையளித்தார்.

தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நூறு இந்துக் கோயில்களுக்கு ஒரு கோடி ரூபாவும், பத்து இந்து நிறுவனங்களுக்கு தலா ஒரு லட்சம் வீதம் 10 லட்சம் ரூபாவும் ஐந்து அறநெறிப் பாடசாலைகளுக்குத் தளபாடம் கொள்வனவு செய்வதற்காகத் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன. (க)

# பூவரசங்குளம் - துணுக்காய் வீதி புனரமைப்பு

வவுனியா, ஜூலை 6

வீதி அபிவிருத்தித் திணைக்களம் வடமாகாண விசேட அபிவிருத்தி நிதியின்கீழ் வவுனியா மாவட்டத்தில் வீதிப் புனரமைப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

பூவரசங்குளம் - துணுக்காய் வீதியில் 16 கிலோ மீற்றர் நீளமான பகுதியே கிரவல் இடப்பட்டுப் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான கேள்விப் பத்திரங்களைத் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்கள் ஜூலை 26 ஆம் திகதி வரையுழ் சமர்ப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-121)

# தலைக் கவசம் கொண்டு செல்லத் தடை! வைத்தியசாலைக்குச் செல்வோர் சிரமத்தில்

வவுனியா, ஜூலை 6

வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் செல்லுவோர் தலைக் கவசத்தை உள்ளே எடுத்துச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் தமது மோட்டார் சைக்கிள்களை நிறுத்தாதவர்களே தலைக் கவசத்தை உள்ளே எடுத்துச் செல்வதற்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர் அனுமதிப்பதில்லையெனவும் தெரிய வருகின்றது.

இத்தகைய பாரபட்சமான நடவடிக்கையால் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களும், பொதுமக்களும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இவர்கள் தாம் அணியும் தலைக்கவசங்களை என்ன செய்வதென்று புரியாது வைத்துக்கொண்டு நிற்பதையும் அவதானிக்கமுடிகின்றது. (க-135)

# கிளிநொச்சியில் குடியமர்த்தப்பட்ட மூன்று சிங்களக் குடும்பங்கள்

## இராணுவத்தின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி நகருக்கு அண்மையாக உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் தென்னிலங்கையைச் சேர்ந்த மூன்று குடும்பங்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதனை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இருந்து வருகைதந்துள்ள இந்த மூன்று குடும்பங்களும் கிளிநொச்சி நகரத்துக்கு அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் தங்கியுள்ளார்கள்.

இந்தக் குடும்பங்களை உரிய இடத்துக்கு அனுப்புவதை விடுத்து படையினர் அவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களைக் கிளிநொச்சி நகரப் பகுதியில் குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவர்களுக்கு அரச காணியைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபடுவதாகத் தெரியவருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த திருடர்களின் தொல்லை: தூக்கத்தைத் தொலைத்த மக்கள்

## கிளிநொச்சி ஜெயந்திநகரில்

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வந்து திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் திருடர்களால் மக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழிக்கின்றனர். இரவு வேளைகளில் வீட்டில் உள்ளவர்கள் நித்திரைக்குப் போகும் சந்தர்ப்பங்களைப் பார்த்து வீடுகளுக்குள் நுழையும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றார்கள்.

அண்மையில் கூட ஜெயந்தி நகர்ப் பகுதியில் உள்ள ஒன்பது வீடுகளில் தொடர்ச்சியாகத் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றதாக இந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். பகல் வேளையில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவரது தாலிக்கொடியை வேறு ஒரு மோட்டார் சையிக்கிளில் வந்த இரு திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளார்கள் எனவும் கூறப்படுகின்றது.

இந்தப் பகுதிக்கு வந்து திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் திருடர்கள் எங்கிருந்து வந்து இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் என்பது தெரியவில்லை எனவும் கூறப்படுகின்றது.

தற்போது மீளக்குடியமர்ந்து வந்து துன்பப்படும் வேளையில் தம்மிடமுள்ள ஒரு சில பொருள்களையும் இந்தத் திருடர்கள் வந்து திருடிச் செல்வதாக இந்தப் பகுதி மக்கள் கூறிக் கவலைப்படுகின்றார்கள்.

இப்படியான திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் திருடர்களைப் பிடித்து அவர்களுக்குரிய தண்டனையை வழங்க உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-426)

## நல்ல ஊக்கம்...



பாராட்டு: வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலய இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குச் சீருடைத் துணிகள் வழங்கும் நிகழ்வின்போது அறநெறிப் பாடசாலையின் தலைவர் கு.சுமுகலிங்கம் மாணவர் ஒருவருக்குச் சீருடைத் துணியை வழங்குகின்றார். (127)

# வீதியில் காணப்படும் குழியினால் பயணம் செய்வோர் ஆபத்தில்



வவுனியா, ஜூலை 6

வவுனியா, பூந்தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதியான மடத்தடி வீதியில் பெரிய குழி ஒன்று காணப்படுவதால் இதில் பயணிப்போர் அதிக சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இந்தப் பிரதான வீதியின் நடுவில் பெரிய குழி காணப்படுகின்றது. இந்தப் பாதையால் சென்று வரும் வாகனங்களும், துவிச்சக்கர வண்டிகளும் ''கரணம் தப்பினால் மரணம்'' என்ற வகையில் சிரமங்களையும் ஆபத்தையும் எதிர்கொள்கின்றன.

தினமும் பெருமளவான மாணவர்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களும் சிரமங்களுக்கு உள்ளாவதை அவதானிக்க முடிகிறது. உரியவர்கள் இதில் கவனமெடுத்து இதனைச் சீர் செய்ய வேண்டுமென்பதே பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டு கோளாகும். (க)

# கிளிநொச்சி ரயில் நிலையத்தின் திருத்தப் பணிகள் நடந்து வருகின்றன

## அப் பகுதியில் வாழ்ந்த மக்கள் திரிசங்கு நிலையில்

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி ரயில் நிலையத்தின் திருத்த வேலைகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இதில் முதற் கட்டமாகப் ரயில் நிலையத்தில் உள்ள கட்டடங்கள், பற்றைகள், மரங் கள் போன்றவற்றை டோசர் இயந்திரத்தின் மூலம் அப்புறப் படுத்தும் வேலைகள் நடை பெற்று வருகின்றன.

இதேவேளை, இப்பகுதியில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் மக்கள் எங்கு செல்வதென்று புரியாது கவலையில் ஆழ்ந்துள்ளனர். தமது உறவினர்கள் ரயில் நிலையத்தில் வேலை செய்ததால் ரயில் நிலைய ஊழியர்களின் குடும்பங்கள் தங்கும் இடத்தில் தாம் தங்கி வாழ்ந்ததாகவும் தாம் தொடர்ந்தும் பல வருடங்களாக அங்கேயே வசித்து வருவதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, தாம் 1995 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து வந்து இந்த இடத்திலுள்ள பற்றைக் காடுகளை வெட்டித் துப்புரவாக்கி வசித்து வருவதாகவும் சிலர் கூறுகின்றனர்.

கிளிநொச்சி ரயில் நிலையப் பகுதிகளில் பல குடும் பங்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனை அவர்கள் நட்டு வைத்துள்ள பழமரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

ஆனாலும் இப்பகுதியில் புகையிரத நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. இப்பகுதி மக்கள் வாழ்வதற்கும் ஓர் ஏற்ற இடம் தேவையாகவும் இருக்கின்றது.

இங்கு வாழ்கின்ற மக்களின் நலன்களையும் கருத்திற் கொண்டு அவர்கள் வாழ்வ தற்கு ஏற்ற இடத்தை அதிகாரி கள் வழங்கி உதவ வேண்டும் என்பது தான் இந்த மக்களின் கோரிக்கையாகும்.

இங்கே வசிப்பவர்களின் பிள்ளைகள் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். இவர்களில் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. உயர்தரம், க.பொ.த. சாதாரண தரம் போன்ற பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டியவர்களும் உள்ளனர்.

இவர்கள் தற்போது நகரத்தை அண்டிய பாடசாலைகளிலே கல்வி கற்று வருகின்றனர்.

எனவே தம்மைத் தூரமான காட்டுப் பகுதிகளில் குடியேற்றாது வசதியான இடத்தைத் தந்துதவ உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என்பது இந்த மக்களின் கோரிக்கையாக உள்ளது. (க-426)

# ஏய்க்கப்படும் வன்னித் தொண்டர் ஆசிரியர்கள்

ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவர்களுக்கு உரிய முறைப்படி கல்வி கற்பித்து நல்லொழுக்கங்களையும் வழங்கி ஒளியேற்றி இருள் அகற்றுபவர்களாக விளங்குகின்றனர்.

வாழ்க்கையை எப்படி வாழ வேண்டுமெனத் தமது வாழ்க்கைக்கூடாக உணர்த்துபவர்களாகவும் இவர்கள் காணப்படுகின்றனர்.

இதனால் ஆசிரியர்களுக்கு அனைவராலும் உரிய மதிப்பளித்துக் கௌரவிக்கப்படுவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

இதில் தொண்டர் ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவைகளையும் நாம் மறந்து விட முடியாது. குறிப்பாக வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் அடிப்படை வசதி வாய்ப்புக்கள்கூட இல்லாத நிலையில் யுத்தச் சூழலில் தொடர்ச்சியான இடப் பெயர்வுகளுக்கு மத்தியில் பலவகையான துன்பங்களையும் சுமந்து மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் தம்மை அர்ப்பணித்த வன்னித் தொண்டர் ஆசிரியர்களது சேவையை மறந்து விட முடியாது. ஆனாலும் இவர்களது சேவையை மதித்து இவர்களுக்குரிய நியமனங்களை வழங்க உரியவர்கள் முன்வரவில்லை. தாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களாக நியமனத்தை எதிர்நோக்கிக் காத்திருந்து காத்திருந்து பல காலங்கள் கழிந்துள்ளதாக வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்கள் கலங்கி நிற்கின்றார்கள்.

**ஆசிரியர் என்பவர்கள் மாணவர்களுக்கு உரிய முறையில் கல்வி கற்பித்து ஒளியேற்றுபவர்கள். ஆனால் இவர்கள் பத்து, பன்னிரண்டு வருடங்கள் சேவையாற்றி எந்தப் பலனுமே இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதற்கான ஊதியமுமில்லை. இதனை யார்தான் கேட்பார்கள்?**

வன்னிப் பகுதியில் நடைபெற்ற யுத்தம் காரணமாக வீதிகள் மூடப்பட்டிருந்ததால் ஏனைய பகுதிகளான யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களில் இருந்து வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஆசிரியர்கள் அங்கு சென்று கற்பிக்க முடியாத நிலை காணப்பட்டது.

இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது. மற்றும் வன்னிப் பகுதியில் உள்ள மிகவும் பின்தங்கிய அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் காணப்பட்டது. மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்ற போதிலும் கல்வியைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் அங்கு இல்லாமையால் பெரிதும் சிரமப்பட்டார்கள். இதன் காரணமாக அவர்களது கல்வி பாதிப்புக்குள்ளாகியது.

இந்த நிலையைக் கருத்திற் கொண்டு மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக க.பொ.த. உயர்தரம் படித்த இளைஞர்களும், யுவதிகளும் தொண்டர் ஆசிரியர்களாகப் பாடசாலைகளில் உரிய அதிகாரிகளின் அனுமதியுடன் நியமிக்கப்பட்டு மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார்கள்.

இவர்களுக்குரிய விதமான உதவுதொகைகளோ அல்லது வேறு உதவிகளோ வழங்கப்படவில்லை. இப்படியாகத் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமக்கும் நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைக்கும், தாம் தொடர்ந்தும் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கலாம் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் பத்து வருடங்களுக்கும் மேலாகப் பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கும் மத்தியிலும் தமது சேவையைத் தொடர்ந்த வண்ணமேதான் இருக்கின்றார்கள்.

வன்னிப் பகுதியில் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றுபவர்கள் தாம் கடந்த பத்து, பன்னிரண்டு வருடங்களாகச் சேவையாற்றி வருவதாகவும் ஏனைய பகுதிகளுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதுபோலத் தமக்கும் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நீண்ட காலமாகக் காத்திருந்ததால் தாம் வேறு வேலைகள் எதற்குமே முயற்சிக்கவில்லை எனவும் கூறிக் கலங்கி நிற்கின்றார்கள். (தொடரும்)

சுயன்

# இன்று திறப்பு விழா

முல்லைத்தீவு, ஜூலை 6

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சமூக பராமரிப்பு நிலையம் இன்று முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன் இதனைத் திறந்து வைப்பார்.

வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தின் நிதியுதவியுடன் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-121)

# ஐயனார் ஆலயத்தில் விசேட நிகழ்வுகள்

பூநகரி, ஜூலை 6

பூநகரி, வேரவில் கிராமத்தின் துத்தியில் அமைந்துள்ள ஐயனார் ஆலயத்தில் இன்று காலையும், மாலையும் முறையே மணவாளக் கோல விழாவும், பொங்கல் குளிர்த்தி வழிபாடுகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிவஸ்ரீ வரதன் ஐயா தலைமையில் விசேட ஐயப்ப நாம பஜனை சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (க-496)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஹாரா பாலைவனத்தில் தொல்பொருள்கள்

வட ஆபிரிக்காவில் உள்ள உலகின் மிகப்பெரிய சஹாரா பாலைவனத்தில் முற்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் மற்றும் விலங்குகளின் எலும்புகள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



# சூரிய மண்டலத்துக்கு வெளியே 10கிரகங்கள் கண்டுபிடிப்பு

சூரிய மண்டலத்தில் தற்போது பூமி, செவ்வாய், சந்திரன், வியாழன், புதன், சனி போன்ற 9 கிரகங்கள் உள்ளன. இவை சூரியனைச் சுற்றி வருகின்றன.
இது தவிர ஏராளமான சிறிய கிரகங்களும் சூரியனைச்சுற்றி வருகின்றன. சூரிய மண்டலம் பற்றி சர்வதேச விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.
இந்த ஆய்வில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒக்ஸ்போர்டுப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் இடம் பெற்றுள்ளனர். இப்போது சூரிய மண்டலத்துக்கு வெளியே 10 கிரகங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
சனிக் கிரகம் போன்ற மற்றொரு கிரகமும் சூரிய் மண்டலத்தின் வெளியே உள்ளது. பிரான்ஸ் நாட்டு விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் சக்தி வாய்ந்த டெலஸ்கோப்பைப் பயன்படுத்தி இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 10 கிரகங்களில் 7 கிரகங்கள் வெப்பம் அதிகம் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன.



# மிகப்பெரிய மீன்தொட்டி

பெர்லினிலுள்ள றடிசன் புறா என்ற ஹொட்டலில் தான் இந்த அழகான மிகப்பெரிய மீன் தொட்டி அமைந்துள்ளது. 25 மீற்றர் நீளமுள்ள இந்த மீன் தொட்டி இங்கு வரும் விருந்தினர்களை மிகவும் கவர்ந்திழுக்கக்கூடியதாக உள்ளது.
25 மீற்றர் நீளமும் 12 மீற்றர் விட்டமும் கொண்ட இந்த மீன் தொட்டியில் ஒரு மில்லியன் லீற்றர் தண்ணீர் உள்ளது. 2600 மீன்கள் உள்ள இந்தத் தொட்டியில் மொத்தம் 56 வகை மீன்கள் காணப்படுகின்றன. இந்த மீன்களை அருகில் சென்று பார்க்க மீன் தொட்டிக்குள் ஒரு லிப்ட் இயங்கி வருகிறது.

# சிங்கக் குட்டியை அன்புடன் வளர்க்கும் குரங்கு!



தென் கரோலினா என்ற இடத்திலுள்ள மிருகக் காட்சிச் சாலை ஒன்றில் 2 வயதான சிம்பன்சி ஒன்று அதே மிருகக் காட்சி சாலையில் உள்ள வெள்ளை சிங்கக் குட்டியை மிகவும் அன்புடன் பாதுகாத்து வளர்த்து வருகிறது.

# வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் பீட்ரூட் சாறு



சைக்கிள் வீரர்களின் சக்தியை பீட்ரூட் சாறு அதிகரிக்கும் என அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.
அண்மையில் எக்சீடர் பல்கலைக்கழகத்தில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
அதில் பீட்ரூட் சாறு குடிக்கும் சைக்கிள் வீரர்களுக்கு சக்தி அதிகரிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இயற்கையாக பீட்ரூட்டில் அதிக அளவு நைட்ரேட் உள்ளது. இது தடகள வீரர்களின் திறமையைப் பாதிக்கும் எனக் கருதப்பட்டது. இதுகுறித்து ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது பீட்ரூட் சாறு குடித்தால் சக்தி அதிகரிக்கும் எனத் தெரியவந்துள்ளது.
சைக்கிள் ஓட்டும் வீரர்களுக்கு இந்த ஜூஸ் கொடுக்கப்பட்டது. அப்போது அவர்கள் வழக்கத்தை விட அதிக தூரம் கடந்து சாதனை படைத்தனர். பீட்ரூட் சாறு தசைகளுக்கும், இருதய நாளங்களுக்கும் அதிக சக்தி கொடுப்பதும் தெரியவந்துள்ளது.

# காலநிலைக்கு ஏற்ப சுற்றும் வீடு



கட்டடக்கலை வல்லுநர்கள் தற்போது வீடுகளை வித்தியாசமாக வடிவமைப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த கட்டட வல்லுநரால் 1989 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட வீடுதான் இந்த சொலலேயா (Solaleya) எனப்படும் சுழலும் வீடு சூரியனின் வெப்பம் தாக்காத அளவுக்கு வீட்டை சுழற்றி வைக்க முடியும்.

தங்களின் தேவைக்கேற்ப ஒரு நாள் முழுவதும் அல்லது நேரத்திற்கு ஏற்ப சுழலுமாறு அதன் இயக்கத்தில் பதிவு செய்து வைத்துக்கொள்ளும் வசதியுள்ளது.

சூறாவளி மற்றும் பூகம்பத்தினால் ஏற்படும் அழிவுகளிலிருந்து காத்துக் கொள்ளும் வகையில் இந்த வீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

# உலகிலேயே மிக அதிக சத்தம் போடும் உயிரி



பூமியில் மிகுந்த உரத்த சத்தம் போடும் மிருகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர்.

மிருகத்தின் உருவத்தைக் கணக்கில் கொண்டு எடுக்கப்பட்ட சத்த அளவில் வோட்டர் போட்மன் எனப்படும் தண்ணீர் படகுப் பூச்சி உரத்த சத்தம் போடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சிறு பூச்சி இனம் 99.2 டெசிபல் அளவில் சத்தம் போடுகிறது. இசைக்குழு பாடும் பாடலை முதல் வரிசையில் அமர்ந்து கேட்கும் போது ஏற்படும் ஒலி அளவு இந்த தண்ணீர் படகுப் பூச்சியின் சத்தத்தில் உள்ளது. மனிதர்கள் கேட்கும் அளவான 10 கிலோ ஹெர்ட்ஸ் ஒலி அளவில் இந்த சிறு பூச்சியின் சத்தம் உள்ளது என ஸ்டிராத் கிளைடு பல்கலைக்கழக ஆய்வாளர் மருத்துவர் ஜேம்ஸ் விண்டமில் தெரிவித்தார்.

தண்ணீரில் இந்தப் பூச்சி எழுப்பும் சத்தத்தில் 99 சதவீதம் தண்ணீரில் இருந்து வெளிக் காற்றுப் பகுதிக்கு வரும்போது மறைந்து விடுகிறது. இதனால் இந்தப் பூச்சியின் பயங்கர சத்தம் பற்றி யாரும் கவனம் செலுத்துவதில்லை. இந்தப் பூச்சிகள் ஆற்றின் அடியே எழுப்பும் சத்தத்தை கரை வழியாக நடந்து செல்லும் நபரால் தெளிவாகக் கேட்க முடியும்.

இந்தத் தண்ணீர்ப் பூச்சியின் அளவு 2 மில்லி மீற்றர் தான். ஆனால் இது போடும் சத்தம் ஊரையே கூட்டி விடும் என ஆய்வாளர்கள் உறுதிப்படத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற ஓர் அமைப்பு மலையகத்துக்குத் தேவை

## தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் கூறுகிறார்

புசல்லாவை, ஜூலை 6

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எந்த நிலையிலும் ஒரே மாதிரியான கொள்கையையே கடைப்பிடித்து வருகிறது. எந்த மூலையில் தமிழன் பாதிப்பிற்குள்ளானாலும் அது குரல் கொடுத்து வருகின்றது. எனவே, மலையகத்திலும் கூட்டமைப்பைப் போன்று ஓர் அமைப்பு தேவைப்படுகின்றது. அதற்கான ஆரம்பமே எமது மத்திய மாகாண தொழிலாளர் முன்னணி - என அதன் பொதுச் செயலாளர் எஸ். இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்த முன்னணியில் இணைந்து கொண்டவர்களுடனான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை புசல்லாவையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய இராஜரட்ணம் மேலும் கூறியதாவது:-

இன்று மலையகத்தில் உள்ள தொழிற்சங்கங்களில் பல அரசுடன் இணைந்து செயற்படுகின்றன. எனினும், அவை தொழிலாளர்கள் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்கமுடியாமலும் - தொழிலாளர்கள் பாதிக்கப்படும்போது எதிர்த்து குரல்கொடுக்க முடியாத தர்ம சங்கடமான நிலையிலும் இருக்கின்றன.

ஆனால், இந்தத் தொழிற்சங்கங்கள் போலன்றி எமது மத்திய மாகாண தொழிலாளர் முன்னணி தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் மாபெரும் சக்தியாக எதிர்காலத்தில் திகழும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுமூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்பது தமிழ் மக்களின் பிரச்சினைகளை நீண்ட காலத்திற்கு இழுத்தடிக்கும் முயற்சியாகும்.

எனவே, அரசு தெரிவுக்குழு அமைப்பதைக் கைவிட்டு - வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இறுதித்தீர்வு காண வேண்டும். இதற்கு நாமும் தமிழர்கள் என்ற வகையில் ஆதரவளிப்பது எமது கடமையாகும் - என்றார். (ச)

# நுவரெலியா அபிவிருத்தி நடவடிக்கைகளை இந்தியத் தூதுவர் நேரில் சென்று பார்வை

நுவரெலியா, ஜூலை 6

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் கால்நடை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை இந்தியத் தூதர் அசோக் கே காந்தா கடந்த சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

பிரதித் தூதுவர் மிஸ்ராவும் மேலும் தூதரக உயரதிகாரிகள் பலரும் இதன் போது சென்றுள்ளனர்.

இவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்றுள்ளனர் என இ. தொ. கா. உதவிச் செயலாளர் ஏ.பி. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஸ்டொனிக் லீப், ரொஸிட்டா ஆகிய பிரதேசங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தைப் பார்வையிட்டனர்.

கொட்டகலை தமிழ் மகாவித்தியாலத்துக்குச் சென்ற இந்தக் குழுவினர் பாடசாலைக்குத் தேவையான மேலதிக அபிவிருத்திகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

மிகவும் பின்தங்கிக் காணப்படும் பிரதேசங்களான ஹற்றன் மெல்புறோ, ஹற்றன் ஆகிய பிரதேசங்களுக்கும் சென்று மக்களின் நிலைமைகளையும் கண்டறிந்தனர். மௌன்வாடன் தோட்டத் தொழிலாளர்கள் 50 ஏக்கர் நிலப் பரப்பில் மேற்கொள்ளும் பண்ணைத் தொழிலையும் குழுவினர் பார்வையிட்டனர். (ச)

## ஆர்ப்பாட்டம்



ஐக்கிய தேசிய கட்சி ஏற்பாட்டில் அரசின் அடக்கு முறைக்கும், வாழ்க்கைச் செலவீனம் அதிகரிப்புக்கும், ஊடகங்கள் மீதான அடக்கு முறைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கண்டியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் கைகளில் பதாகைகளை ஏந்தி எதிர்ப்பைத் தெரிவித்தனர். (ச)

# பிஸ்டலுடன் இரு இளைஞர்கள் கைது

கண்டி, முல்கம்பொல பகுதி வீடொன்றிலிருந்து கைத்துப்பாக்கி ஒன்றையும், தோட்டாக்கள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த வீட்டில் பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச்சோதனை நடவடிக்கையின் போதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. வீட்டில் இருந்த இளைஞர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர்கள் தம்புத்தேகம, வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணையின்போது தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரிடமும் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# புற்று நோய்க்குரிய எச்சரிக்கை அறிகுறிகள் யாவை?

**புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 6**

வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை "(TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில். மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.

(நேற்றைய தொடர்ச்சி...)

**1) நீண்ட காலமாக நிலைத்திருக்கும் இருமல் அல்லது குரல் வித்தியாசம்**

இவ்வாறான அறிகுறி சாதாரண நுலை யீரல் தொற்று மற்றும் கசரோகம் (TB) போன்ற நோய்களிலும் ஏற்படலாம். எனவே இவை இல்லை என்பதை அறிந்த பின்னர் புற்று நோய் நுரையீரலில் அல்லது குரல் நாண் பகுதியில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்தும் பரிசோதனைகளைச் செய்ய முற்பட வேண்டும்.

**2) குணமடையாத புண்**

இந்த அறிகுறியும் சாதாரணமாக நீரிழிவு நோயா ளர்களில் ஏற்படலாம். எனினும், நீடித்த காலமாக உடலின் எப்பகுதியிலாவது பலகாலமாக குணமடையாது புண் இருப்பின் அதன் விளிம்புப்பகுதியில் கலமாதிரி(Tissue Specimen) எடுத்து நுணுக்குக்காட்டியில் பரிசோதித்து புற்றுநோய் உள்ளதா என உறுதி செய்யலாம்.

**3) உடலில் கட்டிகள், தழும்புகள் அல்லது தடிப்புகள் ஏற்படல்.**

இவை உடலில் எந்தப் பகுதியில் ஏற் பட்டாலும் குறிப்பாக நோவில்லாத கட்டிகள் மார்பகங்களில் ஏற்படும் இடத்து விரைவில் வைத்திய ஆலோசனை பெற்று அவை புற்றுநோயா என்பதைத் தெளிவுபடுத்துவது நன்று.

**4) தோலில் உள்ள உண்ணி அல்லது மச்சப்பகுதிகளில் திடீர் மாற்றம் ஏற்படல்.**

அளவு மாற்றமடைதல், இரத்தம் கசிதல், கடித்தல் ஏற்படும் இடத்து அவை புற்று நோயாக மாறுகின்றதா என் பதை வைத்திய பரிசோதனை மூலம் விரைவில் தெளிவுபடுத்தல் நல்லது.

**5) பெண்களில் யோனி வழியில் இருந்து அசாதாரணமாக இரத்தம் அல்லது வெள்ளைப் போக்கு ஏற்படுதல்**

இவ்வாறான அறிகுறிகள் பெண்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயிலும் கருப்பை உடற் புற்றுநோயிலும் தென்படும்.பெண்கள் இவ்வாறான அறிகுறிகள் தென்படின் குறிப்பாக மாதவிடாய் நின்ற பின்பும் இரத்தப் போக்கு இருக்கும் இடத்து விரைந்து வைத்தியரைச் சந்திக்க வேண்டும்.

**6) மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்தோடு இரத்தம் வெளியேறல்**

இவை சாதாரணமாக மூல வருத்தத்திலும் ஏற்படலாம். ஆனால் இவை குடல், மலவாசல் போன்ற பகுதிகளில் ஏற்படும். புற்றுநோய் காரணமாகவும் ஏற்படலாம். எனவே இந்த அறிகுறி ஏற்படின் உடன் வைத்தியரை நாடவும். சலம் அடிக்கடி போதல் ஆண்களில் முன்னிற்கும் சுரப்பி (Prostate) இல் ஏற்படும் சாதாரண புற்றுநோய் அல்லாத வளர்ச்சி காரணமாகவோ அல்லது புற்றுநோய் வளர்ச்சி காரணமாகவோ ஏற்படலாம். இவ்வாறான சந்தப்பங்களில் மருத்துவ ஆலோசனையை உடன் பெறல் நன்று.

**7) உணவு விழுங்குவதில் ஏற்படும் கஷ்டம் அல்லது அஜீரணம் (சமிபாடின்மை)**

இவை களம் மற்றும் இரப்பைப் புற்று நோயின் அறிகுறிகளாக இருக்கும்.

**8) வாய்க் குழியில் காணப்படும் தடித்த வெள்ளை, சிவப்பு நிறமான அகற்ற முடியாத தழும்புகள் (Leukoplakia, Erythroplasia)**

இவை வாய்ப்புற்று நோயின் முன்னிலைகளாகும். அவற்றுடன் வாய்ப்பகுதியில் இருக்கும் மாறாத புண்கள் புற்றுநோயின் அறிகுறிகளே.

**9) காரணமற்ற நீண்டநாள் காய்ச்சல்**

இவ்வாறன காய்ச்சல் பெரும்பாலும் குறைந்த வெப்பநிலை அளவிலேயே இருக்கும்.

**10) மாறாத மஞ்சள் காமாளை**

புற்றுநோய்க் கட்டியானது பித்தக் கானை அழுத்துதனால் பித்த ஓட்டம் தடைப்படல், ஈரலில் புற்றுநோய் உருவாதல் அல்லது வேறு இடத்தில் இருந்து புற்றுநோய் ஈரலுக்குப் பரவுதல்.

**11) இரத்தக் கசிவு**

இலகுவில் முரசிலிருந்து இரத்தம் கசிதல் அல்லது தோலில் கீழ் இரத்தக்கசிவு ஏற்படல்.

இவ்வாறான ஆரம்ப எச்சரிக்கை அறிகுறிகள் உங்களில் ஏற்படின் உடன் வைத்திய ஆலோசனை பெற்று உங்கள் சந்தேகங்களைத் தீர்க்கவும்.

இவை தவிர புற்றுநோயின் பிந்திய நிலைகளிலும் பல அறிகுறிகள் ஏற்படும். உதாரணமாக

- உடல் அதிக அளவில் மெலிவடைதல்
- பசியின்மை
- அதிக சோர்வடைந்திருத்தல்

இவை புற்றுநோயின் தாக்கம் உடலில் பல பகுதிகளை அடையும் இடத்தும் புற்றுநோய் உள்ளோரில் சுரக்கப்படும் பல பதார்த்தங்களின் செயற்பாட்டாலும் ஏற்படுகின்றது. இதுவரை நீங்கள் அறிந்த பொதுவான புற்று நோயை ஏற்படுத்தும் காரணிகளைத் தவிர்ப்பதன் மூலமும் அதற்கான ஆரம்ப அறிகுறிகள் காணப்படும் இடத்து வைத்தியரை நாடி ஆரம்பத்தில் இனம் காண்பதன் மூலமும் இந்த நோயின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

புற்றுநோய் வைத்திய நிபுணர்
என்.ஜெயக்குமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
குழந்தைகள் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வயிறு தொடர்பான உபாதைகளுக்கு ஆள்படலாம். சிலர் உங்களின் உதவி நாடிவரலாம். உங்களை விமர்சிக்கும் ஒருவரை, நீங்களும் பதிலுக்கு விமர்சனம் செய்வீர்கள். சிலரால் உங்களின் வேலையில் தடை ஏற்படலாம்.

**இடபம்:**
மனைவி வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்குவீர்கள். உறவினர்கள் சிலருக்காக பிணை கொடுப்பீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற் றொருவரிடம் உதவி கேட்கலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும்.

**மிதுனம்:**
கேளிக்கை, கொண்டாட்டங்களால் உற்சாகம் பெறுவீர்கள். நீண்ட நேரம் காத்திருக்க நேரிடும் என நினைத்த வேலை ஒன்று, சுலபமாக முடியலாம். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று, பனி போல விலகி விடும். சிலரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். அனுகூலமான நாள்.

**கடகம்:**
வீண் விரயங்களைச் சந்திக்கலாம். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். புதிய நண்பர்களால் ஆதாயம் பெறலாம். கடன் பிரச்சினைகளை சாக்குப் போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த நேரத்தில் வராத பணவரவு ஒன்று இப்போது வரலாம். குடும்ப உறுப்பினர்களை சில விடயங்களுக்காக கடிந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:**
முயற்சிகளில் முத்தான வெற்றி கிட்டும். சில காரியங்களுக்காக அதிகமாக அலைந்தாலும், அதனால், ஆதாயம் பெறுவீர்கள். செலவுகளைக் குறைத்து சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் வழியில் உருவான அன்புத் தொல்லைகள் அகலும். மதிப்பு, கௌரவம் பார்த்து, சில காரியங்களைச் செய்வீர்கள். இனிய அனுபவங்களைப் பெறலாம்

**கன்னி:**
குடும்பத் தேவைகள் நிறைவேறும் நாள். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளுக்காக அலையலாம். பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கும். விருந்தினர் வருகையால், உங்களின் சில வேலைகளில் தடை ஏற்படலாம். வெளியூர்களில் இருக்கும் ஒருவர், உங்களை தொடர்பு கொண்டு பேசலாம்.

**துலாம்:**
வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். வியாபாரிகள் கணிசமான பணவரவுகளைப் பெறலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவதில் இழுபறிகள் காணப்படும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர் சந்திப்பால் மகிழ்ச்சி உண்டு.

**விருச்சிகம்:**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். உறவினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சிகளில் ஈடுபடலாம். உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். இறை வழிபாடு மூலம் அமைதி பெறுவீர்கள். சோம்பல் கூடும்.

**தனுசு:**
சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். வெறுப்பேற்றும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். திட்டமிட்டபடி எந்த வேலையும் முடியாமல் இழுத்தடிக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலை நெருக் கடிகளுக்கு ஆள்படலாம்.

**மகரம்:**
எந்த விடயத்திலும் அஜாக்கிரதையாக இல்லாமல், அக்கறையோடு செயற்படவேண்டும். குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் ஒரு இறுக்கமான சூழ்நிலை நிலவும். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும். நண்பர்களின் கோபத்திற்கு ஆள்படலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். தண்டச் செலவு நேரும்.

**கும்பம்:**
நிதி நிலைமை மேம்படும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உறவுப் பெண்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகள் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மாமன், மைத்துனர்களிடம் உங்களின் பெருமை பற்றி பேசுவீர்கள். வரவேண்டிய பணம் ஒன்றை கேட்டு வாங்குவீர்கள்.

**மீனம்:**
சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள். குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட சிலர் மனம் மாறுவர். பொது விடயங்களில் ஈடுபட்டு பாராட்டுக்களைப் பெறுவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். நீண்ட நாள்களாக பேசாத ஒருவருடன் பேசலாம்.

# யுத்தக் குற்றப் பிசா
# குதறிவிடும் என்ற பீ
# நடுங்கும் படை அதி



விடுதலைப் புலிகளின் முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டம் இலங்கை அரசை ஆட்டிப் படைத்ததோ இல்லையோ, புலிகளுடன் நடந்த இறுதி யுத்தத்தின் விளைவுகள் இலங்கை அரசை இப்போது மீளமுடியாத மிகப்பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது.

புலிகளின் கதை முடிந்தது என்று கொக்கரித்தவர்களை சனல் - 4 வடிவத்தில் இப் போது புலிகளின் ஆவி வந்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

வன்னியில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் பெரிய முள்ளிவாய்க்காலுடன் விவகாரத்தை முற்றிலும் தீர்த்தாகி விட்டது என்று பெருமூச்சு விட்ட இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு இப்போதுதான் உண்மையான சோதனைக் களம் திறந்திருக்கின்றது.

இலங்கை போர்க்குற்றம் புரிந்திருக்கிறது என்ற ஐ.நாவின் அறிக்கை ஒருபுறம், இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தமிழக சட்டமன்றத்தின் தீர்மானம் ஒரு புறம், மனித உரிமை அமைப்புகளும், ஈழ ஆதரவாளர்களும் கொடுத்து வரும் நெருக்கடிகள் மறுபுறம் என்று ராஜபக்ஷ நெருக்கடியின் உச்சத்தில் இருக்கும் இந்தநேரத்தில், இலங்கையின் கொலைக் களங்கள் என்ற சனல்- 4 நிறுவனம் வெளியிட்ட, நெஞ்சை உறைய வைக்கும் வீடியோக் காட்சிகள் இன்னும் நெருக்கடியில் ராஜபக்ஷவைத் தவிக்க வைத்துக் கொண்டிருக்கிறன.

இலங்கையின் கொலைக்களங்கள் என்ற 47 நிமிட வீடியோக் காட்சியை கடந்த மாதம் 14 ஆம் திகதி சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பிய அன்றே அதனைப் பார்த்து பிரிட்டனில் மட்டும் பத்து லட்சம் பேர் பார்த்து அதிர்ச்சியில் உறைந்து போயினர் என்று சில புள்ளிவிவரத் தகவல்கள் கூறுகின்றன. இதே நிலையேதான் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளிலும் கூட.

இந்தியாவிலும் இந்தத் தொலைக்காட்சிக் காணொளி பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது தெரிந்ததுதான். ஆனால், சனல் 4 அம்பலப்படுத்திய உண்மைகளும், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு புட்டு வைத்த நிஜங்களும் இலங்கையில் குறிப்பாகத் தென்னிலங்கை சிங்கள மக்களிடையேயும், பௌத்த - சிங்கள ஆட்சிப் பீடத்தின் மத்தியிலும், பாதுகாப்புப் படைத்தரப்பினருக்குள்ளேயும் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன என்பது தனியாகக் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயமாகும்.

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள எந்த ஊடகத்தைப் பார்த்தாலும் - அது தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களாகட்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற அச்சு ஊடகங்களாகட்டும் எதை நோக்கினாலும் சனல் 4 தொலைக்காட்சி அம்பலப்படுத்தியவை முற்றிலும் பொய்யானவை என முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் எத்தனமே முழு வீச்சில் - முழு மூச்சில் முன்னெடுக்கப்படுவதைக் காணலாம்.

யுத்தக்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான கொடூரங்கள், மோசமான மனித உரிமைமீறல்கள் போன்ற குற்றச்சாட்டுகள் இலங்கை அரசுத் தலைமைக்கும் படைத்தரப்புக்கும் எதிராக சர்வதேச ரீதியில் பெரும் சுனாமியாகச் சீற்றங் கொண்டு எழுவதற்கான முகாந்திரங்கள் வெளிப்படையாகவே தென்படுகின்றன என்ற யதார்த்தத்தை மஹிந்த ராஜபக்ஷ அரசின் பிற மூத்த தலைவர்கள் நன்குணர்ந்துள்ளனர். காதும் காதும் வைத்தாற்போல தங்களுக்குள் அவர்கள் இது பற்றி சீரியஸாகப் பேசிக் கொண்டாலும் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவிடமோ அல்லது அரசில் அதிகாரமிக்கவர்களாக இருக்கும் அவரது சகோதரர்களான பஸில், கோத்தபாய போன்றவர்களிடமோ இது பற்றி முணுமுணுக்கவோ மூச்சுவிடவோ அவர்கள் அஞ்சுகின்றனர். உண்மையைக் கூறப்போய், யதார்த்தத்தை எடுத்துரைக்கப்போய், ராஜபக்ஷ அதிகார பீடத்திடம் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டுமா.என்ற பயம் அவர்களுக்கு.

இவற்றையெல்லாம் மீறி, நாட்டின் எதிர்கால நலனையும் தாம் உட்பட்ட ஆட்சித் தரப்பினரின் எதிர்காலப் பாதுகாப்பையும் கருத்தில் கொண்ட மூத்த அமைச்சர் ஒருவர், சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராகக் கிளர்ந்து வரும் எதிர்ப்புணர்வுகள் மற்றும் அவற்றின் மோசமான விளைவுகள் குறித்து அதிபர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெளிப்படையாக உணர்த்தப்போய், சிங்களத்தில் மிகக் கெட்ட தூஷணை வார்த்தைகளினால் அதிபரிடம் அர்ச்சனை வாங்கிக் கட்டிக்கொண்டு வாயை மூடிக்கொண்டு மௌனியாகத் திரும்பினார் என்கிறது அரசுத்தரப்பு தகவல் ஒன்று.

ஆனால், இந்தப் பிரச்சினை பாதுகாப்புப் படை வட்டாரங்களில் மிக மோசமான, மிக ஆபத்தான நிலைமைகளை ஏற்படுத்தி விட்டிருக்கின்றன என்பது தான் இப்போது வெளியாகிவரும் அதிர்ச்சித் தகவலாகும்.

புலிகளை அழிப்பதற்கு இலங்கை இராணுவத்தின் தளபதியாக இருந்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழிப்பு வேலைகளுக்கான பிரதான முக[illegible]கச் செயற்பட்டவர் ஜெனரல் சரத்பொன்சேகா. மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரில் புலிகளோடு சேர்த்து பல்லாயிரம் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களையும் கொன்றொழிக்கும் அந்த அழிப்பு வேலை பூர்த்தியானதும் பொன்சேகாவை பாதுகாப்புக் கட்டமைப்பில் இருந்தே நெட்டித் தள்ளி வெளியேற்றும் அரசியல் சாணக்கியத்தை ராஜபக்ஷ அண்ட் பிரதர்ஸ் கம்பனி ஆரம்பிக்க, அந்தக் குழுவுக்கு எதிராளியாக அரசியலில் களமிறங்கினார் பொன்சேகா.

யுத்தகளத்தில் தமிழர் அழிப்புப் பணியை கன கச்சிதமாக மேற்கொள்ள பொன்சேகாவுக்கு வாய்ப்பு, வசதி, ஒத்துழைப்புக்களை வழங்கி முழு அளவில் ஊக்குவித்த ராஜபக்ஷ பிரதர்ஸ், அரசியல் களத்தில் அவரைத் தமக்கு எதிராக சற்றும் கூட முன்னேற விடாமல் தடுத்து, சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் நிரந்தரமாக முடக்கினர்.

புலிகளுக்கு எதிரான வெற்றிப்போரின்( ?) இராணுவத் தளபதி, அந்தக் கையோடு ஓய்வுபெற்று, அரசுத் தலைமைக்கு சவால்விடும் அரசியல் எதிரியாக மாறிய போது அதன் தாக்கம் அரச பாதுகாப்புக் கட்டமைப்பிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்த தவறவில்லைதான்.

ஆனாலும், அப்போது பரபரப்பாகவும் வெளிப்படையாகவும் பேசப்பட்ட அந்த அதிர்வலைகளை விட, இப்போது சனல்- 4 வீடியோக் காட்சி மற்றும் ஐ.நா. நிபுணர் குழுவின் உண்மை விளம்பும் அறிக்கை போன்றவை சத்தம் சந்தடியின்றி இலங்கைப் பாதுகாப்புக் கட்டமைப்பின் மையத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கமும் அதிர்வும் மிகமோசமானவை என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து அச்சத்திலும் பீதியிலும் உறைந்து போயிருக்கின்றனர் ராஜபக்ஷ சகோதரர்கள்.

சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு
# பீதியில்
# திகாரிகள்



**புலிகளுக்கு எதிரான வெற்றிப்போரின்(?) இராணுவத் தளபதி, அந்தக் கையோடு ஓய்வுபெற்று, அரசுத் தலைமைக்கு சவால்விடும் அரசியல் எதிரியாக மாறியபோது அதன் தாக்கம் அரச பாதுகாப்புக் கட்டமைப்பிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்த தவறவில்லைதான்.**

பகுத்தி வரும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் கொடூரங்கள், மனித குலத்துக்கு எதிரான நாசகாரக் கொலைகள் போன்ற குற்றச்சாட்டுக்கள் இலங்கை ஆட்சித் தலைமைக்கு எதிராகவே பிரதானமாக முன் வைக்கப்பட்டாலும் அவை படைத்தரப்பின் மூத்த அதிகாரிகளையும் சும்மா விட்டு வைக்கப் போவதில்லை என்று சொல்லப்படுகிறது.

அரசுத் தலைமையைப் பொறுத்தவரை தாம் உயிருடன் இருக்கும் வரை இலங்கையின் ஆட்சிப் பிடியைத் தமது கையில் வைத்திருப்பதற்கான சட்ட மற்றும் அரசமைப்பு மாற்றங்களையும் முன்னேற்பாட்டு முஸ்தீபுகளையும் அதிபர் ராஜபக்ஷ செய்து கொண்டு விட்டதால், ஆட்சிக் கடிவாளம் என்ற பாதுகாப்பைத் தங்கள் வசம் வைத்துக் கொண்டு அவரும் அவரது ஆட்சிப் பீடத்தினரும் தங்களைக் காத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் என்பது மூத்த படை அதிகாரிகளுக்கு நன்கு தெரியும்.

ஆனால், படை அதிகாரிகளைப் பொறுத்தவரை நிலைமை அதுவல்ல. ஐம்பத்தி ஐந்து வயதுக்கு முன்பாக அவர்கள் ஓய்வு பெற்றதும் வீட்டுக்குச் செல்லவேண்டியதுதான். அதன் பின்னர் தமக்கு ஏதும் நேரலாம் என அவர்கள் அஞ்சுகின்றனர், யுத்தக் குற்றப் பிசாசு தங்களைக் கடித்துக் குதறிவிடும் என்ற பீதி அவர்கள் மத்தியில் வலுவாக உருவெடுத்து வருகிறது. ஓய்வு காலத்தின் பின்னர் வெளிநாடுகளுக்கு - குறிப்பாக மேற்கு நாடுகளுக்கு -செல்ல முடியாமல் நாட்டுக்குள்ளேயே முடங்க வேண்டிய அவலமும் தங்களுக்கு நேரும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

அதோடு, இராணுவ அடக்குமுறை ஆட்சிப் போக்கில் ராஜபக்ஷ குடும்பம் முன்னெடுத்து வரும் அடாவடித்தனச் செயற்பாடுகளும் படைத்தரப்புக்குள் பெரும் புகைச்சலைக் கிளப்பியிருக்கின்றன என்ற உளவுத் தகவல்களும் கூட ஆட்சித் தலைமைக்குச் சென்றிருக்கின்றன.

இத்தகைய பின்புலத்தில், படைத்தரப்பிலிருந்து தங்களது அதிகாரக் கட்டமைப்புக்கு எதிரான சதிச் செயல் எத்தனங்கள் எந்தச் சமயத்திலும் முன்னெடுக்கப்பட அதிக வாய்ப்புக்கள் உண்டு என்று ராஜபக்ஷ சகோதரர்கள் அஞ்சுகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

போதாக்குறைக்கு, எந்த அரசியல் நகர்விலும் ஜாதக ஆரூடங்களை அதிகம் நம்பி, அதில் தங்கியிருக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியில், சில முக்கிய சிங்கள சோதிடர்கள் கூறியிருக்கும் ஆரூடங்களும் ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தின் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டிருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

சில பிரபலமான சிங்கள சோதிடர்கள் ராஜபக்ஷ சகோதரர்களின் காதில் இரண்டு விஷயங்களைப் போட்டு வைத்திருக்கின்றார்களாம்.

ஒன்று, - முன்னாள் எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தின் கிரக நிலைகளை ஒத்தனவாக இப்போது மஹிந்த ராஜபக்ஷவின் கிரக நிலைகள் உள்ளன.

மற்றொன்று, - இலங்கையின் முன்னாள் பிரதமரும், பின்னர் திடீர் ஜனாதிபதியாக மாறியவருமான டிங்கிரி பண்டா விஜேதுங்காவின் கிரகநிலைகளும் இப்போது பிரதமராக இருக்கும் டி.எம்.ஜயரட்னவின் கிரக நிலைகளும் ஒத்தவையாக உள்ளன.

இந்தத் தகவல்கள் ராஜபக்ஷ சகோதரர்களைப் பெரும் பீதிக்குள் ஆழ்த்தியிருக்கின்றன.

ஆட்சியிலும், அதிகாரப்பிடியிலும் வலுவாகவும், நாட்டுக்குள் மிகப் பெரும் அரசியல் செல்வாக்குடனும் விளங்கிய எகிப்திய அதிபர் அன்வர் சதாத் தமது படைத்தரப்பு வீரர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஒரே நாளில் அதிகாரம் கைமாறும் நிலைமை ஏற்பட்டது.

அதேபோன்று, ஆட்சியிலும், அதிகாரப் பிடியிலும், அரசியல் செல்வாக்கிலும் வலுவாக இருந்த இலங்கையின் முன்னாள் அதிபர் ரணசிங்க பிரேமதாஸ, தமக்கு அடுத்த கட்டத்தில் கட்சிக்குள் வலுவான எதிரி ஒருவர் புதிதாகக் கிளம்பாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, செல்வாக்கு இல்லாத டி.பி.விஜேதுங்காவை தமது இறப்பர் முத்திரையை பிரதமராக வைத்திருந்தார். அதே வழிவகையைப் பின்பற்றி இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அரசியல் செல்வாக்கோ, அதிகார வலிமையோ, தனித்துவ மிடுக்கோ இல்லாத டி.எம். ஜயரட்னவை பிரதமராக வைத்திருக்கின்றார்.

ஆனால், பிரேமதாஸ எதிர்பாராதவை நடந்தன. புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் அவர் கொல்லப்பட, அதுவரை வலிமையற்ற இறப்பர் முத்திரைப் பிரதமராக இருந்த டி.பி.விஜேதுங்க, அடுத்த சில மணி நேரத்தில் அதிகாரத்தின் உச்சிக்கு வந்தார்.

அதே விஜேதுங்கவின் கிரக நிலைமைதான் இன்றைய பிரதமருக்கும். அவரும் ஒரே நாளில் அதிகாரச் செங்கோலை வலுவோடு கைப்பற்றி உறுதியாகும் நிலைமை வரலாம் என்பதே சிங்களச் சோதிடர்கள் எச்சரிக்கும் ஆரூடம் எனக் கூறப்படுகின்றது.

இதனால், கலங்கிப்போயிருக்கும் ராஜபக்ஷ சகோதரர்கள் தங்களில் ஒவ்வொருவருக்குமான பாதுகாப்பைப் - புலிகள் உறுதியாகச் செயற்பட்ட காலத்தை விடவும் இப்போது பல மடங்காக அதிகரித்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. முப்படைகளின் தளகர்த்தர் என்ற வகையில் நாட்டின் ஜனாதிபதி, இராணுவத்தின் ஒரு பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை அண்மையில் ஏற்றுக் கொள்ள விருந்தார். கடைசி நேரத்தில் அந்த அணி வகுப்பில் ஈடுபடவிருந்த சகல படையினரது துப்பாக்கிகளும் திடீரென வந்திறங்கிய விசேட குழுவினரால் அதிரடியாகச் சோதனையிடப் பட்டன. அந்தத் துப்பாக்கிகளில் எதிலாவது உயிர் ரவைகள் இருக்கின்றனவா என்றுதான் துருவித் துருவிப் பார்க்கப்பட்டதாம்.

அந்தளவுக்கு, புலிகள் வலுவாக இல்லாத இந்தக் காலகட்டத்திலும் படுபீதிக்குள் மூழ்கிக் கிடக்கின்றது ராஜபக்ஷவின் அதிகாரபீடம்.

எந்தப் புற்றுக்குள் இருந்து எந்தப் பாம்பு, எந்தச் சமயத்தில் சீறி எழும் என்பது கூற முடியாத விஷயம்தானே? அந்த நிலைமை தான் இன்று இலங்கைப் படைத்துறைக் கட்டமைப்புக்குள்ளும்! எதுவும் எந்தநேரமும் நடக்கலாம் என்ற பீதி நிலைமைதான் இலங்கையில் நீடிக்கின்றது!

நன்றி:சூரியக்கதிர்

## இறைவனை விட மேலானது எது



எனது நண்பர் ஒருவர் ஆன்மீகத்தின் மீது மிகுந்த ஈடுபாடு உள்ளவர். அவர் என்னைப் பார்த்து கேள்வி ஒன்று கேட்டார். "இறைவனை விட மேலானது எது?" என்பது தான் அவரது கேள்வி

எனக்கு எதுவும் புரியவில்லை. அவர் உண்மையிலேயே ஆன்மீக வாதிதானா என்கின்ற சந்தேகம் எனக்குள் துளிர்விட ஆரம்பித்தது. இதனைப் புரிந்துகொண்டு அவரே அதுபற்றி விளக்க ஆரம்பித்தார்.

ஒருநாள் நாராயணன், நாரதரைக் கூப்பிட்டு ஒரு கேள்வி கேட்டார். "நாரதரே! பஞ்சபூதங்களில் முக்கியமானது எது?"

"பஞ்சபூதங்களில் தண்ணீர்தான் மிகவும் முக்கியமானது!" என்று பதிலளித்தார் நாரதர்.

"அப்படியா?" என்றார் நாராயணன்.

"ஆமாம்...... ஏனென்றால், உலகின் முக்கால் பாகமும் சூழ்ந்திருப்பது தண்ணீர்தான். நிலப்பகுதி கால் பாகம்தானே!"

'எனக்கு அப்படித் தோன்றவில்லை!" என்றார் நாராயணன்

"என்ன சொல்கிறீர்கள்? என்றார் நாரதர்.

"இந்தக் கடலை அகத்தியர் ஒரே மடக்கில் குடித்துவிட்டாரே?" என்று கேட்டார் நாராயணன்.

"ஆமாம், அதுவும் உண்மைதான்!" என்றார் நாரதர்.

"இப்போது சொல்லும்! பெரியது எது? தண்ணீரா, அகத்தியரா?" என்றார் நாரதர்.

"அகத்தியர்தான்! ஆனால் இன்னொன்றையும் யோசிக்க வேண்டியிருக்கிறது!" என்றார் நாராயணன்.

"என்ன சுவாமி.....குழம்புகிறீர்களே!" என்றார் நாராயணன்.

"அது வழக்கமாக நீர் செய்கின்ற வேலை! அதை இன்று நான் செய்யக்கூடாதா?" என்றார் நாரதர்.

"சரி.... செய்யுங்கள்!"

"அகத்தியர் பெரியவர்தான் ஆனால், ஆகாயத்தில் இந்த அகத்தியர் ஒருசிறு நட்சத்திரமாக அல்லவா இருக்கிறார்?" என்று கேட்டார் நாரதர்.

'உண்மைதான்!'

"இப்போது சொல்லும்.... அகத்தியர் பெரியவரா? ஆகாயம் பெரியதா?"

"ஒப்புக்கொள்கிறேன் ஆகாயம்தான் பெரியது!"

"ஆனால்....!

"என்ன ஆனால் மறுபடியும் குழப்பமா?"

ஆகாயம் பெரியதுதான். ஆனால், வாமன் அவதாரம் தெரியுமல்லவா? மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் கேட்டார் அவர் கொடுத்தார்.இவர் அளந்தார் பூமி முழுவதும் முழு அடி! இரண்டாவது அடியால் ஆகாயத்தை அளந்தார். மூன்றாவது அடிக்கு இடமில்லை. மகாபலிச்சக்கரவர்த்தி தன் தலையைக் கொடுத்தார் அல்லவா?"

"ஆமாம்!"

"அதற்காக இப்போது உங்கள் தலையை ஏன் சொரிகிறீர்கள்?"

"இப்போது என்ன கேட்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது அதனால்தான் தலை சொறிகிறேன்!" என்றார் நாரதர்.

"என்ன கேட்கப்போகிறேன்?"

"இறைவன் பெரியவரா? ஆகாயம் பெரியதா? என்று தானே கேட்கப்போகிறீர்கள்!"

"ஆமாம் அதுதான் என் கேள்வி?"

"சுவாமி! இறைவனின் திருவடி மட்டுமே ஆகாயத்தை அளந்தது என்றால் இறைவனது முழு உருவம் எப்படி இருக்கும்? யோசித்தால் மயக்கம் வருகிறது. ஆகவே கடவுளே பெரியவர்!"

"ஆனாலும் அப்படிப்பட்ட கடவுள், ஓர் இடத்தில் சிறைப்பட்டிருக்கிறாரே.....?" என்றார் நாராயணர்.

"ஆண்டவனே சிறைபட்டிருக்கிறாரா? அப்படிப்பட்ட அந்தச் சிறை எங்கே இருக்கிறது. அதன் பெயர் என்ன?" என்று கேட்டார் நாரதர்.

"அந்த சிறைதான் அடியவரின் இதயம்!" என்றவர் நாராயணனிடம் பேசி பாரதம் புரிந்து கொண்ட உண்மையை நண்பனிடம் பேசி நானும் புரிந்து கொண்டேன்!

ஊரெல்லாம் நாம் தேடிக் கொண்டிருக்கும் ஒன்று எமக்குள்ளே ஒளிந்து கொண்டிருக்கிறது. அதன் பெயர்தான் அன்பு.

அந்த அன்பைத்தான் "கடவுள்" என்று அடையாளம் காட்டுகிறார் திருமூலர்!

அன்பாய் இருங்கள், ஆனந்தம் கிடைக்கும். அதுவே ஆண்டவனின் தரிசனம்!

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
# கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



பூ. பரமதயாளன்,
சது/ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம்,
சம்மாந்துறை.

பரீட்சை இலக்கம்: 08


## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:....................... வினாத்தாள்-1 நேரம்: 45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி விடையளிக்கக.


**✱ வேறுபட்ட உருவின் கீழ்க்கோடிடுக.**

01.




1) 2) 3) 4)

02.



1) 2) 3) 4)

03.



1) 2) 3) 4)

**✱ பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

04. பாடசாலை ஒன்றிற்கான ஒழுங்குவிதியாக அமையாதது,
1) பாடசாலைச் சீருடை அணிதல்.
2) வலது பக்கமாகச் செல்லுதல்.
3) பாடசாலை இலச்சினை அணிதல்.
4) ஆசிரியர் சொற்படி நடத்தல்.

05. யோகாசனப் பயிற்சியைத் தொடர்ந்து செய்வதால் தவிர்க்கக்கூடிய நோய்,
1) கண்டமாலை 2) மாலைக்கண் நோய்
3) ஆஸ்துமா 4) டெங்குக்காய்ச்சல்

06. குளமொன்றில் எப்போதும் இருப்பது,
1) மீன் 2) நீர் 3) தாமரை 4) கரை

07. கற்களின் கூட்டம் குவியல் போல மலைகளின் கூட்டம்,
1) நிரை 2) தொடர் 3) குழாம் 4) தோப்பு

**✱ இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**


08. பூனை வாயில் அகப்பட்ட எலி ............................ துடித்தது.
1) வலியால் 2) வளியால் 3) வழியால்

09. கண்ணன் தன் தாயுடன் ..................... விட்டுப் பேசினான்.
1) மணம் 2) மனம் 3) மநம்

10. பாடசாலையில் .................... விழா இடம்பெற்றது.
1) கலை 2) களை 3) கழை

**✱ அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.**

11.




1) 2) 3)

12.



1) 2) 3)

13.



1) 2) 3)

**✱ வேறுபட்ட சொல்லின் கீழ்க்கோடிடுக.**

14. நீலம், நிறம், மஞ்சள், பச்சை, சிவப்பு

15. இலங்கை, இந்தியா, கொழும்பு, அமெரிக்கா, ஜப்பான்

16. காகம், வௌவால், கொக்கு, கிளி, ஆந்தை

17. வள்ளம், கப்பல், தோணி, படகு, விமானம்

**✱ அடுத்து வரவேண்டியதைத் தெரிவுசெய்க**


18. 5328 → 3285 → 2853 → ☐
1) 8532 2) 8523 3) 5382 4) 8352

19. APPLE → ELEPHANT → TEMPLE →
1) MANGO 2) CAT 3) EXAME 4) DOG

20. பார் → பாடம் → பாட்டன் →
1) பாரம் 2) பாசாங்கு 3) பாரதியார் 4) பம்பரம்


**✱ கோலத்தை அவதானித்து இடைவெளிக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

21.





1) 2 2) 3 3) 4 4) 5

22.





1) 7 2) 8 3) 9 4) 10

**✱ அடைப்பினுள் உள்ள தகவலைப் பயன்படுத்தி விடை காண்க.**





23. மாம்பழமொன்றின் விலை யாது?
1) 10.00 2) 40.00 3) 25.00 4) 15.00

24.




இன் விலை யாது?
1) 80.00 2) 100.00 3) 160.00 4) 60.00

25. மிகச் சரியான தொடர்பு




26. இரு எண்களின் கூட்டுத்தொகை 25 ஆகும். அவ்விரு எண்களுக்கிடையிலான வித்தியாசம் 15 ஆகும். அவ்விரு எண்களும்,
1) 15, 10 2) 40, 10 3) 20, 5 4) 12, 13

27. வீதியொன்றில் பச்சை, சிவப்பு, நீலம் என்ற ஒழுங்கில் கொடிகள் பறக்கின்றன எனின், 313ஆவது கொடியின் நிறம் யாது?
1) பச்சை 2) சிவப்பு 3) நீலம் 4) மஞ்சள்

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுவோம்! பாடுவோம்!!

காலை புலர்ந்த சில மணி நேரத்துக்குப் பின்னர் அந்த இளைஞர்கள் வெகுவேகமாக மோட்டார் சைக்கிள்களில் ஏதோவொரு அவசரத்தனத்தோடு விரைந்துகொண்டிருந்தார்கள். தாம் நினைத்த ஒன்றைச் செய்துமுடித்துவிடவேண்டுமென்ற வெறி அவர்கள் அனைவரிடமும் தொற்றியிருந்தது. ஒரு 10 நிமிட மோட்டர் சைக்கிள் ஓட்டத்துக்குப் பின்னர் அவர்களின் இலக்கை நெருங்கியிருந்தார்கள்.

அந்த இலக்கு-

மிக அமைதியாக இருந்த ஒரு நாற்சந்திதான்.

வந்தவர்களில் இருவர் அக்கம் பக்கம் நோட்டமிட்டபடி ரோந்து வரத்தொடங்கினார்கள். மற்றவர்கள் தாங்கள் கொண்டு வந்த பொருள்களை உரிய இடங்களில் பொருத்தத் தொடங்கினர். இடையிடையே காலையில் ஏதோ முக்கிய விடயமாக அந்தச் சந்தியால் யாரேனும் வருவதைக் கண்டுவிட்டால் ரோந்தில் நின்றிருந்த இருவரும் மெலிதான சீழ்க்கை ஒலியை எழுப்ப, மற்றவர்கள் உஷாராகிவிடுவார்கள். தாம் வந்த மோட்டார் சைக்கிள்களில் ஒன்று பழுதடைந்துவிட்டதைப் போன்ற பாவனையோடு அதனை ஆராய்ந்துகொண்டிருக்க, வழியால் செல்பவர்கள் எவ்வித சந்தேகமுமின்றி கடந்துவிட்டிருப்பார்கள். அதன் பின்னர் பழையபடி, வியர்த்து விறுவிறுக்கத் தம் கருமமே கண்ணாயினர். ஒருவழியாக நினைத்த வேலையை எவரும் அறியாவண்ணம் முடித்துவிட்டார்கள்.

சந்தைக்கு கத்தரிக்காய் கொண்டுசென்ற முதியவர்தான் இளைஞர்களின் வீரதீரச்செயலை முதன் முதலில் காணநேர்ந்தது.

அவருக்கு அதைக் கண்டபின்னர் என்ன செய்வதென்று தெரியவில்லை. சந்தைக்குச் சென்றதும் முதல் வேலையாகத் தான் கண்டகாட்சியை விவரித்தார். கேட்டவர்களின் கண்கள் அகலவிரிந்தன.

''எட, இந்தக் காலத்தில இப்பிடியா?'' என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டார்கள். தம் செல்போன்களுக்கு உயிர் கொடுத்து சம்பவத்தை ஊரெங்கும் ஒலிபரப்பினர். எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு சந்திக்கு ஓடினார்கள். முகம் தெரியா இளைஞர்களின் 'காலம் கருதிய' செயலைக் கண்ணுற்று மெய்சிலிர்த் தார்கள்.

உங்கள் வாசிப்பைக் குறுக்கீடு செய்து, ஒரு கேள்வி.(பயப்படாதீர்கள்!விக்கிரமாதித்தன் கதைகளில் வருகின்ற வேதாளம் சொல்வது போல் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாவிட்டால் உங்கள் தலையொன்றும் வெடித்துவிடாது) ஊரே அண்ணாந்து பார்க்குமளவுக்கு அந்த இளைஞர்கள் என்ன செய்திருப்பார்கள்?

உங்கள் கற்பனைக் குதிரையைக் கொஞ்சம் ஓடவிட்டு யோசியுங்கள் பார்க்கலாம்.

'வீதியில் தேங்கியிருந்த குப்பைகளை அகற்றி சிரமதானம் செய்திருப்பார்களா?'

'எப்போதும் வெயில் சுட்டெரிக்கும் அந்தச் சந்தியில் நாலைந்து மரங்களை நட்டிருப்பார்களோ?'

'போக்குவரத்துக்கு இடையூறாக வீதிக்குக் குறுக்கே தொங்கிக் கொண்டிருந்த வயர்களைச் சீர்செய்திருப்பார்களோ?'


'போரால் சிதைந்த வாழ்வோடு இன்னமும் அல்லாடும் மக்களுக்காக உதவி செய்யக்கோரும் பதாகைகள் எதையாவது தொங்கவிட்டிருப்பார்களா?'

## கோணல் கோலங்கள்

அவ்வாறான நல்ல காரியங்கள் ஒன்றுமே நடந்துவிடவில்லை. அங்கு கூடியவர்கள் இலட்சியவாதிகளோ, மண்ணின் மைந்தர்களோ அல்லர். வெறும் கூத்தாடிகள்தான் அவர்கள். அந்தப் பிரகிருதிகளின் சாதனையை அறிந்தால் நீங்கள் வெட்கித் தலை குனிவீர்கள். அது என்ன காரியம் தெரியுமா...?

வேறொன்றுமில்லை, தென்னிந்தியச் சினிமா நடிகரான இளையதளபதி விஜயின் பிறந்தநாளுக்காக தம் நித்திரையைக் கூடத் துச்சமென மதித்து, சந்தியை அலங்கரித்துத் தம்மைப் பற்றிய அலங்கோலச்சித்திரமொன்றை உருவாக்கியிருந்தார்கள் அந்த இளைஞர்கள்.

மின்சாரத் தூண் ஒன்றில் விஜயின் வெவ்வேறு விதமான புகைப்படங்களைத் தொங்கவிட்டு அதன் கீழ் சவுக்கு மரத்தால் அலங்கரித்து விஜய்க்கான தம் பிறந்த நாள் கொண்டாட் டங்களை அரங்கேற்றியிருந்தார்கள்.



போதாக்குறைக்கு ஏராளமான தேங்காய்களை எடுத்து வந்து நேர்த்திக் கடன்போல அங்கு சிதறு தேங்காய் அடித்தும் தம் விஜய் பக்தியை வெளிக் காட்டிக் கொண்டார்கள். அந்தப் பித்தர்களில் சிலர் மின்சாரத் தூணைச் சுற்றி 'பிரதட்டை' செய்ததாகவும் மக்கள் பேசிக் கொண்டார்கள்.

தாழ்வுற்று வறுமை மிஞ்சி, எம்மினம் பாழ்பட்டு நிற்கும் இவ்வேளையில் யாரோ ஒரு அரிதாரக் கோமாளிக்காக எம் இளைஞர்கள் பிறந்தநாள் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள்.

கொற்றாவத்தை செட்டித்தறை பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவே இந்தக் கண்றாவிக் காட்சிகள் ஜூன் 22 அன்று அரங்கேறின.

குறித்த இடத்தில் மாத்திரமல்லாது குடாநாட்டின் ஏனைய சில இடங்களிலும் இத்தகைய கோமாளிக் கூத்துக்கள் நடந்துள்ளன என்று அறிய முடிகின்றது.

**ஓடுகாலி**

தம்முடைய சொத்துக்களைப் பெருக்குவதற்காக வீர வசனம் பேசி நடிக்கும். கதாநாயகர்களுக்கு விழா எடுக்கத் தோன்றும் இளைஞர்களுக்கு கண் முன்னே வாழ்விழந்து நிற்கும் வன்னி மக்களின் அவலம் தெரியவில்லையா? வீணாக மின்சாரத் தூணை அழகுபடுத்திப்பார்க்கும் நேரத்துக்கும் செலவுக்கும் வீடிழந்து நிற்கும் ஒரு அகதிக் குடும்பத்துக்கு ஒரு குடிசையைக் கட்டிக் கொடுத்திருந்தாலாவது புண்ணியமாய்ப் போயிருக்கும். இனியும் நிறைய நடிகர்களின் பிறந்தநாள்கள் வர இருக்கின்றன.

இளைஞர்களே! அதையும் இதைவிடச் சிறப் பாகக் கொண்டாடி மகிழுங்கள். உங்கள் சுற்றம் மண் ணில் புரண்டு அழிந்து போகட்டும். அதைப்பற்றி எங்களுக்கு என்ன அக்கறை? எங்களுக்கு எங்கள் நடிகர்கள்தானே முக்கியம். ✱

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

28. வரிசையொன்றில் மூன்றாவதாக நிற்கும் கேமாவிற்குப் பின்னால் 12 பேர் நிற்கின்றனர் எனின், அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நிற்கின்றனர்?
   1) 14 2) 15 3) 16 4) 17

29. இரு மின்கம்பங்களுக்கிடையே 5 அலங்காரக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன எனின், அவ்வாறான 10 மின்கம்பங்களுக்கிடையே எத்தனை கொடிகள் காணப்படும்?
   1) 25 2) 50 3) 45 4) 60

✱ பின்வரும் கோலத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

○ + △ = 10
□ + ○ = 5
□ + □ = 4

30. △ இன் பெறுமானம்
   1) 4 2) 5 3) 6 4) 7

31. ○ இன் பெறுமானம்
   1) 2 2) 3 3) 4 4) 5

32. △ + □ இன் பெறுமானம்
   1) 7 2) 8 3) 9 4) 10

33. △ × ○ இன் பெறுமானம்
   1) 10 2) 15 3) 20 4) 21

✱ பாடலில் வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

நூலகம் என்பது தேன் கூடு
நூல் ஒவ்வொன்றும் தேன் துளிகள்
நூலகம் என்பது பூங்காடு
நூறாயிரமாம் நன் மலர்கள்

34. பாடலில் நூலகம் எவற்றிற்கு ஒப்பாக கூறப்படுகிறது?
   ..................................................................

35. நூல் என்பதன் ஒத்த சொல்லைத் தருக?
   ..................................................................

36. நூல் ஒவ்வொன்றும் எப்படிப்பட்டவை?
   ..................................................................

37. ''நூறாயிரமாம்'' என்பதைப் பிரித்தெழுதுக.
   ..................................................................

✱ அறிவுறுத்தல்களை விளங்கி விடை எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | 4 | 1 | V | A | 4 | M |
| 3 | 2 | A | N | 9 | 6 | V |
| V | 5 | 3 | V | 4 | A | M |
| N | B | A | 1 | N | P | 4 |
| S | V | 4 | 3 | V | S | V |

38. இவ் நெய்யரியில் ஏ என்ற எழுத்து 7 தடவை இடம்பெறின், டீ என்ற எழுத்தைச் சுற்றி வட்டமிடுக. இல்லை எனின் P என்ற எழுத்தில் 'ஒ' என்ற அடையாளம் இடுக.

39. இலக்கம் 3 மூன்று தடவைகள் இடம்பெறின் இலக்கம் 9 இல் ✓ என்ற அடையாளமிடுக. இல்லையெனின், அவ்விலக்கத்தில் 'ஒ' என்ற அடையாளமிடுக.


40. யு, 4 ஆகியன சம தடவைகள் இடம்பெறின் இலக்கம் 2 ஐச் சுற்றி சதுரமொன்று வரைக. இல்லை எனின், அந்த இலக்கத்தைச்சுற்றி முக்கோணமொன்று வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
06 ஜூலை 2011 புதன்கிழமை

# கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

# இரதோற்சவ சிறப்பு மலர் – 06.07.2011



## ஆலய பிரதம குருவின் ஆசி



இந்து ஆலயங்களில் நைமித்திய விழாவாக நடைபெறும் மகோற்சவம் சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்ரகம் என்று கூறப்படும் பஞ்ச கிருத்தியங்களை ஞாபகப்படுத்தும் விழாவாக அமைகின்றது. இந்த விழாக்காலங்களில் சைவமக்களாகிய நாம் ஆசாரத்துடன் தூய்மையாக விரதமிருந்து நித்தமும் எம்பிரான் ஆலயங்களுக்குச் சென்று விழாக்காலங்களில் செய்யவேண்டிய சரியைத் தொண்டுகள் செய்து எங்களது மனங்களில் எழுகின்ற பஞ்சமா பாதகங்களாகிய தீய எண்ணங்கள் மறையவேண்டும் எனப் பிரார்த்தித்து மனத்தூய்மை பெற வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதனை வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் யாவும் வலியுறுத்திக் கூறுகின்றன. ஆகவே இன்று நடைபெறுகின்ற ஆசிமட அரசடி விநாயகப் பெருமானுடைய தேர்த்திருவிழாவில் கலந்து ஔவைப்பாட்டி கூறுகின்ற முறையில் பூக்கொண்டு தப்பார்திருமேனி தும்பிக்கையான் பாதம் பணிந்து வாக்குசித்தி, நல்லமனம், மகாலட்சுமி அருட்பார்வையால் அஷ்டலட்சுமி கடாட்சம், உடம்பில் குறையற்ற தன்மை எனக் கணபதியுடைய கருணை வெள்ளத்தை சைவ மக்களாகிய எல்லோரும் பெற கருணைக் கடலாம் கணபதியை பிரார்த்தித்து ஆசி கூறி வணங்குகிறேன்.

ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ.இ.ரமணிதரக்குருக்கள்.

## வரலாற்றுச் சிறப்புமிக்க அரசடி விநாயகர்



ஓரெழுத்து மந்திரத்தால் உலகையே ஆளுகின்ற
ஓங்கார கணபதியே சரணம் ஐயா!

ஞானம்; ண- முத்தி; பதி- தலைவன். ஆகவே ஞானம், முத்தி இரண்டுக்கும் தலைவனாக இருப்பவரே கணபதி.

பிள்ளையென்றாலே மகன்தான். பிள்ளையார் என்றால் தலைசிறந்த மகன். பிள்ளைகளுக்கெல்லாம் மூத்த பிள்ளை. ஆகவே மூத்த பிள்ளையே பிள்ளையார். ஊருக்கும் உலகுக்கும் செல்லப்பிள்ளையாகவும் அதேநேரம் உலகை அளந்த உத்தமனுக்கே முதல்வனாக இருப்பவரும் அவரே. குழந்தைகள் விரும்பும் தித்திப்பான மோதகமே அவருக்குப் பிடித்த உணவு. மாவைப் போன்ற வெளி அண்டத்துக்குள் பூரணமாக அமர்ந்து அருள்பாலிக்கும் தத்துவத்தை உணர்த்தும் மோதகத்தால் தம்மை அர்ச்சிப்பவருக்கு மனமுவர்ந்து அவர் அருள் செய்வார்.மத்தள வயிற்றுடனும் ஆனை முகத்துடனும் ஐந்து கரத்துடனும் குறுகிய கால்களுடனும் வேடிக்கையாகவும் மறுபுறத்தில் வினை தீர்க்கும் மூலவனாகவும் மிக அற்புதமான திருக்கோலத்தில் எழுந்தருளுபவர்.

எமது ஆசிமட அரசடி விநாயகப்பெருமான் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே தானாகத் தோன்றி இந்த ஆலயத்தில் கோயில் கொண்டு எமது கிராமத்தை வளமுற வாழச்செய்து வருகின்றார். ஆண்டுதோறும் இடம்பெறும் மகோற்சவ காலங்களை இக் கிராமத்துக்குத் தேவலோக இன்பம் கிடைக்கும் காலம் எனலாம். சகல தேவர்களும் வந்து இறங்கி ஆசீர்வதிப்பது போன்ற உணர்வைப் பெறுகின்ற காலம். எல்லையற்ற கருணை உள்ளத்தோடு எம் பெருமான் கேட்டவர்க்குக் கேட்ட வரம் ஈயத் தயாராகவுள்ள அற்புதமான காலம். அலங்கார ரூபனாக அருட்கடாச்சனாக எழுந்தருளும் இந்த விசேட காலப்பகுதியில் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவுக்குத் தம் மனத்தாலும் சரீரத்தாலும் பொருளாலும் தம்மை அர்ப்பணித்து இறை நாமம் உச்சரித்துச் சகல சம்பத்தையும் அடைய முடியும்.

தேரில் ஆரோகணம், அவரோகணம் என்பவை மிகப் புனிதமான நிகழ்வுகளாகும். இதில் அடியவர்கள் கட்டாயம் பங்குபற்றித் தம் பிறவிப் பயனை வெல்ல வேண்டும்.

18 ஆம் நூற்றாண்டில் இருந்து படிப்படியாக வளர்ந்து இன்றைய சிறப்பான நிலை எய்த முக்கியமாக இந்த ஆலயத்தின் அர்ச்சகர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, கிராம மக்கள், அயற் கிராம மக்கள், வெளிநாடுகளில் வதியும் எம்மவர் முதலிய அனைவரதும் மனமுவர்ந்த அர்ப்பணிப்புக்களும் அன்பளிப்புகளும் தொண்டுகளுமே பெரிதும் உதவி வந்துள்ளன. தொடர்ந்தும் அனைவரும் மனப்பூர்வமாக ஒத்துழைத்து எமது ஆலய வளர்ச்சிக்கு உதவி நிறைவான வாழ்வைப்பெற்று வாழ மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

''மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

லயன் த.இ.பாலசுந்தரம் J.P.,MJF தலைவர், ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

## துன்பங்கள் துடைக்கும் விநாயகர்



அல்லல்போம் வல்வினை போம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத்துயரம் போம் - நல்ல
குணமதிகமாம் கோண்டாவில் அரசடி மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்

ஓங்கார மூர்த்தியாகிய விநாயகப் பெருமானின் திருவடிகளை நினைத்துக் கைகூப்பித் தொழுதால் துன்பம், தீவினை, நீங்காத்துயரம் யாவும் நீங்கி நன்மைகள் அதிகமாகும். எம் ஆசிமட அரசடி விநாயகரைத் தொழும் அடியார்களின் துன்பங்கள் யாவும் பகலவனைக் கண்ட பனி போல பறந்தோடும். தம்மை வழிபட்டுத் தொழும் எந்தக் கருமமும் விக்கினமின்றி நிறைவேற்றித்தரும் விக்னேஸ்வரனாவார். அவர், 'முப்புரம் எரிசெய்த அச்சிவம் உறை ரதம் அச்சது பொடி செய்த அதிதீரர்' எந்தக் கோயிலானாலும் அங்கு முதல் வணக்கத்துக்கு உரியவராக இருப்பவர் பிள்ளையாரே. இது அவருக்கு சிவனே அளித்த வரமாகும். மஞ்சள், சந்தனம், களிமண், சாணம் போன்ற எப்பொருளாலாவது பிடித்து வைத்து அறுகு சாத்தினால் அது எந்த இடமாக இருந்தாலும் அங்கு மனம் விரும்பி எழுந்தருளி அருள்பாலிக்கும் மிக எளிமையானவர் அவர்.

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்.

அறுகு விநாயகருக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. அவருடைய திருமேனியின் வெப்பத்தை தணிக்க அது ஒன்றே உதவியது. அது மட்டுமன்றி அறுகு வேரூன்றினால் இலகுவில் அழியாது. அதேபோல் அவர் எம்மீது அருள் சுரக்கத் தொடங்கிவிட்டால் அது வேரூன்றி பல்கிப் பெருகிப் பலன் தரும். இன்று திருத்தேரேறித் தன்னை பரவும் அடியவர்களுடைய பாவங்களை அழித்து அருள்பாலிக்க வரும் எம் ஆசிமட அரசடி விநாயகரை நம்பிக்கையோடு துதிப்போம். அத் தும்பிக்கையே எந் நாளும் துணை எனக் கொள்வோம். இந்த ஆலயமும் இதனைச் சேர்ந்த கோண்டாவில் சமூகமும் அயற் கிராமத்தவர்களும் அனைத்து உலகமும் மண்வளமும் மனவளமும் நிறைந்து அன்பாய், அமைதியாய், அருமையாய் நிறைந்து பொலிந்து வாழ மனதார வாழ்த்துகின்றேன்.

'அத்திமுகத்து உத்தமனை நித்தம் நினை சித்தமே!'

இ.குலசிங்கம்
பொருளாளர், ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

## அற்புதங்கள் நிகழும் ஆலயம்



''கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்''

இவை ஆன்றோர் மொழிகளாகும். ஆ+லயம் ஆன்மாக்கள் லயித்து ஒன்றுபடும் இடமே ஆலயம். எங்கும் அருவமாய் வியாபித்துள்ள இறைவனை உருவத்திருமேனியிற் கண்டு வணங்கித் திருவருள் பெற்று உய்வதற்குரிய இடம் ஆலயமாகும்.

திக்கெட்டிலும் திரும்பும் பக்கமெல்லாம் திருமிகு ஆலயங்கள் செறிந்துள்ள புகழ்பூத்த எமது கோண்டாவில் திருப்பதியிலே நடுநாயகமாக வீற்றிருக்கும் எமது ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் பல நூற்றாண்டு காலத்தொன்மை வாய்ந்தது. 18 ஆம் நூற்றாண்டளவில் வயல் பிரதேசமாக இருந்த இந்த ஆலயச் சுற்றாடலில் ஒரு சமயம் உழவர் கள் உழுது கொண்டிருந்தபோது இரத்தம் தோய்ந்த மண் காணப்பட்டதென்றும், அந்த இடத்தை அகழ்ந்து பார்த்தபோது முழு உருவிலான விநாயக விக்கிரகம் இருந்ததாகவும் வரலாறு உண்டு. அந்த அற்புத விக்கிரகத்தைக் கிராம மக்கள் பயபக்தியோடு அந்த இடத்தில் மூல விக்கிரகமாகப் பிரதிஷ்டை செய்து அதன் அருகில் நிழலுக்காக ஓர் அரச மரத்தையும் நட்டு வைத்தனர். அதுவே இன்று இந்த ஆலயத்தின் உள்ளே தலவிருட்சமாக விளைந்து பரப்பி நிற்கின்றது. ஆரம்பத்தில் ஆசிமடப் பெண்கள் இருவரும் தொடர்ந்து ஏரம்பக் குருக்களும் அவரைச் சார்ந்த பூசகர்களும் பூசை செய்து வந்தனர். 1994 இற்குப் பின்னர் எமது ஆலயத்தில் பிராமண அர்ச்சகர்களே பூசை செய்து வருகின்றனர். ஆசிமடத்துக்குப் பக்கத்திலே இருந்த சுமைதாங்கிக் கல் பிற்காலத்தில் ஆலய தேர் அமைவிடம் அமைப்பதற்காக இடிக்கப்பட்டதாயினும் ஆசிமடம் தற்போதும் இளைப்பாறும் மடமாக இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். 'ஆசிமட அரசடி விநாயகர்' என்ற திருப்பெயரும் அந்த ஆசிமட பெண்களாலேயே சூட்டப்பட்ட பெருமையுடையது. எம்பெருமானின் திருவுருவின் பின்புறத்தில் உழும்போது ஏரினால் ஏற்பட்ட அடையாளம் இன்றும் இருப்பது இந்த அற்புதத்துக்குச் தக்கசான்றாகும்.

காலப் போக்கில் கொடிமரமும் தேரும் செய்யப்பட்டு மகோற்சவங்களும் சிறப்பாக இடம்பெற ஆரம்பித்தன. 1944 இல் இந்த ஆலயம் ஒரு பொதுக் கோயிலாக யாழ்.நீதிமன்றத்தால் பிரகடனம் செய்யப்பட்டது. 1974 இல் புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த பெருமை எமது கிராம விநாயகஅடியார்களைச் சாரும். 1976 இல் ஸ்ரீ வேணுகோபாலர், ஸ்ரீமகாலட்சுமி, வள்ளிதெய்வானை சமேத ஸ்ரீசுப்பிரமணியர், ஸ்ரீசந்தான கோபாலர், ஸ்ரீவைரவர் ஆகிய திருவுருவங்களுக்குத் தனித்தனிக் கோயில்களை அமைத்து எழுந்தருளச் செய்த பெருமையும் எம்பெருமான் அடியவரையே சாரும். 1993 இல் அருள் ஒழுகும் ஸ்ரீ பஞ்சமுக விநாயகத் திருவுருவமும் விநாயக அடியவர் ஒருவரால் எழுந்தருளச் செய்யப்பட்டது. 1998 இல் ஐந்து நிலைகளையும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளையும் கொண்ட இராஜகோபுரமும் ஆலய முன்புறத்தில் மணிமண்டபமும் ஸ்ரீதட்சிணாமூர்த்தி, ஸ்ரீசண்டேசுவரப் பெருமான் ஆகிய திருவுருவங்களுக்கான தனிதனிக் கோயில்களும் வண்ணமுற அமைக்கப்பட்டன. ஆலய உள்வீதிகளுக்கு கொங்கிறீற் பிளாற் கூரை, சிமெந்துத் தளம் என்பனவும் அமைக்கப்பட்டன. தற்போது ஆலய மண்டபத்தளங்கள், ரெராசோ, மாபிள்கள், அலங்கார வேலைகள் பதிக்கப்பட்டுள்ளன. கண்ணைக் கவரும் ஜெகத்ஜோதியான மின் அலங்காரங்கள் எம்பெருமானுக்கு அழகு சேர்க்கின்றன. எம்பெருமான் எழுந்தருளி வந்து தம்மருளை அள்ளித் தெளிக்கப் புதிய வாகனங்களாகக் கைலாயவாகனம், சப்பரம் ஆகியனவும் அவற்றுக்கான கொட்டகைகளும் அமைக்கப்பட்டுள்ளன. வெளிவீதிகளும் விசாலமாக்கப்பட்டுள்ளன. இன்னும் மடப்பள்ளி, யாகசாலை, மணிக்கோபுரம் முதலியனவும் இன்று புதிய கொடி மரமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எமது ஆலயத்தில் வண்ணமுற அமைந்த உற்சவ மூர்த்திகளாக விநாயகத்திருமேனிகளில் மூவரும் ஸ்ரீவேணுகோபாலரும், ஸ்ரீமகாலட்சுமியும் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சுப்பிரமணியரும் ஸ்ரீ வைரவரும் ஸ்ரீசண்டேஸ்வரப் பெருமானும் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றனர். இவற்றைவிடப் புதிய திருமண மண்டபமொன்றும் கட்டப்பட எம்பெருமான் அருள்பாலித்துள்ளார். இவையாவற்றிலும் எம்பெருமானின் அனுக்கிரகமும் விநாயக அடியவர்களின் பெரு மனங்களும் இணைந்தே இப்படிமுறை வளர்ச்சிகளை எம் ஆலயம் கண்டு வந்துள்ளது.

இன்று எமது ஆலயத்தின் குருவாகச் செயற்பட எமக்குக் கிடைத்திருக்கும் ஸ்ரீ ரமணிதரக் குருக்கள் ஐயா, விநாயகப்பெருமானின் ஓர் அருட்கொடையாகும். அவரது நேர்த்தியான பூரணமான கிரியை முறைகளும் வழிகாட்டல்களும் குடும்ப ரீதியான அவர்களது ஒத்துழைப்பும் எமது ஆலயத்தை நிச்சயம் ஓர் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும். அவர் இக்கிராமத்துக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

எமது கிராம விநாயக அடியவர்களையே இந்த ஆலயத்தின் சகல பெருமையும் சாரும். இவர்களது மாறாத இறையன்பும் பக்தியும் இதயத்தூய்மையும் எம் ஆலயத்தை நிச்சயம் வழி நடத்தக் கூடியன. மூன்றாவதாக ஆலயத்தை நடத்திவரும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும் ஆலய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு வருகின்றது. 1959ஆம் ஆண்டில் கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை விநாயக அடியார்களால் உருவாக்கப்பட்டிருந்தது. 1988 இல் இடம் பெற்ற விசேட கூட்டத்தில் கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம் அமைக்கப்பட்டது. அதில் ஐவரைக்கொண்ட ''நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை'' என்ற ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. அக்குழுவே இன்றுவரை ஆலயத்தின் சகல நிர்வாகப் பொறுப்புக்களையும் ஏற்று நடத்திவருகின்றது. எத்தனை இடர்கள், இடைஞ்சல்களைச் சந்திக்க நேர்ந்த போதிலும் மனந்தளராமல் உற்ற நேரத்தில் உறுதியாக நின்று தம் முழுஅர்ப்பணிப்புக்களையும் செலுத்தி எம்பெருமானுக்கு மிகச் சிறப்பாகச் சேவை செய்து வருகின்றனர். ஆலய நிர்வாக வேலைகளுக்கு உதவியாக ஓர் உதவியாளரை நியமித்து சகல நிர்வாகங்களையும் ஒழுங்குற நடத்திவருகின்றனர்.

ஆலய சுற்றாடலில் உள்ள கிணறுகளில் உவர் நீர் இருப்பினும் நடுவில் உள்ள எம்பெருமானின் திருமஞ்சணக் கிணறு மட்டும் நன்னீர் கொண்டுள்ளமை ஒரு புதுமையாகும். அதுமட்டுமன்றி அரசமரத்தின்கீழ் ஸ்ரீ சந்தான கோபாலர் எழுந்தருளி இருப்பதும் ஒரு விசேட அம்சமாகும். புத்திர பாக்கியம் இல்லாதோர் இந்த மரத்தின்கீழ் உள்ள ஸ்ரீசந்தான கோபாலரை வழிபட்டு வந்தால் மக்கட்செல்வம் கிடைக்கப் பெறுவர் என் பதற்கு உறுதியான ஆதாரங்களும் உள்ளன. இன்னும் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளின் போது ஷெல் வீச்சுக்கள் நிறைந்து இருந்த வேளை- ஆலய விழாக்கள் முடிவடைந்த பின் நிர்வாக ஒழுங்குகள் பற் றிக் கலந்துரையாடிக் கொண்டிருந்த ஆலய நலன் விரும்பிகளைத் திடீரென்று மழை கொட்டச் செய்து வீடுகளுக்கு விரைந்து அனுப்பி, அடுத்த பத்து நிமிடத்துக்குள் அதே இடத்தில் இடம்பெற்ற ஷெல் வீச் சில் இருந்து அவர்களைக் காப்பாற்றியருளிய எம்பெருமானின் கருணையை என்னென்பது? நிஷா சூறா வளியின் போது ஆலயத்துக்கு எதிர்ப்புறத்தில் இருந்த மாபெரும் அரச மரம் வீழ்ந்தபோது எந்தவித உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற்படாமல் காப்பாற்றிய விந்தைதான் என்னே? ஒருமுறை தரிசித்தவர்களை மீண்டும் மீண்டும் தரிசிக்க வைக்கும் தெய்வீகக் கோயில் இது. இன்று எமது ஆலயவிநாயகப் பெருமான் தேரேறி வலம்வந்து அருள்பாலிக்கும் வேளையில் இந்த ஆலயமும் அடியவர்களும் எல்லோரும் எல்லாமும் பெற்று வாழவும் அகில உலகமும் சாந்தியும் சமாதானமும் பெற்று உய்யவும் எம் பெருமானை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

'அவனருளாலே அவன்தாள் வணங்குவோம்'

சு.சுந்தரலிங்கம்,
செயலாளர், ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

பாரினி எஞ்சினியர்ஸ் கட்டட ஒப்பந்தகாரர்
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். தொ.பே.: 021 222 5805, 0777917816.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதாவது வயதில் முதன்முறையாக இம்முறை வாக்களிக்க முடிவு செய்துள்ளவரின் ஆதங்கம்

## சிங்கப்பூரில் தேர்தலில் வாக்களிக்காவிடில் குற்றம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

அன்பான தமிழ் மக்களே!

இந்த மாதம் 23 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் யாழ்.மாநகர சபை வாக்காளர்கள் இழைத்த தவறை நீங்களும் இழைத்துவிடாதீர்கள். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதால் எந்த வித பிரயோசனமும் இல்லை. யாழ்.மாநகர சபை வாக்காளர்கள் விட்ட பிழை மாநகரசபைத் தேர்தலில் வாக்களிக்காமல் விட்டதுதான்.

யாழ்.மாநகர சபை வாக்காளர்கள், மாநகரசபைத் தேர்தலில் வாக்களித்திருந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு யாழ். மாநகர சபையைக் கைப்பற்றியிருக்கமாட்டாது.

தேர்தலில் நாம் வாக்களிப்பதன் மூலம் என்ன மாற்றம் வந்துவிடப்போகிறது என்ற எண்ணத்தில், யாழ். மாநகர சபை வாக்காளர்கள், மாநகர சபைத் தேர்தலில் வாக்களிக்காமல் விட்டிருக்கலாம். யாழ். மாநகரசபைத் தேர்தலில் யாழ். மாநகரசபை வாக்காளர்கள் வாக்களிக்காமல் விட்டதன் பலனை அல்லது தெரியாத்தனமாக மக்கள் நலனில் நாட்டம் குறைந்தவர்களின் கரங்களில் ஆட்சியை ஒப்படைத்ததன் பலனை, யாழ்ப்பாண மக்கள் அனைவரும் இன்று அனுபவித்து வருகின்றனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏனைய தமிழ் அரசியல்வாதிகளைப் பார்த்து ''சுயலாப அரசியல்வாதிகள்'' என அடிக்கடி கூறுவார். மாநகர சபையில் நடைபெறும் விடயங்கள் பத்திரிகைகளில் வெளிவருவது கூட அமைச்சருக்குத் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. எனவே அன்பான தமிழ் மக்களே எதிர்வரும் 23ஆம் திகதி, முதல் வேலையாக வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று உங்களது பொன்னான வாக்குகளை உரிய முறையில் பயன்படுத்துங்கள்.

### தேர்தலில் வாக்களிக்காவிடில் குற்றம்

சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தேர்தலில் வாக்களிக்காமல் விடுவது தண்டனைக்குரிய குற்றம். இலங்கை அரசு இதுவரையும் தேர்தலில் வாக்களிக்காமல் விடுவது குற்றமென்று சட்டம் இயற்றவில்லை.

அதனால் தேர்தலில் வாக்களிக்காமல் விடுவதன் மூலம் உங்களது தலையில் நீங்களே மண்ணை அள்ளிப்போட்டுக் கொள்ளாதீர்கள்! இந்தத் தேர்தலில் அரசு தனது வளங்கள் முழுவதையும் பலத்தையும் பயன்படுத்தி வெற்றியீட்டிவிடத் துடிக்கிறது. அமைச்சர்கள் தலைமையில் குறைகேள் சேவை திறம்பட நடைபெற்று வருவதாகப் பத்திரிகைச் செய்திகள் மூலம் தெரியவருகிறது.




நான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளனோ பிரசாரகனோ அல்லன். அன்று முதல் இன்று வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், தமிழர் விடுதலைக் கூட்டணியின் (ஆனந்த சங்கரியின் த.வி.கூ அல்ல) தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகளை விமர்சித்து வரும் ஒருவன். இந்தத் தேர்தலில் நீங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் உங்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பதையும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். நாங்கள் இப்போது கோவணாண்டியாகத்தான் நிற்கிறோம். நீங்கள் யாராவது நான் கோட்சூட்டுடன் நிற்கிறேன் அல்லது காஞ்சிபுரப் பட்டு சேலையுடன் நிற்கிறேன் என்று சொல்லக்கூடும். ஆனால் நான் கோவணத்துடன் நிற்பதாகவே எனக்குள் உணர்கிறேன். எனவே நான் அணிந்திருக்கும் கோவணத்தையாவது காப்பாற்ற வேண்டுமானால் நீங்கள் செய்யவேண்டியது; 23 ஆம் திகதி முதல்வேலையாக உங்களது வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று உங்களது வாக்கை உரியமுறையில் பயன்படுத்துவதுதான்.

நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தால் அல்லது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வெற்றி பெற்றால் அரசாங்கம் சில வேளைகளில் உங்களது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யாமல் விடக்கூடும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இருப்பதெல்லாவற்றையும் விற்பனை செய்து தமது ''பொக்கற்று'' களை நிரப்பமாட்டார்களென நம்புகிறேன்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் மிதிவண்டி நிறுத்துவதற்கு மிதி வண்டி பாதுகாப்பு இடம் ஒன்று இல்லை. எல்லாம் விற்பனை செய்யப்பட்டுவிட்டன. யாழ்ப்பாணத்தில் ஒரு கலை நிகழ்ச்சி நடத்துவதற்கு ஒரு திறந்த வெளி யரங்கு இல்லை. இருந்த ஒரேயொரு திறந்த வெளியரங்கும் (பிரபல சினிமா பின்னணிப்பாடகர் ஜேசுதாஸ் கச்சேரி நடத்திய இடம்) விற்பனை செய்யப்பட்டுவிட்டது.

### இதுதான் இன்றைய நிலைமை

அதேசமயம் இது வரை கடமையாற்றிய மாநகர ஆணையாளர்கள் எவரும் வருமானத்தை அதிகரிப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்க வில்லையாம். இப்படி எல்லாம் யாழ். மாநகர முதல்வர் மூக்கால் அழுகின்றார்.

மக்களின் வரிப்பணத்தை 100 வீதம் அதிகரித்து முதல்வருக்கு சொகுசு வாகனம் வாங்கவில்லை, அல்லது வாடகைக்கு அமர்த்தவில்லையென்று யார் அழுதார்கள்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றினால் வருமானத்தை ஈட்டாவிட்டாலும் ஏற்கனவே ஈட்டப்பட்டு வைப்பிலிடப்பட்டுள்ள பணத்தில் நிச்சயமாக கை வைக்கமாட்டார்களென நம்புகிறேன்.

**- காளிதாசன் -**

எனவே சற்று ஆற அமர சிந்தித்து செயற்படுங்கள். எனது ஐம்பதாவது வயதில் முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறைதான் வாக்களிக்கத் திட்டமிட்டுள்ளேன் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன் - எனது கோவணத்தையாவது காப்பாற்றும் நோக்குடன். ★

# குடாநாட்டு மக்களின் ஆதரவு நிச்சயம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைக்கும்

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1976 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த காலத்தில், அல்பிரட் துரையப்பா அரசுடன் இணைந்து செயற்பட்டதன் மூலம் யாழ். குடாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு பெரும் மக்கள் ஆதரவு காணப்பட்டது. அதே போன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் தலைமையில் புதிதாகத் திறக்கப்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்தின் ஊடாக மக்கள் ஆதரவு கிடைக்கும் என நம்பிக்கை இருப்பதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த மாவட்ட அலுவலகத்தின் ஊடாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. 25 வருட காலமாக நாடு மிகவும் மோசமான நிலையில் இருந்தது. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நிலைமையை முடிவுக்குக் கொண்டு வந்து மக்கள் சந்தோஷமாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

25 வருடங்களுக்கு மேலாக வடபகுதியில் ஜனநாயகம் மறுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது நிலைமை மாறியுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாணத்தின் 19 உள்ளூராட்சி மன்றங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளை மக்களே தெரிவு செய்யவுள்ளனர். அரசுக்கான ஆதரவு வழங்கி நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடியவர்களை இந்தத் தேர்தல் மூலம் மக்கள் தெரிவு செய்யவேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார். நாட்டில் தற்பொழுது தோன்றியிருக்கும் அமைதியான சூழ்நிலை காரணமாக வியாபாரிகள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் சுதந்திரமாக இங்கு வந்து பணியாற்றக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது - என்றும் குறிப்பிட்டார்.

(த)

# ஐ.தே.கவின் பிரசாரம் காரைநகரில் தீவிரம்

காரைநகர், ஜூலை 6

காரைநகர் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் காரைநகர் பிரதேசத்தில் தமது தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காரைநகர் பிரதேச சபை முதன்மை வேட்பாளர் க.பாலச்சந்திரன் தலைமையிலான அணியினர் வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டும் பணியில் ஈடுபட்டு வருவதுடன் கிராமங்கள் தோறும் கருத்தரங்குகளையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டுவருகின்றனர்.

அத்துடன் இவர்களின் வர்ணச்சுவரொட்டிகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஈ.பி.டி.பி. இணைந்த ஆளும் கட்சி வேட்பாளர்களின் சுவரொட்டிகளும் காரைநகர் பிரதேசம் எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. (த-250)

# யார் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பது தேர்தல் மூலம் மீண்டும் பறை சாற்றப்படும்

## அரியநேத்திரன் எம்.பி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 6

தமிழ் மக்கள், சலுகைகளுக்காக சோரம் போகின்றவர்கள் அல்லர். மாறாக உணர்வு ரீதியாகச் சிந்தித்து உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்கள்; செயற்படுபவர்கள். இந்த உண்மையை எதிர்வரும் 23 ஆம் திகதி யாவருக்கும் உணர்த்துவதற்காக எதிர்பார்த்துள்ளனர்.

இதன்மூலம் யார் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பது உலகுக்கு மீண்டும் பறைசாற்றப்படும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேச சபைக்கான தேர்தல் பிரசாரக் கருத்தரங்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேருவின் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தை இழுத் தடிப்புச் செய்யும் நோக்கில் முன்வைக்கவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். இதனை இந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்கவில்லை. ஆகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்பது கிடப்பில் போடத்தக்க அம்சமாகும்.

அரசு எதைக் கூறினாலும் வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் பலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளதை நாம் பல தடவை நிரூபித்துள்ளோம். எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மக்கள் இன்னும் பலமான முறையில் நிரூபிக்கவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கின்ற அல்லது கேட்கின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற அரசியல் தீர்வையே வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். இதனை விடுத்து அரசும், பேரினவாத சிந்தனையாளர்களும் திணிக்கின்ற அரசியல் தீர்வைத் துளியேனும் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதை அமைச்சர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருகின்ற தீர்வு சிறுபான்மை தமிழ் பேசும் சமூகங்களுக்கே. தனி நபர்களுக்கோ, கட்சிக்கோ அல்ல. கடந்த 62 வருட காலமாக ஏமாற்றப்பட்டு வரும் தமிழ் பேசும் சிறுபான்மை சமூகங்களுக்கு நீதி, நியாயமான அரசியல் தீர்வையே நாம் கேட்கின்றோம்- என்றார்.

(ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் கைலாசத்திலே அதிகார நந்தி உற்சவம்

**நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று இடம்பெறுகிறது. இதனை யொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

'பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்' என்று மாணிக்கவாசகர் சிவபுராணத்திலே மிக அழகாகக் கூறுகின்றார். இந்த மறு ஜென்மத்திலே பரமேஸ்வரரை வணங்கினால் மீண்டும் பிறப்பில்லாத மோட்சத்தை அருளுகிறார் என்று அழகாகச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார். சிங்கை ஆரிய சக்கரவர்த்தி நல்லூர் நகரி என்ற நாமத்தோடு கூடிய தலை நகரை தனது யாழ்ப்பாண இராஜதானியைப் பரிபாலிக்கும்போது ஸ்ரீ கைலாச நாதரின் கட்டளையின்கீழ் மூன்றாம் கைலாசமாக இந்தக் கைலாசநாதர் கோயிலைக் கட்டினான் என்றும் அவனது இராஜாங்கத்தின் முதன்மைக் கோயிலாக அது இருந்தது என்றும் யாழ்ப்பாண வரலாறுகள் கூறுகின்றன. அன்று திரிபுர சம்ஹாரம் செய்வதற்கு தேவர்கள் சாமிக்கு பிரமாண்டமான ஒரு ரதத்தைச் செய்தார்கள். ஆனால் பரமேஸ்வரரோ எனக்கு எதுவும் தேவையில்லை என்று தனது சிரிப்பினால் திரிபுர தகனம் செய்தார். இன்று கைலா சநாதர் இம்மூன் றாம் கைலாசத்துக்கு வருபவர்களுக்குப் பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றனாக ஸ்ரீ கைலாசநாதரும் 'கறை கண்டனுக்கு மூத்தவரே' என்று அபிராமிப்பட்டர் கூறியபடி கையேந்தி நிற்கும் விஸ்வேஸ்வரருக்கு அன்ன மிட்டு கறை கண்டனுக்கு மூத்தவளாக விளங்கும் கைலை நாயகியை தன் பக்கத்திலே அமர்த்தி இன்று இந்த ரத உற்சவத்திலே அருள் பாலிக்கின்றார். இந்தக் கைலாசநாதருக்கு நந்தி என்று ஒரு திருநாமம் உள்ளது.

உலகில் உள்ள அளவற்ற ஆற்றலுக்கும், பெருகும் ஞானத்துக்கும் முழு முதற் பொருளாக இருப்பதால் ஈசன் நந்தி என்று போற்றப்படுகிறார். நந்தி என்றால் வளர்வது என்று பொருள். அதாவது ஞானத்தாலும் செல்வச் செழிப்பாலும் வலிமையாலும் வளர்ந்து கொண்டிருப்பது நந்தி. அதனால்தான் முழுமுதற்கடவுளை நந்தி என்கின்றனர். சிவனைச் செஞ்சடைநந்தி, வார்சடை நந்தி என்று குறிப்பதுடன் விநாயகப் பெருமானை நந்திமகன் ஞானக் கொழுந்து என்று அழைத்து மகிழ்கின்றனர்.

சிவனருளால் ஞானத்தை அடையப் பெற்றவர்களையும் நந்திகள் என்றே அழைக்கின்றனர். திருக்கையிலைப் பெருமானை சூழ்ந்திருக்கும் ஞான நிலை பெற்று நந்திகள் என்று போற்றப்படுபவர்களின் கூட்டம் நந்திகணம் எனப்படுகின்றது. நந்தி, கணத்தினரில் முதன்மை பெற்றவராக இருப்பதுடன் திருக்கையிலையில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருமாளிகையின் கோபுரவாசலில் வீற்றிருக்கும் கைலா சநாதரைத் தரிசிக்க வரும் தேவர்களை ஒழுங்குபடுத்திச் சிவசந்நிதிக்கு அனுப்பும் பணியைச் செய்கின்றனர். சிவனது ஆணை பெற்று திருக்கையிலையில் அதிகாரம் செலுத்துவதைக் குறிக்கும் வகையில் நீண்ட பொற்பிரம்பைத் தாங்கி உள்ளார். அப்பிரம்பால் தேவர்களை ஒழுங்குபடுத்தும்போது சிலசமயம் தேவர்களை அடித்து விலக்க நேர்கிறது. இவரிடம் அடிபட்ட தேவர்களின் சுடர் மணிக்கற்கள் திருகையிலை மாளிகை யில் சிதறிக்கிடக்கின்றன என்று இலக்கியங்கள் கூறும்.

இவர் திருக்கையிலையில் அதிகாரம் செலுத்துவ்துபோல் இப்பூமண்டலத்திலுள்ள மூன்றாம் கைலாசத்திலே அதிகார நந்தியை வாகனமாக்கி 7 ஆம் யாககாலம் அன்று அதில் ஆரோகணிக்க ஸ்ரீ கைலாசநாதர் சித்தம் கொண்டுள்ளார். இதன்படி இன்று மகாரத உற்சவம் முடிந்த பின்னர் அதிகார நந்தி மாடவீதி பிரஷ்ணத்துடன் ராஜ உபசாரத்தோடு மூன்றாம் கைலாசத்தினுள் பிரவேசித்து ஸ்ரீ கைலாச பிள்ளையாரிடம் அனுமதி வாங்கி ஸ்ரீ கைலாசநாதரிடம் அதிகாரம் வாங்கும் வைபவம் நடைபெறுகின்றது. ஸ்ரீ கைலாசநாதர் தான் அதிகார நந்தியில் ஆரோகணிப்பதற்காக குறித்த நன்னாளான ஆனி உத்தரம் அன்று பதமந்திரங்களினால் உச்சாடனம் செய்யப்பட்டதும் திருப்பொற்சுண்ணம் பாடி இடிக்கப்பெற்ற திருப்பொற் சுண்ணத்தை அங்கமெங்கும் பூசி சாஸ்திர சம்பிரதாயப்படி மஞ்சள் பூசிய புதிய கௌபீனத்தைத் தரித்து ஸ்ரீ கைலாசதீர்த்தத்தில் தீர்த்த மாடிய பின்னர் சர்வாலங்கார பூஷிதராய் முன்னி அவள் முன்சுரக்கும் இன்னருளால் ஸ்ரீ கையிலைநாயகியோடு ஆராத இன்பம் அருளுவதற்காக ஸ்ரீ கையிலைநாதர் அதிகார நந்தியின் மீது ஆரோகணித்து ஆரியச்சக்கரவர்த்திகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட இம் மூன்றாம் கைலாசத்துக்கு வரும் அடியார்களுக்கு எல்லாம் ஞானம், செல்வம், வலிமையை வளர்த்து என்றுமில்லாத மோட்சத்தை அளிக்கவுள்ளார்.

''நற்றுணையாவது நமசிவாயவே''

-காசி ஆனந்தன்.

## உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் 2010 ஆம் ஆண்டு பாட நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டம ளிப்பு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

தகுதியுடைய மாணவர்கள் மக்கள் வங்கியின் SLIATE- 0251001333 97613 எனும் கணக்குக்கு ரூபா 2000 ஐ செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறு பதிவாளர் என்.உமாகாந் அறிவித்துள்ளார். (வ-313)

## கதிர்காமர் கொலை வழக்கு: விசாரிக்க உத்தரவு

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை வழக்கின் சந்தேகநபர் இல்லாமலே சாட்சியங்களை நெறிப்படுத்துமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதியரசர் தீபாலி விஜேசுந்தர பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்தக்கொலைக்கு புலிகள் தீட்டிய திட்டம் பற்றி ஏற்கனவே தெரிந்துவைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்தவர் நாட்டை விட்டு தப்பியோடிவிட்டார் என முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ரியாஸ் பாரி நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்தே நீதிவான் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

அரச சட்டத்தரணி ரியாஸ்பாரி முன்வைத்த கருத்துகளை ஆராய்ந்த நீதிவான் சந்தேக நபரான ந. சிவராஜா இல்லாமலே சாட்சிகளை ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டதுடன் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ச-5)

## கிராம சேவையாளர் வெற்றிடங்களுக்கு சமுர்த்தி அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஜூலை 6

நாடெங்கும் நிலவும் 2100 கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்களுக்கு சமுர்த்தி அதிகாரிகளை நியமிக்க அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் இன்னும் ஓரிரு தினங்களில் சமுர்த்தி அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் என அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் எனவும் நாடெங்குமுள்ள 14 ஆயிரம் கிராமசேவையாளர் பிரிவுகளில் நிலவும் 2100 வெற்றிடங்கள் இதன் மூலம் நிரப்பப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)


### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 07.07.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

- ★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593
- ★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, அம்பாள்குளம், கிளிநொச்சி - 0776225944

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944



குருநகரின்
மண்ணின் மைந்தன்
**அ.கிளபோடாசியஸ் (ஜம்பிள்)**
அவர்கள்
சாமஸ்ரீ தேசமானிய
விருதுபெற்று
முதன்முதலாக
குருநகர் மண்ணை
அலங்கரித்ததை
கௌரவப்படுத்துகிறோம்

அ.கிளபோடாசியஸ்
(ஜம்பிள்)

சமூக சேவைப் பணிக்காக தேர்ந்து
எடுக்கப்பட்ட பொன் மனத்தோனே!
விழாவின் நாயகனாகி நீ நீடுழி
வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்!
மக்களின் தேவை கருதி மக்களுக்காய்
தொண்டாற்ற உனையே முன்நிறுத்தி
களமதில் வென்றவனே வாழ்க உன்பணி!
குடும்பத்துக்காய் சீநோரில் பணியாற்றி
குவலயம் வாழக் குரல் கொடுக்கும் செம்மலே
குன்றாதுன் வாழ்வு மேலெழவே
குருநர் மக்கள் வாழ்த்துகிறோம்

அண்ணா சிலையடி இளைஞர்கள்,
குருநகர்.

(48,23,22)

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No.1 Bahiraha புறொயிலர் குஞ்சுகள் இன்று (06.07.2011) விநியோகிக்கப்படும்.

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
T.P. No. 021 222 2867
077 6090926

### விடுவளவு விற்பனைக்கு உண்டு

ஏ-9 வீதியிலிருந்து நுணாவில், துர்க்கையம்மன் வீதியில் 100 மீற்றர் தூரத்தில் (யூனியன் பேக்கரி அருகில்) மேல்மாடி வீடு வளவும் 4 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0774689793

### இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொ யிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
### வெளிவாரி பரீட்சைகள் - 2010

1. வணிக முதற் தேர்வு- 2010 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக இரண்டாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
3. வணிக மூன்றாம் தேர்வு 2010 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக முதற் தேர்வு - 2010 (பழைய பாடத்திட்டம்)
5. வணிகமாணி - பகுதி I 2010 (பழைய பாடத்திட்டம்)
6. வணிகமாணி - பகுதி II 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்)
7. வணிகமாணி - பகுதி III 2009 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/- க்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 20/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ.அளவுடைய தபால் உறையை இணைத்து *உதவிப் பதிவாளர் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* என்ற முகவ ரிக்கு அனுப்புதல்வேண்டும்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 19.08.2011 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

*முக்கிய குறிப்பு: மீள்பரீட்சார்த்திகள் உரிய பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த பின்னர் விண்ணப்பிக்கலாம்.*

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
04.07.2011 (சி/1369)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு மீது போர்க் குற்ற நடவடிக்கை எடுக்கக் கோரி டில்லியில் பட்டினிப் போராட்டம்

## உலகத் தமிழ்ப் பேரவை அமைப்புகள் ஏற்பாடு

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மீது போர்க்குற்றம் தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி உலக தமிழ் பேரவை அமைப்புக்களின் ஏற்பாட்டில் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை டில்லியில் பட்டினிப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து பெங்களூர் தமிழ்ச்சங்க துணைத் தலைவர் இராசு.மாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

2009 ஆம் ஆண்டில் இலங்கையில், தமிழர்களுக்கு எதிரான இறுதிப்போரில் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்து போர்க்குற்ற நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளதை ஐ.நா. நிபுணர் குழு வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது.

ராஜபக்ஷ உள்ளிட்ட இலங்கை ராணுவ அதிகாரிகள் மீது போர்க் குற்றம் காரணமாக பன்னாட்டு நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டும் என உலகம் முழுவதும் உள்ள மனித நேய ஆர்வலர்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

தமிழக சட்டமன்றத்தில் இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து இலங்கை மீது போர்க்குற்ற நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரி ஐ.நா.வை இந்தியா வற்புத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அண்மையில் பெங்களூர் தமிழ்ச் சங்கம் நடத்திய ஆர்வலர்கள் கூட்டத்திலும் ராஜபக்ஷ மீது போர்க்குற்ற நடவடிக்கைகளை எடுக்க இந்திய அரசு, ஐ.நா.வை வற்புறுத்த வேண்டும் என்றும், தேவைப்படுமானால் இந்த கோரிக்கையை வலியுறுத்தி நாடாளுமன்றத்தின் முன்பு போராட்டம் நடத்தவும் பெங்களூர் தமிழ்ச் சங்கம் தயாராக உள்ளது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை மீது போர்க்குற்ற நடவடிக்கைகளை எடுக்கவும், கச்சத்தீவை மீண்டும் இந்தியாவுடன் இணைக்க வேண்டும். இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடையைக் கொண்டு வருவதுடன், இலங்கையுடனான உறவுகளை இந்தியா நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்படி பட்டினிப் போராட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை டில்லியில் இடம் பெறவுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# ஜெயலலிதா இன்று டில்லி பயணம்

சென்னை,ஜூலை6

புதுடில்லியில் இன்று நடைபெறும் திட்டக் குழுவின் கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் ஜெயலலிதா இன்று டில்லிக்குப் பயணம் செய்யவுள்ளார். அண்மையில் டில்லிக்குச் சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தார். அவரிடம் தமிழகத்திற்குத் தேவையான நிதி குறித்து கோரிக்கை வைத்து மனு கொடுத்திருந்தார். இந்தநிலையில் இன்று மத்திய திட்டக் குழுவின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஜெயலலிதா டில்லிக்குச் செல்லவுள்ளார்.

# இலங்கை போர்க் குற்றங்கள் குறித்து ஐ.நா. விசாரணை நடத்தவேண்டும்

## ஆந்திர எழுத்தாளர் வரவர ராவ் வலியுறுத்து



நெல்லூர், ஜூலை 6

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து பாரபட்சமில்லாத, சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையை ஆந்திர மாநில புரட்சி எழுத்தாளரும், நக்ஸலைட் ஆதரவாளருமான வரவர ராவ் வலியுறுத்தியுள்ளார்.


மாவட்ட அளவிலான புரட்சிகர எழுத்தாளர்கள் சங்கத்தின் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக நெல்லூருக்குப் பயணம் மேற்கொண்டு செய்தியாளர்களிடம் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேட்டியின்போது அவர் மேலும் கூறுகையில்:

இலங்கை அரசின் உத்தரவின் பேரிலேயே அந்த நாட்டுப் படையினர் போர் நடைபெற்ற போது அப்பாவிப் பொது மக்களை பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கி உள்ளனர். ஐ.நா. சபை விசாரணை நடத்துவதன் மூலமே அந்த குற்றங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வர முடியும் என அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நடப்பவை குறித்து அறிந்து கொள்ள ஊடகத் தினரையும், சர்வதேச அமைப்புகளையும் அந்த நாட்டு அரசு சுதந்திரமாக அனுமதிப்பதை ஐ.நா. சபையும், சர்வதேச பொதுநல சமூகமும் உறுதிசெய்ய வேண்டும் என்று வரவர ராவ் விருப்பம் தெரிவித்தார்.

மேலும் இலங்கையுடனான இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை குறித்தும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவியேற்ற பின்னர் அந்த நாட்டுக்கு அளிக்கப்பட்ட ராணுவ உதவிகள் குறித்தும் மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று ராவ் கோரிக்கை விடுத்தார். (வ)



மத்திய பொருளாதார புலனாய்வு அமைப்பின் செயற்பாடுகள் குறித்த அறிக்கையை, மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, டில்லியில் வெளியிட்டார்.

# கேரள அரசுக்கு உலக வங்கியால் 200 மில். டொலர் கடனுதவி

திருவனந்தபுரம், ஜூலை.6

கேரளாவில் உள்ளாட்சித் துறை மற்றும் புறநகர் , நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு உலகவங்கி 200 மில்லியன் டொலர் கடனுதவி அளித்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் உலக வங்கி மற்றும் இந்தியாவுக்கு இடையே நேற்று முன்தினம் கைச்சாத்தானது. கேரள மாநிலத்தில் புதிதாகப் பொறுப் பேற்ற அரசு உள்ளாட்சித் துறையில் இரண்டாம் தலைமுறை சீர்திருத்தம் என கொள்கையின்படி மாநிலத்தில் புறநகர் , நகர்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட் சித் துறைகள் ஆகியவற்றின் உள் கட்டமைப்பு திட்டங்களை வலுப்படுத்த முனைப்புக் காட்டி வருகிறது.

இதன் ஆரம்பமாக உலக வங்கியிடம் கடனுதவி கேட்டிருந்தது. 0.75 சதவீத வட்டியுடன், 30 ஆண்டுகளுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தும் உத்தரவாதத்துடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. (வ)

# மாயாவதி அரசுக்கு எதிராக ராகுல் நேற்று பாதயாத்திரை

உத்தரப் பிரதேச விவசாயிகளுக்கு ஆதரவளித்து மாயாவதி அரசுக்கு எதிராக காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி நேற்று பாதையாத்திரையை ஆரம்பித்தார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் மாயாவதி அரசு நொய்டா பகுதியில் தொழில் நிறுவனங்களுக்காக விளை நிலங்களை ஆக்கிரமித்ததை எதிர்த்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பின்னர் மாயாவதி குடியிருப்பு கட்டப்போவதாக அறிவித்தார். இந்த நிலையில் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து ராகுல்காந்தி பாதயாத்திரையை ஆரம்பித்தார்.

பாட்டாபார்சூல் முதல் அலிகார் வரை நடைபெறும் மேற்படி பாதையாத் திரையில் விவசாயிகளைச் சந்திக்க உள்ளார். கடந்த சில மாதங்களாக மாநிலத்தில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கூறி தலைநகர் லக்னோவில் காங்கிரஸ் கட்சி தலைவர் ரீட்டாபகுகுனா தலைமையில் நியாய யாத்திரை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

# மத்திய அமைச்சர் தியோரா பதவி விலகினார்

டில்லி, ஜூலை6

மத்திய அமைச்சர் முரளி தியோரா தனது அமைச்சர் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக பதவி விலகல் கடிதத்தை காங்., தலைவர் சோனி யாவுக்கு அனுப்பி வைத்தார்.

இதேவேளை இவர் அனுப்பிய பதவி விலகல் கடிதத்தில் தெற்கு மும்பையில் 2 ஆவது முறையாக அமைச்சராக இருக்கும் தனது மகன் மிலிந்தியோராவுக்கு தனது அமைச்சுப் பதவியை வழங்குமாறு கேட்டுள்ளார்.

தியோரா மீது பெரிய அளவில் முறைப்பாடுகள் எதுவும் வராத இந்த நேரத்தில் அவர் பதவி விலகியமைக்கான உரிய காரணம் எதுவும் வெளியாகவில்லை.

பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்து பின்னர் நிறுவன விவகாரத்துறைக்கு மாற்றப்பட்டவர் அமைச்சர் முரளிதியோரா. இவர் காங் கிரஸ் தலைவர் சோனியாவுக்கு கடந்த வாரமே பதவி விலகல் கடிதத்தை அனுப்பி வைத்து விட்டதாக தகவல் தெரிவிக்கின்றது. அவர் அனுப்பிய பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

காங்கிரஸ் கட்சியின் வளர்ச் சிக்கு தாம் தொடர்ந்து பாடுபட விரும்புவதாகவும், ஏற்கனவே 5 ஆண்டுகள் அமைச்சராகப் பணி புரிந்துள்ளதாகவும், வயது (74) காரணமாக தொடர்ந்து பணி யாற்ற இயவில்லை என்றும் கடிதத்தில் கூறியுள்ளார். வேறு எந்த காரணமும் தெரிவிக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் வட்டாரம் தியோரா பதவி விலகல் கடிதம் எதுவும் அனுப்பவில்லை என்று மறுத்துள்ளது. (வ)

# திருவனந்தபுரம் கோயில் பொக்கிஷங்கள் மன்னர் குடும்பத்துக்குச் சொந்தமானவை

## காஞ்சி ஸ்ரீ ஜயேந்திரர் கருத்து

காஞ்சிபுரம்,ஜூலை 6

திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாப சுவாமி கோயிலில் எடுக்கப்பட்ட நகைப்பொக்கிஷங்கள் அனைத்தும் திருவாங்கூர் மன்னர் குடும்பத்துக்குச் சொந்தமானவை என்று காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜயேந்திரர் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

நீண்ட காலமாக பத்மநாப சுவாமி கோயிலை திருவாங்கூர் மன்னர் குடும்பம் கவனித்து வந்தது. அந்தக் கோயிலுக்காகவே அவர்களது ஆட்சி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளது. தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள அனைத்து நகைகளும் ஆபரணங்களும் கோயிலுக்கு திருவாங்கூர் மன்னர்களால் அளிக்கப்பட்டவை தான்.

எனவே, அவை அனைத்தும் மன்னர் குடும்பத்தினருக்கே சொந்தமானது. எனினும், அந்தப் பொக்கிஷங்கள் அனைத்தும் கோயிலிலேயே வைக்கப்பட வேண்டும் என்று ஜயேந்திரர் கூறினார். (வ)

# பழங்குடியினருக்கு ஆயுதம் வழங்குவது சட்டவிரோதம்

## உச்சநீதிமன்றம் தெரிவிப்பு

டில்லி,ஜூலை6

மாவோயிஸ்ட்டுகளை வீழ்த்துவதற்காக சத்தீஸ்கர் அரசும், மத்திய அரசும் பழங்குடியினரை சிறப்பு பொலிஸ் அதிகாரிகளாக நியமித்து அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது சட்ட விரோதம் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நக்ஸலைட்டுகளை முறியடிக்க பழங்குடியினரை சிறப்பு பொலிஸ் அதிகாரிகளாக நியமித்து அவர்களுக்கு ஆயுதம் வழங்கக் கூடாது என்று உத்தரவிட்ட உச்சநீதிமன்றம் அவ்வாறு பழங்குடியின இளைஞர்களை சிறப்பு பொலிஸ் அதிகாரிகளாக நியமிப்பது சட்டவிரோதம் எனத் தெரிவித்தது.

கோயா கமாண்டோஸ் மற்றும் சல்வா ஜூதும் என்ற பெயரில் படைப் பரிவுகளை உருவாக்குவது அரசியல்சாசன விதி மீறல் என மேற்படி நீதிமன்றம் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் நேற்றுமுதல் மின்வெட்டு

## இலங்கை மின்சார சபை கூறுகிறது

கொழும்பு, ஜூலை 6

மீண்டும் இலங்கையில் மின்வெட்டை அமுலுக்குக் கொண்டு வருவது தொடர்பான தீர்மானம் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் முன்னெச்சரிக்கை இன்றி சிலவேளைகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சேவைகள் சங்கப் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளமையால் நாடளாவிய ரீதியில் இவ்வாறான மின் வெட்டை இலங்கை மின்சார சபை முன்னெடுத்து வருகின்றது என்றார்.

எவ்வாறாயினும், கொள்கை ரீதியாக எதுவித மின்வெட்டுத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை எனவும் உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் இலங்கை மின்சார சபைத் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபயவிக்ரம தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இலங்கையில் மின்வெட்டை அமுலுக்குக் கொண்டு வருவது தொடர்பான தீர்மானம் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

# மத்துகம பகுதி வாகன விபத்தில் இருவர் பலி

கொழும்பு, ஜூலை 6

மத்துகம வெலிபென்ன வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கரவண்டி ஒன்று பவுசருடன் மோதியமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக வெலிபென்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர் களுத்துறை நாகொடை வைத்தியசாலையிலும், கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் இத்தாபான பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பௌசரின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் வெலிபென்ன பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற)

# ஆன்மிகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமராட்சிப் பிரதேசத்தில் இன்று புதன்கிழமை ஆன்மிகச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

கரவெட்டி இருதயக் கல்லூரியில் மாணவர்களுக்கு காலை 9 மணிக்கும் அல்வாய் சிவத்தமிழ் வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு மு.ப. 10 மணிக்கும் 'ஆன்மிகமும் கல்வியும்' எனும் தலைப்பில் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து வடமராட்சி கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பி.ப 2 மணிக்கு 'சேவை' எனும் தலைப்பிலும், கரவெட்டி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் பி.ப. 4.30 மணிக்கு 'ஆலய வழிபாட்டின் மகிமை' எனும் தலைப்பிலும் கரவெட்டி தச்சன் தோப்பு விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவில் மாலை 6 மணிக்கு 'தத்துவம் பகிரும் பிரணவப் பொருள்' எனும் தலைப்பில் முதல் நாள் சொற்பொழிவும் இடம்பெறும்.

இந்த ஆலயத்தில் தொடர் சொற்பொழிவு தினமும் மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சொற்பொழிவுகளை யாழ். சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய நிகழ்த்தவுள்ளார். (313)

**விநியோகஸ்தர்கள் தேவை**

எமது முன்னணி விநியோக நிறுவனத்திற்கு கீழ்வரும் பிரதேசங்களிற்கு விநியோகஸ்தர்கள் (Distributors) தேவை. யாழ்ப்பாணம், வடமராட்சி, கிளிநொச்சி, வவுனியா, மன்னார்.

தொடர்புகளுக்கு - 0718733943

(வார நாட்களில் காலை 8 மணி முதல் 5 மணி வரை)

**கொவிசெத**

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 814

சீட்டிழுப்பு திகதி 04.07.2011

எழுத்து: T

வெற்றி இலக்கங்கள்: 17 28 33 41

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,094,333.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 11 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 340 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 640 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16786 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9675 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 238830 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 37446 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,131,120.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 11,716,956.80

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03.

தொலைபேசி: 2470[illegible]62, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk

# சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி, ஜூலை 6

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி கந்தசுவாமி ஆலயத்தின் அலங்காரத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. திருவிழா தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-131)

***

கரவெட்டி தச்சன்தோப்பு, சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-236)

***

சாவகச்சேரி அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை வியாழன் காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாப் பூசைகள் கௌரிபாலக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ற-131)

***

கைதடி வடக்கு, கயிற்றிட்டி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

பிரம்மசிறீ க.மு.ஐயாத்துரைக் குருக்கள் பிரதம குருவாக இருந்து திருவிழாவை நடத்தி வைப்பார். (ற-121)

***

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (ற-7)

***

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தின் ஆனி உத்தரம் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு விசேட ஆன்மிக சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நாராயண சுவாமி பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதரராக வீதியுலா வருவார். (ம-160)

***

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.வண்வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு அபிஷேகமும், 7.30 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும்.(ற)

***

சாவகச்சேரி நுணாவில் மத்தி நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-207)

***

சாவகச்சேரி, மண்டுவில் இலஞ்சாரணியம் கண்ணகை அம்பாள் ஆலயத்தின் பெருந் திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும். (ற-207)

***

புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழாத் தினங்களில் தினமும் மாலை 5 மணிமுதல் 6 மணி வரை பண்டிதர் பொன்.சுகந்தன் ''பெரிய புராணம்'' எனும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ.ஜெயபாலசுந்தரக் குருக்கள் திருவிழா பூசைகளை நிகழ்த்துவார். (ற-236)

***

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பழனியாண்டவர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது. திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 5 மணிக்கு அபிஷேகம் 6.15 மணிக்கு வசந்த மண்டப பூசையும் இடம்பெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் தீர்த்தத் திருவிழாவும் மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (ற-135)

***

யாழ்ப்பாணம், ஜூலை 6

நெடுந்தீவு, நடுக்குறிஞ்சி பெருக்கடி சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

அன்றையதினம் பிற்பகல் 4 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (ற-7)

30 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் சந்தையில் முதல்வன்

ATS ELGI

Think Long Run







வாகனங்கள் சுத்திகரிக்கும் மற்றும் ரயர் மாற்றும் நிலையங்களுக்கும் உபயோகிக்கப்படும் இயந்திரங்கள்

நோத் அன்ட் ஈஸ்ற் எஞ்ஜினியறிங்

யாழ் வீதி, மானிப்பாய்.

தொ.பே: 021 720 0290 Mobile: 0777568685

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் ராணுவம் தேடுதல் வேட்டை துப்பாக்கிச் சூட்டில் 60 பேர் படுகாயம்

டமாஸ்கஸ், ஜுலை 6

சிரியாவில் வீடு வீடாக இராணுவம் நடத்திய தேடுதலில் 60 பேர் மீது துப்பாக்கிச் சூடு. கைது செய்யப்பட்டவர்களில் பலர் காணாமற் போயினர்.

நேற்று அதிகாலை சிரியாவின் நகருக்கு வெளியே செல்லும் சகல பாதைகளையும் மூடிய சிரிய ராணுவம் ஹாமாவை முழுமையாக முற்றுகையிட்டு தமது தேடுதல் வேட்டையைத் தொடங்கியது.


இதன்போது சிரியாவின் உளவுத்துறை தயாரித்துக் கொடுத்திருந்த பட்டியல் ஒன்றைக் கையில் வைத்தபடி, வீடு வீடாகத் தேடுதல் வேட்டையை நடத்தியது ராணுவம். குறிப்பிட்ட பட்டியலில் நூற்றுக் கணக்கான பெயர்கள் இருந்தன. அவர்கள் அனைவரும் அரசுக்கு எதிரானவர்கள் என்பதே உளவுத்துறை கொடுத்திருந்த தகவல்.

பட்டியலில் இருந்தவர்களில் கைது செய்யப்பட்டவர்கள், துப்பாக்கி முனையில் இழுத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் சிலர் தெரு முனையில் சுடப்பட்ட நிலையில் போடப்பட்டனர்.

வேறு சிலர் ராணுவ வாகனங்களில் ஏற்றப்பட்டு, அடையாளம் காணப்படாத இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

வீதியில் சுடப்பட்டு போடப்பட்டிருந்தவர்களில் 60 பேர் படுகாயமடைந்த நிலையில் ஹாமா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிரியாவில் செய்தித் தணிக்கை அமுலில் இருப்பதால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை சரியாக அறியப்படவில்லை.

சந்திப்பு....



சீனாவின் தலைநகர் பீஜிங்கில், அந்தநாட்டு துணை அதிபர் ஜி-ஜின்பிங்கை (வலது), ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் டகியாகி மட்சுமோடா சந்தித்துப் பேசினார்.

# எகிப்தில் கார்க் குண்டு மூலம் எரிபொருள் குழாய் வழி தகர்ப்பு

கெய்ரோ, ஜுலை 6

எகிப்தில் நேற்று முன்தினம் இஸ்ரேல் மற்றும் ஜோர்டன் நாடுகளுக்குச் செல்லும் எரிபொருள் குழாய் வழியை சினாய் தீபகற்ப பகுதியில் உள்ள பிர் அல் அப்த் என்ற இடத்தில் வைத்து போராட்டக்காரர்கள் தகர்த்தனர்.

கார்க் குண்டு மூலம் இந்த அசம்பாவிதம் நிகழ்த்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எகிப்தில் நிர்வாகப் பணிகளை சீர்திருத்தும் நடவடிக்கைகள் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கை எடுப்பதில் ராணுவ அரசு தீவிரம் காட்டவில்லை என மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கெய்ரோ நகரில் உள்ள தஹ்ரிர் சதுக்கத்தில் இன்னும் போராட்டம் நீடிக்கிறது.

குழாய்வழி தகர்க்கப்பட்டதால் அங்கு பெரும் தீ விபத்து ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு மீட்பு படையினர் விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் காரணமாக இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளுக்கு எரிபொருள் வழங்கல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# துபாயில் இந்தியருக்கு பரிசாக புதியரகக் கார்

துபாய்,ஜுலை 6

வர்த்தகத்தை விரிவாக்கும் நோக்கத்தில், துபாய் ஷொப்பிங் மால்ஸ் குரூப் , துபாய் கோடை ஆச்சரியம் மற்றும் துபாய் ரமலான் என்ற பெயரில், 10 கார் பரிசுகளை அறிவித்து இருந்தது.

துபாய் வாழ் இந்தியரான பகத் அப்துல்லா, அந்த வர்த்தகத் தொகுதியிலுள்ள ஒரு கடையில் கமரா வாங்கினார். அப்போது கடைக்காரர் அதிர்ஷ்ட கூப்பன் ஒன்று வழங்கி இருந்தார்.

அந்தக் கூப்பனுக்கு பரிசு கிடைக்கவே, அப்துல்லாவுக்கு 2012ஆம் ஆண்டு புதியராக, பி.எம்.டபிள்யு., கார் பரிசாக வழங்கப்பட்டது. இன்னும் மீதமுள்ள 9 பரிசுகளுக்கான கூப்பன் வரும் வாரங்களில் வழங்கப் படவிருக்கிறது.

# வடகொரியாவில் உணவின்றி வாடும் மக்களுக்கு உதவிக் கரம் நீட்டுகின்றது ஐரோப்பிய யூனியன்

பிரஸ்சல்ஸ், ஜுலை 6

வடகொரியாவில் உணவு இல்லாமல் புற்களைத் தின்று வந்த, 6 லட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு உடனடியாக, 64 கோடி ரூபா மதிப்பிலான உணவுப் பொருள்களை வழங்க ஐரோப்பிய யூனியன் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து, ஐரோப்பிய யூனியனின் மனிதாபிமான உதவி ஆணையாளர் கிருஷ்டாலினா ஜியார்ஜீவா கூறுகையில், ''சமீப காலங்களில் உணவு உற்பத்தி பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், உண்ண உணவு இல்லாமல், வடகொரியாவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் அதிகளவில் புற்களைத் தின்று வருவதாக, நாங்கள் நடத்திய ஆய்வில் தெரியவந்தது.

அத்துடன் நாட்டின் சில பகுதிகளில் சத்துக் குறைபாட்டுப் பிரச்சினையும் எழுந்துள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு ஐரோப்பிய யூனியன் உணவு உதவியை வழங்க முடிவு செய்துள்ளது.

இந்த உதவியைத் தவறாகப் பயன்படுத்தப்படுவது தெரியும்பட்சத்தில், உதவியை நிறுத்தத் தயங்கமாட்டோம்.

''மக்கள் பட்டினியால் வாடுவதை எங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதனால், அனைத்து மட்டங்களிலும் உணவு வழங்கல் எவ்வாறு நடக்கிறது என்பதைக் கண்காணிப்போம்.

சத்துக் குறைபாட்டால், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகள், கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் தாய்மார்கள், மருத்துவமனை நோயாளிகள், முதியவர்களுக்கு விசேடமாக இந்த உணவு உதவி அளிக்கப்படும்' என்றார்.

# ஜேர்மனிடம் மருத்துவ உதவி கோருகிறார் லிபிய போராட்டக் குழுத் தலைவர்

திரிபோலி,ஜுன் 6

லிபியாவில் கேணல் கடாபிக்கு எதிரான நடவடிக்கையில் ஜேர்மன் பங்கேற்காமல் விலகி உள் ளது. ஜேர்மனியின் முடிவை லிபிய போராட்டக் குழுத் தலைவர் மகமூத் ஜிப்ரில் வரவேற்று உள்ளார். அவர் ஜேர்மன் வெளியுறவுத் துறை அமைச்சர் குய்டொ வெஸ்டர் வேலேவை பெர்லினில் வியாழக் கிழமை சந்தித்தார்.

அந்தச் சந்திப்பின் போது அவர் ஜேர்மனியின் முடிவை தான் மதிப்பதாகத் தெரிவித்தார். அத்துடன் ஜேர்மன் தங்களுக்கு ஆயுத உதவி அளிக்க வேண்டாம். இருப்பினும் போராட்டத்தில் ஈடுபட்டு காயம் அடைந்து உள்ள தமது பிரிவினருக்கு உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

லிபியாவின் தேசிய மாற்ற கவுன்சிலை ஜேர்மனி அங்கீகரித்து உள்ளது. மேலும் 150 லட்சம் யூரோ நிதி உதவியும் அளித்துள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு போராட்டக்குழுத் தலைவர் நன்றி தெரிவித்து கொண்டார்.

ஜேர்மன் படை லிபிய நேட்டோ படையில் இடம் பெறாதது குறித்து செய்தியாளர்கள் போராட்டக்குழுத் தலைவரிடம் கேட்ட போது, ''உதவிகள் பலவித வழிகளில் வருகின்றன'' என்று தெரிவித்தார்.

பிரான்ஸ் ஆயுதங்கள் வான் வழியே போராட்டக்காரர்கள் பகுதியில் வீசியது குறித்து அந்தப் போராட்டக் குழுத் தலைவர் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை

# வெனிசுலா அதிபர் நாடு திரும்பினார்

புற்றுநோய் கட்டியை அகற்றுவதற்கு மூன்று வார சிகிச்சை பெற்ற வெனிசுலா அதிபர் ஹியூகோ சாவேஸ் நேற்று முன்தினம் திடீரென நாடு திரும்பினார்.

வெனிசுலாவின் 200 ஆம் ஆண்டு கொண்டாட்ட தினத்துக்கு ஒரு நாள் முன்னதாக நாடு திரும்பிய அவர் ஜனாதிபதி மாளிகையின் மேல்மாடத்தில் இருந்து பொதுமக்களிடம் உரையாற்றினார்.

உயிர் வாழ ஒரு போர்க்களத்தைக் காண வேண்டி உள்ளது என உருக்கமாகப் பேசினார். ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் ராணுவ உடையில் 30 நிமிடங்கள் வரை உரை நிகழ்த்தினார். புற்றுநோய்க்கு சிகிச்சை எடுத்த போதும் சோர்வு இல்லாமல் உற்சாக உணர்வுடன் காணப்பட்டார்.

மருத்துவர்கள் கண்காணிப்பில் உள்ளதாகவும் நன்றாக சாப்பிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார். கடவுளின் கைகளில் முதலில் என்னை ஒப்படைத்தேன். இரண்டாவதாக என்னை மருத்துவ அறிவியலிடம் ஒப்படைத்தேன் என் றும் அவர் உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார்.

சாவேசின் உரையைக் கேட்க வீதிகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு இருந்தனர். வெனிசுலாவில் உங்களுக்காகத் தொடர்ந்து இருப்பேன் என்றும் அவர் முழக்கமிட்டார்.


## மக்கள் வங்கியின் பொன்விழா 2011

### யாழ்.வணிகர் கழகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



இலங்கையின் வங்கித்துறை வரலாற்றில் விசேடமாக யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கி மக்களின் மனமறிந்த வங்கியாக எங்களுடைய கிராமியப் பொருளாதாரத்துடன் இரண்டறக் கலந்து தனது சேவையில் அரை நூற்றாண்டு காலம் நிறைவு செய்து பொன்விழாக்காணும் இத்தருணத்தில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தமிழ்ப் பிரதேசங்களில் நெருக்கடியான காலங்களில் சகல இடங்களிலும் மக்களுக்கு அளப்பரிய சேவைகளைப் புரிந்து பிரதேச அபிவிருத்திக்கான வங்கிச்சேவையினை சாதாரண பொது மக்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் தனது சேவையினை செய்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

அரச வங்கியான மக்கள் வங்கியை, மக்கள் கூடிய நாட்டம் கொண்டவர்களாக தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பயன்படுத்திக் கொண்டார்கள்.

நெருக்கடியான கால கட்டத்திலும் மக்களுக்குத் துணையாக விளங்கியதுடன் பலதரப்பட்ட துறைகளில் வர்த்தகர்களுக்கு நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்த பெருமையும் அவர்களுக்கு உண்டு.

மக்களின் மதிப்பறிந்து சிறப்புவாய்ந்த மக்கள் வங்கி தனது மக்களுக்கு மேலும் சேவைகளை வழங்கி பலநூற்றாண்டுகள் சேவையாற்றும் வங்கியாக மிளிர எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கே. ஜெயசேகரன்
தலைவர், யாழ். வணிகர் கழகம்.


# கனடாவில் இளவரசர் வில்லியம் சாகசம்



ஒட்டாவா, ஜுலை 6

கனடாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ள இங்கிலாந்து இளவரசர் வில்லியம், Waterbirding எனப்படும் ஹெலிகொப்டர் சாகச நிகழ்ச்சியை அங்குள்ள கடற் பகுதியில் நிகழ்த்திக் காட்டினார்.

கனடாவில் மட்டுமே தண்ணீரில் ஹெலி கொப்டரை இறக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த சாகசத்தின் போது தண்ணீர் தளத்தை ஹெலிகொப்டர் தொடும் போது என்ஜின்கள் அணைக்கப்பட்டு விடும். அப்போது காற்றில் ஆடும் பட்டம் போல ஹெலிகொப்டர் தண்ணீரின் மேல் பாகத்தில் மிதந்து நிற்கும்.

இளவரசர் வில்லியம் முதல் முறையாக இச்சாகசத்தை நிகழ்த்தியுள்ளார். இளவரசர் எட்வர்ட் தீவு பயண நிகழ்ச்சிக்கு ஒருநாள் முன்னதாக அவர் இதனை மேற்கொண்டார்.

பின்னர் இளவரச தம்பதி டால்வே ஏரிப்பகுதியில் படகுப் பயணத்துக்குச் சென்றனர். இந்த நிகழ்ச்சியின் போது ஹெலிகொப்டர்களை தண்ணீரில் இறக்கும் நுணுக்கம் குறித்து கனடா படையின் கேணல் சாம் மிசவுட் உதவினார்.

இதுகுறித்து சாம் மிசவுட் கூறுகையில்,''இளவரசர் எந்தவித பதற்றமும் இல்லாமல் தொழில் நிபுணத்துவம் வாய்ந்தவராக தண்ணீரில் ஹெலிகொப்டரை இறக்கினார்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
06 ஜூலை 2011 புதன்கிழமை

# தேசிய கூட்டுறவு விளையாட்டு; வடக்கு மாகாணம் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 06

89 ஆவது சர்வதேசக் கூட்டுறவுத் தின விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வடக்கு மாகாணம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

குருநாகல் மாவட்டத்தின் வெலகெதர மைதானத்தில் கடந்த வாரம் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. இந்தப் போட்டியில் நாட்டின் சகல மாகாணங்களையும் சேர்ந்த போட்டியாளர்கள் பங்குபற்றினார்கள்.

கிழக்கு மாகாணம் முதலாம் இடத்தையும், வடமேல் மாகாணம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்ட மாகாணங்கள் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன. (ஐ-26)

# 126 ஓட்டங்களால் வென்றது கிளிநொச்சி ம.வி



சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகியவற்றின் 15 வயது பிரிவு கிரிக்கெட் அணியினருக்கிடையிலான 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 126 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் கிளிநொச்சி மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

பூவா தலையா போட்டு பார்த்ததில் வெற்றி பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி களத்தடுப்பில் ஈடுபடுவதாக தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 30 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ஆறு இலக்குகளை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவர் விதுஷன் 38 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்றார். தனுஷன் 40, பிரகாஸ் 21 மதுஷனன் 26 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றனர்.

பிரவின், பிரியந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் தர்ஷன், யதுஷன் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.


222 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி 26.4 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சாகித்தியன் ஆட்டம் இழக்காமல் 25 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றுக்கொண்டார்.

தனுஷன், மதுஷனன், தனுஜன் ஆகியயோர் தலா 2 இலக்குகளையும் விதுர்ஷன், நிதர்சன், றஜீவன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ஐ-23)

# சாதனை வீரன் துஷ்யந்தன் இன்று யாழ். திரும்புகிறார்

## நல்லூரிலிருந்து ஊர்வலம்



யாழ்ப்பாணம், ஜூலை 6

கிறீஸின் தலைநகர் ஏதன்ஸில் நடைபெற்ற மாற்று வலுவுடையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொண்ட கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவன் சிவராசா துஷ்யந்தன் இன்று யாழ்ப்பாணம் திரும்புகிறார்.

இவர் 4x100 அஞ்சல் ஓட்டப் போட்டியில் இலங்கை அணி சார்பாக பங்கு கொண்டு இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றிருந்தார்.

வெள்ளிப்பதக்கம் பெற்ற சிவராசா துஷ்யந்தனை கௌரவிக்கும் நிகழ்வு இன்று பி.ப. 3 மணிக்கு கோண்டாவில் சிவபூமி மன விருத்தி பாடசாலையில் ஸ்தாபகர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்பாக சாதனை வீரன் அகில இலங்கை இந்து மாமன்றத்திலிருந்து திறந்த வாகனத்தில் மங்கள இசையுடன் கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார்.

அங்கு அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து கல்வி சமூகத்தினால் அவர் கௌரவிக்கப்படவுள்ளார். (ஐ-23)

# உரும்பிராயில் உதைபந்தாட்டம்; சென்.மைக்கல், விக்னேஸ்வரா வெற்றி

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உரும்பிராய் சென். மைக்கல், புத்தூர் விக்கினேஸ்வரா ஆகியன வெற்றிபெற்றன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதல் இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முஸ்லிம் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றைய ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் விக்கினேஸ்வர விளையாட்டுக் கழக அணி மோதியது.

புத்தூர் விக்கினேஸ்வர விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (ஐ-23)



கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய அணியினர் பெறுப்பாசிரியர் அதிபருடன். (23)

# 26 ஓட்டங்களால் திருநெல்வேலி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் வி.பி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டம் ஒன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் அணி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற 4 ஆவது கால் இறுதியாட்டம் ஒன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வெலி கிரிக்கெட் அணி 49.1 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 199 ஓட்டங்களைப் பெற்றது.

அருள்ராஜ் 30, கௌசிகன் 31, ராஜ் 20, கிரிதரன் 20 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

கோகுலன் 5, அசோக் 2, துளசி 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

200 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

முல்லை திவ்வியன் 49, அசோக் 41 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றுக்கொடுத்தனர்.

திருநெல்வேலி கிரிக்கெட் அணி சார்பாக பந்துவீசிய கோபிநாத் 2, யசிந்தன் 2, கௌசிகன் 2, அருள்ராஜ் 3, லவகாந் 1 இலக்கினை கைப்பற்றினர்.

26 ஓட்டங்களால் வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டதன் மூலம் திருநெல்வேலி கிரிக்கெட் அணி அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (ஐ-23)

# ஓர் ஓவரில் 36 ஓட்டங்கள்; கொக்குவில் கிரிபவன் சாதனை

கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக வீரர் கிரிபவன் ஓர் ஓவரில் தொடர்ந்து ஆறு ஓட்டங்களாகப் பெற்ற 36 ஓட்டங்கள், அராலி களுவாத்துறை விளையாட்டுக் கழகம் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஒரு சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அராலி களுவாத்துறை விளையாட்டுக்கழகம் ஆடி விழாவையொட்டி யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர்பங்குபற்றும் 12 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் கொக்குவில் காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் 127 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

களுவாத்துறை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகமும் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக்கழகம் விக்கெட்இழப்பின்றி 167 ஓட்டங்களை பெற்றது.

ஜெயரூபன் எட்டு ஆறுகள் ஐந்து நான்குகளுடன் 87 ஓட்டங்களையும், கிரிபவன் பத்து ஆறுகள் ஒரு நான்குடன் 77 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்கள்.

168 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் 8.3 ஓவர்களில் அனைத்துவிக்கெட்டுக்களையும் இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றது. ஜீவன் 24 ஓட்டங்களைப் பெற்றார். காமாட்சி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரம்மியராகுலன், மோகன் முறையே 4, 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்கள். (ஐ-86)

# வவுனியா பிரதேச செயலகங்களின் தடகளப் போட்டி முடிவுகள்

வவுனியா, ஜூலை 6

வவுனியா மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்திய ஆண்களுக்கான தடகளப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**100 மீற்றர்**

என்.பாலாஜி, எஸ். தருசனன், வை.நித்தியன் (வவுனியா வடக்கு)

**200 மீற்றர்**

என்.பாலாஜி, எஸ். தருசனன், எஸ்.டினோஜன் (வவுனியா வடக்கு)

**400 மீற்றர்**

என்.பாலாஜி, பி.நிசாந்தன், ரி.விந்துஜன் (வவுனியா வடக்கு)

**800 மீற்றர்**

பி.நிசாந்தன் (வவுனியா வடக்கு), ரி.சுரேந்திரன் (செட்டிக்குளம்), ஆர். நிஷாந்தன் (வவுனியா வடக்கு)

**1500 மீற்றர்**

கே. நவநீதன், பி.நிசாந்தன், ரி.சுரேந்திரன் (வவுனியா வடக்கு)

**5000 மீற்றர்**

கே.நவநீதன், (வவுனியா வடக்கு) ரி.லகுவரன்( செட்டிக்குளம்)

**10000 மீற்றர்**

கே.நவநீதன் (வவுனியா வடக்கு), ரி.லகுவரன் (செட்டிக்குளம்)

**குண்டுபோடுதல்**

ரி.ராஜன், எஸ்.தனுசன், கே.யனிபன் (வவுனியா வடக்கு)

**தட்டு எறிதல்**

ரி.றீகன், பி. அகந்தன், எம். லசகன் (வவுனியா வடக்கு)

**ஈட்டி எறிதல்**

எஸ்.அருண்குமார், ரி.நிலோஷ், என்.அஜந்தன் (வவுனியா வடக்கு)

**நீளம் பாய்தல்**

எஸ்.தருசனன், ஆர்.யூட் நிலான், ரி.நிரேஷ் (வவுனியா வடக்கு)

**உயரம் பாய்தல்**

என்.நிமலகேசன், ஐ.ரிசாந்தன், எஸ்.தினேஷ் (வவுனியா வடக்கு)

**முப்பாய்ச்சல்**

ரி.நிரேஷ் (வவுனியா வடக்கு)

**110 மீற்றர் தடைதாண்டல்**

எம்.கேசவன், ஆர். யூட் நிலான் (வவுனியா வடக்கு) என்.எச்.ஜி. நிசாந் நிகால் (வவுனியா தெற்கு).


**400 மீற்றர் தடைதாண்டல்**

எஸ்.டினோஜன், ஐ.ரிசாந்தன், எஸ்.சுமித் பிரசன்னா (வவுனியா வடக்கு)

**5000 மீற்றர் வேகநடை**

எஸ்.வினோதரன், கே.ரசிகரன் (வவுனியா வடக்கு), ரி.அனுசன் (செட்டிக்குளம்). (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்கள் உலகக் கிண்ண கால்பந்து தொடரின் லீக் போட்டியில், பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் நோர்வே அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

உலகக் கிண்ணக் கால்பந்து

# காலிறுதியில் பிரேஸில்

ஜேர்மனியில் பெண்களுக்கான 6 ஆவது பீபா உலகக் கிண்ண கால்பந்து தொடர் நடக்கின்றது. இதில் பிரேசில், ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் 16 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன. நேற்று முன்தினம் நடந்த 'டி' பிரிவு லீக் போட்டியில் பிரேசில், நோர்வே அணிகள் மோதின. அபாரமாக ஆடிய பிரேசில் அணிக்கு, ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் மார்டா, முதல் கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு நோர்வே வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால் முதல் பாதியில் பிரேசில் அணி 1-0 என்று முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய பிரேசில் அணிக்கு ரோசனா (46 ஆவது நிமிடம்), மார்டா (48 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து வெற்றிக்கு வித்திட்டனர். கடைசி வரை போராடிய நோர்வே வீராங்கனைகளால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஏற்கனவே ஆஸ்திரேலியாவை வீழ்த்தியதால், பிரேசில் அணி 6 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முன்னேறியது.

'டி' பிரிவில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் ஆஸ்திரேலியா, ஈக்குவடோரியல் கினியா அணிகள் மோதின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆஸ்திரேலிய அணி 3-2 என்ற கோல் கணக்கில் முதல் வெற்றியை பதிவு செய்தது. ஆஸ்திரேலியா சார்பில் லீனா காமிஸ் (8 ஆவது நிமிடம்), எமிலி வான் எக்மண்டு (48 ஆவது நிமிடம்), லிசா டி வன்னா (51 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர். கினியா அணிக்கு அனோன்மன்.(21, 83 ஆவது நிமிடம்) இரண்டு கோல்கள் அடித்து ஆறுதல் அளித்தார். (15)

# திட்டினார்; கட்டினார் அபராதம்

இலங்கைக்கு எதிராக லோர்ட்ஸில் நடைபெற்ற 3 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் நடுவர் பில்லி பௌடன் மீது வசை பாடிய இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் புரோட்டிற்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அவரது சம்பளத்தில் 50 சதவீதம் செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இலங்கை துடுப்பாட்டம் செய்தபோது கடைசி ஓவரில் ஸ்டூவர்ட் புரோட் வீசிய பந்து ஜீவன் மெண்டிஸின் மட்டையில் பட கடுமையாக முறையீடு செய்தார் புரோட். ஆனால் நடுவர் பௌடன் ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்தார்.

கடுப்படைந்த புரோட் நடுவரை திட்டியபடியே சென்றார். இதனால் ஆட்ட நடுவர் ஹர்ஸ்ட் அவருக்கு அபராதம் விதித்தார். இங்கிலாந்து ஒரு நாள் கிரிக்கெட் அணியின் தலைவர் அலிஸ்டர் குக், புரோட் நடத்தையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

புரோட்டிற்கு அபராதம் விதிப்பது இது முதல் முறையல்ல. கடந்த ஆண்டு பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் சுல்கர்னைன் ஹைதர் மீது பந்தை விட்டெறிந்ததற்கு புரோட்டிற்கு அபராதம் விதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# பொறுத்தது போதும்

## என்கிறார் கெய்ல்




மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் கெய்ல் தொடர்ந்து அணியில் சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்.

இது தொடர்பாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''இனி பொறுத்தது போதும். மரியாதை தரக்கூடிய இடத்திற்கு செல்வேன்'' என்று கூறியிருந்தார்.

இதுபற்றி கிரிக்கெட் சபை தற்போது விளக்கம் கொடுத்துள்ளது. அதில் கெய்ல் தான் சபையை எதிரியாக பார்க்கிறார். சமரசம் ஏற்படவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லை.

ஒவ்வொரு முறையும் சமரசம் ஏற்பட முயலும் போதெல்லாம் அவர் முரண்டு பிடிக்கிறார். அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பை சபை அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அது நடக்காது என்றனர். *(15)*

# மக்கள் வரிப்பணம்;




# மத்திய அமைச்சர் உல்லாசம்

மக்கள் வரிப்பணத்தில் விம்பிள்டன் ரெனிஸ் போட்டியைக் கண்டு ரசித்ததாக இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 29 ஆம் திகதி எஸ்.எம்.கிருஷ்ணா அரசு முறை பயணமாக பிரிட்டன் சென்றார். அங்கு பிரிட்டன் வெளியுறவு செயலர் வில்லியம் ஹேக்குடன் 30 ஆம் திகதி வரை பேச்சுவார்த்தை நடத்தினார். இதற்கு பின்னர் கூடுதலாக இரண்டு நாள்கள் பென்ட்லி சொகுசு ஹோட்டலில் தங்கிய இவர், விம்பிள்டன் ரெனிஸ் அரையிறுதியில் ஜோகோவிச் - சோங்கா மோதிய போட்டியை ஜூலை 1 இல் பார்த்துள்ளார். ரெனிஸ் பிரியரான இவர் விம்பிள்டன் போட்டியை பார்ப்பதற்காக கூடுதலாக இரண்டு நாள்கள் தங்கி மக்களின் வரிப்பணத்தை வீணடித்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனை மறுத்த எஸ்.எம்.கிருஷ்ணா கூறுகையில், இரண்டு நாட்களுக்கு தான் அரசு செலவில் தங்கினேன். அடுத்த இரு நாட்களுக்கு எனது 'பொக்கட்டில் இருந்து தான் பணம் செலுத்தியுள்ளேன். இதனால் எவ்வித பிரச்சினைக்கும் இடம் இல்லை. நான் ஒரு ரெனிஸ் வீரன். ரெனிஸ் போட்டிகளை விரும்பி பார்ப்பேன். அனைத்து இந்திய ரெனிஸ் சங்கத்தின் வாழ்நாள் தலைவராக உள்ளேன். கர்நாடக ரெனிஸ் சங்கத்தின் தலைவராக இருக்கிறேன். எனவே வெளியுறவு துறை அமைச்சராக விம்பிள்டன் போட்டியை ரசிப்பதில் புதுமை ஒன்றும் இல்லை - என்றார்.

வெளியுறவுத் துறை அமைச்சராக பொறுப்பேற்றவுடன் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பல மாதங்கள் தங்கினார் எஸ்.எம். கிருஷ்ணா. பின்னர் அரசின் சிக்கன நடவடிக்கையின் பேரில் மூத்த அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலையிட, ஹோட்டலை விட்டு வெளியேறினார். தற்போது விம்பிள்டன் போட்டியை பார்த்து மீண்டும் ஒரு முறை சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார். (15)

# இலங்கை அணி வெளியேறியது

2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கான தகுதிகாண் போட்டியில் பிலிப்பைன்ஸிடம் தோல்வியுற்று இலங்கை வெளியேறியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற இரு அணிகளுக்கும் இடையிலான போட்டி 1-1 கோல் விகிதத்தில் சமநிலையில் முடிவுற்றது. எனினும் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பிலிப்பைன்ஸ் அணி 4-0 விகிதத்தில் இலங்கையை தோற்கடித்தது.

ரிஸால் ஞாபகார்த்த அரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பத்திலிருந்து பிலிப்பைன்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. இடைவேளையின்போது அந்த அணி 2-0 விகிதத்தில் முன்னிலையில் இருந்தது. இடைவேளையின் பின்னர் மேலும் இரு கோல்களை பிலிப்பைன்ஸ் அணி அடித்தது.

இந்தப் போட்டியை 13,000 ரசிகர்கள் நேரில் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# எவ்வாறு போட்டியிட வேண்டும்?

## இங்கிலாந்து இதைக் கற்க வேண்டும்

சிறந்த ஆடுகளங்களில் எவ்வாறு போட்டியிட வேண்டும் என்பதை இங்கிலாந்து கிரிக்கெட் அணி வேகமாக கற்றுக் கொள்ள வேண்டும் என்று 5 ஆம் வரிசை ஆட்டக்காரரான மோர்கன் தெரிவித்தார்.

தற்போது இங்கிலாந்து - இலங்கை அணிகள் இடையே நட் வெஸ்ட் ஒரு நாள் கிரிக்கெட் தொடர் [illegible] வில் நடந்த ஆட்டத்தில் அதிகளவான ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. அதையடுத்து நடந்த இரண்டு ஆட்டங்களிலும் இலங்கை அணியிடம் இங்கிலாந்து தோற்றது.

'ரி-20' உலக சம்பியன் போட்டியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி ஒரு நாள் போட்டிகளில் எந்த சூழ்நிலையிலும் ஆட கற்றுக் கொள்ள வேண்டும். அதனை விரைவாக கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் பிரச்சினை தான் என்று மோர்கன் மனம் திறந்தார். (15)

# பணத்துக்காகவே விளையாட்டு

## இதுவே இலங்கை கிரிக்கெட்

## சொல்பவர் சங்ககார

*உலகக் கிண்ண போட்டிகளை 1996 ஆம் ஆண்டு இலங்கை அணி வென்றதன் பின்னர் விளையாடிய போட்டிகள் அனைத்தும் பணத்திற்காக விளையாடப்பட்டது போன்றே உள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககார தெரிவித்துள்ளார்.*

*இங்கிலாந்து லோட்ஸ் பகுதியில் இடம் பெற்ற விசேட விரிவுரை நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசியல் தலையீடுகளற்ற விதத்தில் அனைத்து தேசிய கிரிக்கெட் சபைகளும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற ஐ.சி.சியின் தீர்மானத்தை குமார் சங்ககார வரவேற்றுள்ளார்.*

*இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகத்திறமையின்மை காரணமாக கடும் நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில் கிரிக்கெட் சபையை கலைப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் அறிவித்திருந்தார். இந்த வருடம் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை நடத்தியதில் அரசாங்கத்திற்கு 69 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு ஏற்பட்டுள்ளது. நாம் சிறந்த நிர்வாகத்தை எதிர்பார்க்கின்றோம் என்று குமார் சங்ககார தெரிவித்தார்.*

*இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் சிக்கல் நிலை காணப்படுகிறது. அரசியல் தலையீட்டின் காரணமாகவே இவ்வாறான சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது என்று சங்ககார தெரிவித்துள்ளார். மேலும், 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெற்றியீட்டியது மிகப்பெரிய பலமாக அமைந்தாலும், அதன் பின்னர் விளையாடிய போட்டிகள் அனைத்தும் பணத்திற்காக விளையாடப்பட்டது போன்றே உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை தான் 2 வருடங்களில் தலைவர் பதவியில் இருந்து விலகவும் இது போன்ற சிக்கல் நிலைதான் காரணம் எனவும் சங்ககார மேலும் தெரிவித்துள்ளார். (15)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் கடை ஒன்றுக்கு மணிக்கூட்டுத் தொழில் அனுபவம் வாய்ந்தவர்களும், புதிதாக பழக விரும்புபவர்களும் (ஆண்கள்) தேவை. (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்பு- 0774527671, 0212228414

பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

### வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

30.06.2011 உடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பின் பிரதி கிளை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஆட்சேபனைகள், திருத்தங்கள் இருப்பின் 12.07.2011 இற்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தி. இராசகுமார்- தலைவர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகபூஷணிஅம்மை தியாகராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ காரைநகர் கலாநிதி தியாகராஜா ம.ம.வித்தியாலயம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் தற்போது 9 4/3, ருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை "ரவி டவர்" தொடர்மாடியில் வசித்தவரு மாகிய திருமதி நாகபூஷணி அம்மை தியாகராசா (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சிதம்பரப்பிள்ளையின் அருமை மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை தியாகராசாவின் (ஓய்வுபெற்ற உதவி வைத்திய கலாநிதி) அன்பு மனைவியும், திருமதி யசோதை ஸ்ரீதரனின் (தற்போது கனடாவில் வசிப்பவரும் முன்னாள் ஆசிரியை, கொட்டாஞ்சேனை) பாசமிகு தாயும், பொன்னுச்சாமி ஸ்ரீதரனின் (கனடா) அன்பு மாமியும், மயூரனின் அருமை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று (06.07.2011) புதன்கிழமை மு.ப 11 மணி முதல் மாலை 6 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2011) வியாழக்கிழமை மு.ப 11 மணிக்கு ஆரம்பமாகி தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணிக்கு கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9 4/3, ருத்திரா மாவத்தை, கொழும்பு- 06.

தகவல்: (சி/1296) முருகேசபிள்ளை சிவபாலன்.

## திருவுருவப் பட திரை நீக்கம்

சுன்னாகம், ஜூலை 6

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தால் நடத்தப்படும் அமரர் சிவஸ்ரீ சோ.நடராஜக் குருக்களின் திருவுருவத் திரை நீக்கமும், நினைவுப் பேருரையும் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஒன்றியத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் இந்து மத குரு பீடாதிபதி ஜம்பு கேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவதுடன், யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

(ஐ-38)

## இராமநாதேஸ்வரருக்கு நாளை மணவாளக் கோலம்

சுன்னாகம், ஜூலை 6

மருதனார்மடம், இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ இராமநாதேஸ்வரர் ஆலய மணவாளக் கோல உற்சவம் ஆனி உத்தர தினமான நாளை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று மதியம் மகேஸ்வர பூஜை இடம்பெறுவதோடு, மாலை 3.00 மணிக்கு இராமநாதேஸ்வரப் பெருமானுக்கு திருக்கல்யாண வைபவம் இடம்பெற்று பூந்தண்டிகையில் திருவீதியுலா இடம்பெறும்.

இந்த நிகழ்வினை சிவஸ்ரீ குமாரசரவணபவக் குருக்கள் நடத்தி வைப்பார்.

(ஐ-28)

## மரண அறிவித்தல்

### திருமதி தெட்ஷணாமூர்த்தி பத்மாவதி



வட்டுவடக்கைப் பிறப்பிடமாகவும், கலைவாணி வீதி, வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தெட்ஷணாமூர்த்தி பத்மாவதி (04.07.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தெட்ஷணாமூர்த்தியின் அன்பு மனைவியும், சம்புகேஸ்வதி, லிங்கேஸ்வதி, காலஞ்சென்ற இரத்தினேஸ்வதி மற்றும் கணேசமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயும், வரதராசா, கெங்காதரன், யாழினி ஆகியோரின் பாசமிகு மாமியும், வாகீசன், பார்த்தீபன், சுவர்ணன், பாலவர்ணன், கபிலன், வினுசியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கலைவாணி வீதி, வடலியடைப்பு

வே.பொன்னம்பலம் (சம்பந்தி - பாக்கியரத்தினம் ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்).

## எட்டாம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் சுப்பையா மகாதேவகுலசிங்கம்

(காட்டு விநாயகர் கோயிலடி, முள்ளியவளை)



கண்போல் காப்போம் என்றே
கனவுகள் பற்பல கண்டோம்
கலைத்து அதைச் சென்றதனாலே
கண்களை இழந்து விட்டோம்
காலன் வரும் வரை ஏனோ
காத்திடவில்லை வாழ்வை
பாசத்தை விதைத்தீர்கள்
நேசத்தை நினைத்தீர்கள்
நெஞ்சோடு நிறைந்து என்றும்
நினைவோடு வாழுகின்றீர்கள்.

அன்னைக்குச் சொந்தம்
07.04.1941

ஆண்டவன் தஞ்சம்
30.06.2011

எமது குடும்பத் தலைவரின் திடீர் மறைவுச் செய்தியறிந்து உடன் வந்து உதவியவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் அளித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (07.07.2011) வியாழக்கிழமை மாலை முள்ளியவளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடை பெறவுள்ள எட்டாம் நாள் நினைவு நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்போடு வேண்டுகின்றோம்.

குறிப்பு:-இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

3 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

## தவம் போட்டோ

யாழ். மண்ணில்
அல்பத் துறையில்
அதி நவீன இயந்திரங்களை அறிமுகப்படுத்திய
பெருமையில் அல்பத் துறையில்
முன்னோடிகளாகத் திகழும் வேளையில்!

தற்போது UV லெமினேசனில் 3D, ரெக்ஷர் இயந்திரத்தினையும். Glass Cover இயந்திரத்தினையும் அறிமுகப்படுத்தியுள்ளோம் என்பதனை எமது வளர்ச்சிப் பாதையின் படிக்கற்களான வாடிக்கையாளர்களுக்கு தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

தவம் போட்டோ,
167, நாவலர் வீதி, யாழ். 362, கஸ்தூரியார் வீதி, யாழ்.



HERO CYCLES

KENTON

## ஹீரோ, கென்டன் காட்சியறை

சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஹீரோ ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி. யாழ்ப்பாணம். தொ.பே.: 021 4921672



(49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிவுக்குழு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிப்பது பிற்போடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

அந்தக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி இணக்கம் ஒன்றைக் கண்டபின்னர் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு முடிவு செய் துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ஐ)

## தாயகம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பினர் என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பி.எம்யூ.டப்ளியூ. பஸ்நாயக்க தெரிவித்தார்.

நாடு திரும்பியுள்ள இவர்கள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகம் ஆகியவற்றின் உதவியுடன் சொந்தப் பிரதேசங்களில் மீளகுடியேறவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அகதிகள் இலங்கை வருவதற்காக விமானச் சீட்டையும் விமான நிலையத்திலிருந்து சொந்த இடங்களுக்கு செல்வதற்கான வசதிகளையும் அரசு ஏற்பாடு செய்தது என்றும் அவர் தெரிவித்தார். மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கு வாழ்விடம், உட்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி நலன்புரி, வாழ்வாதார வசதிகள் வழங்குவதை போன்று இவர்களுக்கும் அரசால் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வருட ஆரம்ப முதல் இன்று வரை சுமார் 1,000 இலங்கை அகதிகள் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் செயற்பாட்டை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகம் மீள்குடியேற்ற அமைச்சுடன் இணைந்து செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று செவ்வாய்க்கிழமை நாடு திரும்பிய இலங்கை அகதிகளை மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மிச்சேல் சவாகி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பி.எம்யூ.டப்ளியூ. பஸ்நாயக்க உட்பட பலர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பன் தங்கவடிவேல் (ராசன்)



இடைக் குறிச்சி மேற்கு, வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பன் தங்கவடிவேல் (ராசன்) கடந்த 04.07.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பன் மற்றும் தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், நந்தகுமாரியின் அன்புக் கணவரும், கிரிஷா, தனுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாணிக்கம்- செல்லம்மா தம்பதியரின் மருமகனும், இரத்தினம்(கனடா), இராசமலர்(ஹொலண்ட்), ராஜேஸ்வரி அவர்களின் சகோதரனும், யசோதாராணி(கனடா), தங்கவடிவேல்(ஹொலண்ட்) நடராசா, வசந்தகுமாரி, சாந்தகுணம்(லண்டன்), சுஜாதா, மதியழகன் (சுவிஸ்), செல்வழகன் ஆகியோரின் மைத்துனரும், கந்தசாமி, சூசைமுத்து, சிவநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வரணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இடைக்குறிச்சி மேற்கு, வரணி. (சி/1385) குடும்பத்தினர்.

### திருமதி தம்பிராசா பாரிசாதபுஸ்பம்



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், பாலாவோடை, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகள் தம்பிராசா -பாரிசாதபுஸ்பம் நேற்று (05.07.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வராசா - தங்கராணி, கனகமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பராசக்தி, சிவசக்தி(ஆசிரியை, மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை), நீலலோஜினி(உதவித் தொழில் ஆணையாளர், யாழ்ப்பாணம்), முருகதாஸ்(கண்ணன்- ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), செல்வலோஜினி குமரதாஸ்(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், மாகாண பொது நிர்வாக செயலகம், வடக்கு) ஆகியோரின் அன்புத் தாயும், மயில்வாகனம் சோமநாதன், ஜேகதீஸ்வரன், துஸ்யந்தி(பத்தரமுல்ல நீதி மன்ற எழுதுவினைஞர்), சித்திர வேலாயுதம் தமிழ்வாணி(ஆசிரியை, யா/ இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், கபிலன்(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,யாழ்ப்பாணம்), விமலன்(அபான்ஸ் வாடிக்கையாளர் சேவை, யாழ்ப்பாணம்), திவ்யா (யாழ். பல்கலைக்கழகம், நுண்கலைப்பீடம்), மயூரன் (மகாஜனாக் கல்லூரி- 2011), கிரிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி- 2011)வைஷ்ணவி, வைசாகினி, சங்கவி, அக்ஷயன், அக்ஷரன், ஆராதனி, ஆவீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2011) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலா வோடை,
இணுவில் மேற்கு. (5514)
தகவல்:
குடும்பத்தினர்.

## பெண் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னரும், சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னரும் அதிகாரிகள் அவர்களை சோதனையிடுவது வழக்கம்.

தனி அறையில் வைத்தே அவர்களை இராணுவத்தினர் சோதனையிட வேண்டும். ஆனால் கீழ்வரும் தகவல்கள் முற்றிலும் மாறுபட்டனவாகும்.

யாழ்ப்பாணம், உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த ரகுபதி சர்மா (வயது - 53) மற்றும் அவரது மனைவி திருமதி சர்மா(வயது - 50 ) ஆகியோர் 11 வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவிக்கின்றனர்.

திருமதி சர்மா வெலிக்கடைச் சிறையில் பெண்கள் பிரிவிலும், ரகுபதி சர்மா மகஸின் சிறையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நீதிமன்ற விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் போதும், மீண்டும் சிறைச்சாலை திரும்பும் போதும் பல்வேறு இன்னல்களை உடல், உள ரீதியாக எதிர்நோக்குகின்றனர் என 'நாம் இலங்கையர்' அமைப்பு தெரிவிக்கின்றது.

2000 ஆம் ஆண்டு ரகுபதியும், அவரது மனைவியும் அவர்களது வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

இவர்களை விசாரணைகளுக்காக அடிக்கடி நீதிமன்றத்துக்கு அழைத்து வருவது வழமை. மனைவி வெலிக்கடைச்சிறையிலிருந்தும், கணவன் மகஸின் சிறையிலிருந்தும் அழைத்து வரப்படுவர்.

''அவ்வாறு அங்கு கூட்டிச் சென்று பெண் இராணுவ சிப்பாய்கள் சோதனையிடும் போது பகிரங்க இடத்தில் என்னைச் சோதிக்கின்றனர். இதனால் நான் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளேன்'' - என திருமதி சர்மா தெரிவித்தார் என்று 'நாம் இலங்கையர்' அமைப்பின் தலைவர் உதுல் பிரேம ரட்ண தெரிவித்தார்.

கடந்த மாதம் ரகுபதி சர்மாவை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து மீண்டும் கூட்டிச் சென்ற அதிகாரிகள் பகிரங்க இடத்தில் அவரைச் சோதனையிட்டனர். அவர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அதிகாரிகள் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர்.

இவர்கள் இருவரும் மட்டுமல்ல, நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் தமிழ் அரசியல் கைதிகள் ஒவ்வொருவரும் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தங்களுடைய இரண்டு பிள்ளைகளையும் பிரிந்து சிறைவாசம் அனுபவிக்கும் இவர்கள் சிறைச்சாலைகளுக்குள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களை இப்படி அரசு கொடுமைப்படுத்தலாமா என 'நாம் இலங்கையர்' அமைப்பு கேட்கிறது.

இராணுவத்தின் இந்த நடவடிக்கையானது அடிப்படை மனித உரிமை மீறல் எனக் கூறிய உதுல் பிரேமரட்ண, வழக்கு தொடரப்பட்டுள்ள போதும் அரசு இவர்களைப் பிணையிலாவது விடுவிக்காதது ஏன் என்றும் கேட்கின்றார் உதுல் பிரேமரட்ண. (ஓ-சி)

தேவை
கணினி ரைப் செற்றிங் செய்யக்கூடியவர் தேவை.
கற்சுமி- 0718474325

தேவை
தரம் 10 கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கக்கூடிய ஆசிரியை தேவை
யாழ் நகர்- 0775040714

தேவை
பொடியுடன் கூடிய கன்ரர் நாள் வாடகைக்குத் தேவை. உள்ளூர் தேவைகளுக்கு.
தொடர்பு- 0778996559

வீடு வாடகைக்குத் தேவை
சிறிய குடும்பம் ஒன்றுக்கு (4 பேர்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. ஆஸ்பத்திரி வீதி, [illegible] பகுதிகளில் விரும்பத்தக்கது.
தொடர்பு : 0774528818

## விடுதலை.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசத்தில் நாம் பெறும் வெற்றியை வெளிநாடுகளில் உள்ள இலங்கைக்கு எதிரான சக்திகள் பொறாமையுடன் பார்க்கின்றன. சர்வதேசம் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை இல்லாதொழிப்பதே இந்தச் சக்திகளின் நோக்கம்.

புலி உறுப்பினர்கள் தொடர்ந்தும் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். புனர்வாழ்வளிக்கப்பட்ட 552 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு மொத்தமாக 7 ஆயிரத்து 476 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால்,வெளிநாடுகளிலுள்ள புலி உறுப்பினர்கள், அரச விரோதிகள் ஆகியோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களை பயங்கரவாதச் செயற்பாட்டில் இணைப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

இறுதிகட்ட யுத்தத்தின்போது புலிகள் அமைப்பை விட்டு பலர் ஓடிவந்தனர். அவர்களில் பலர் கைதுசெய்யப்படாத நிலையில் இன்னும் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (சி)

## கூட்டமைப்பின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுறுத்தியுள்ளனர். அவர்களில் சிலரைத் தாக்கினர் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்று முற்பகல் 11 மணியளவில் பிரசாரத்துக்குச் சென்ற கூட்டமைப்பின் ஆதரவாளர்களை மறித்த இராணுவத்தினர் துண்டுப்பிரசுரம் ஒன்றைத் தருமாறு கேட்டுப்பெற்றுள்ளனர். அதனைப் பார்த்துவிட்டு வீட்டுக்காகவா பிரசாரம் என்று கேட்டுள்ளனர். அதன் பின்னர் மிரட்டும் குரலில் இங்கு மஹிந்த பார்ட்டியைத் தவிர வேறு எவருக்காகவும் பிரசாரம் செய்ய முடியாது எனக்கூறி ஆதரவாளர்களில் ஒருவரைப் பிடித்துத் தள்ளியவாறு துப்பாக்கியின் அடிப்பகுதியால் அவரைத் தாக்கியும் உள்ளனர்.

இங்கு எவரும் பிரசாரத்துக்கு வரக்கூடாது எனவும் கூறி அவர்களை விரட்டியடித்தனர் என்றும் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் கூறினர். கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் வட்டக்கச்சிப் பகுதியில் நடைபெற்ற கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தை பல்வேறு நடவடிக்கைகள் மூலம் குழப்ப முற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

சிவபூமி பாடசாலை
ஒலிம்பிக் வீரன் வரவேற்பு வைபவம்



உலக விசேட ஒலிம்பிக் போட்டியில் கிறீஸ்நாட்டில் எதேன்ஸ் நகரில் சாதனை படைத்து வெள்ளிப் பதக்கம் பெற்று இன்று யாழ். நகர் வந்து சேரும் எங்கள் சிவபூமி மைந்தன்

செல்வன்
சி.துஷ்யந்தன்

அவர்களை வரவேற்கும் வைபவம் பிற்பகல் 3.30 மணியளவில் கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் நடைபெறவுள்ளது. இந்த வரலாற்று நிகழ்வில் ஆன்மிகப் பெரியவர்கள், கல்வித்துறைசார்ந்த சான்றோர்கள், விளையாட்டுத் துறைசார்ந்த விற்பன்னர்கள், கருணையுள்ளம் படைத்த இனிய அன்பர்கள் அனைவரையும் ஒன்று கூடுமாறு அன்புடன் அழைக்கின்றோம். வரலாற்றுச் சாதனை படைத்த சிறுவனை ஆசிர்வதித்து அரவணைக்க அனைவரும் வருக.

(தனிப்பட்ட அழைப்பு இல்லை)
நன்றி

நிர்வாகசபை
சிவபூமி பாடசாலை,
கோண்டாவில்.

ஆறு. திருமுருகன்
தலைவர்
சிவபூமி அறக்கட்டளை.

Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 3000/= |
| * Dip.in Programming Language | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Fast track Courses ஆக
1 Week course / 1 Month Course
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm

Batch I - 06.07.2011 9Am or 3pm Batch II - 08.07.2011 9Am or 3pm
Batch III - 09.07.2011 9Am or 3pm Batch IV - 10.07.2011 9Am or 3pm

C,C++,Java,Java script,VB,Html,
Programming Language
University Of Madras Bsc

பல்கலைக்கழக மாணவர்களுக்கான
Diploma in Computerized Accounting Packages
- Ashok

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சூளைமேடு சூட்டுச் சம்பவம்;

# டக்ளஸை கைது செய்ய முடியாது மத்திய அரசின் சார்பாக வாதம்

சென்னை சூளைமேட்டில் 1986 நவம்பர் மாதத்தில் நடந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைது செய்து, இந்திய நீதிமன்றில் முன் நிறுத்துவது இயலாது என்று இந்திய மத்திய அரசின் சார்பாக நேற்று வாதிடப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் திருநாவுக்கரசு என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த வழக்கு விசாரணை சென்னை நான்காவது கூடுதல் நீதிமன்றத்தில் இன்னமும் நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்காக தேவானந்தாவைக் கைது செய்து இந்தியாவுக்கு அழைத்துவரவேண்டும் எனக்கோரும் பொது நல மனு தலைமை நீதிபதி எம். வை. இக்பால் மற்றும் நீதிபதி டி.எஸ். சிவஞானம் ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தவேளை கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் ரவீந்திரன் தேவானந்தாவுக்கு ஒரு நாட்டு அமைச்சர் என்ற முறையில், ராஜாங்க ரீதியான சட்டப் பாதுகாப்பு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்.

பொதுநல மனு தாக்கல் செய்திருக்கும் தமிழக மக்கள் உரிமைக் கழகத்தின் சார்பாக வாதாடிய சட்டத்தரணி ராதாகிருஷ்ணன் இரு நாடுகளுக்கிடையே குற்றவாளிகளை நாடு கடத்தும் ஒப்பந்தம் ஒன்று நடை முறையில் இருந்தும், 1994 ஆம் ஆண்டி லேயே தேடப்படும் குற்றவாளி என டக்ளஸ் தேவானந்தா அறிவிக்கப்பட்டும் அவரைக் கைது செய்ய முயற்சி மேற் கொள்ளப்படவில்லை என்று வாதிட்டார்.

டக்ளஸ் அமைச்சரான பின்னரும், இந்தியா வந்து போயிருக்கிறார். இந்திய பிரதமரைச் சந்தித்தும் இருக்கிறார். இந்திய அரசு சட்டத்தை நடைமுறைப் படுத்த அக்கறை காட்டவில்லை என்றார் சட்டத்தரணி ராதாகிருஷ்ணன். (ஒ-10)

## பொன்சேகாவுக்கு தோல்வியாதி; சிகிச்சைக்கு நீதிமன்று அனுமதி

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் முகத்தில் தோல் வியாதி ஏற்பட்டுள்ளது. அவர் விசேட வைத்திய நிபுணரிடம் சிகிச்சை பெறுவதற்கு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று மேல் நீதிமன்றில் நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி.வராவெவ, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் முகத்தில் 'படை' என்னும் ஒருவகைத் தோல் வியாதி ஏற்பட்டுள்ளது. இதனால் அவரது வைத்தியரான வஜிர தென்னக்கோனுக்குப் பதிலாக இந்த நோய் சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணர் ஒருவரிடம் சிகிச்சை பெற வேண்டியுள்ளது. இதற்கு நீதிமன்றம் அனுமதி அளிக்கவேண்டும் என்று பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி நீதியரசர்களிடம் கேட்டுக் கொண்டார். இதனைக் கவனத்தில்கொண்ட நீதியரசர்கள் அதற்கான அனுமதியை வழங்கினர். (சி)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்துகின்றது.

இந்த நாட்டில் மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர். ஜனநாயகம் வேறூன்றி உள்ளது. அபிவிருத்தி இடம்பெறுகின்றது என்று கூறிக்கொண்டு ஒவ்வொரு மாதமும் அவசரகாலச்சட்டம் புதுப்பிக்கப்படுகின்றது.

பயங்கரவாதம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்று அரசு கூறுகின்றது. ஏதோவொரு விதத்தில் பயங்கரவாதம் தொடர்கிறது என்றும் கூறுகின்றது. அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்காகவே அரசு இவ்வாறு கூறுகின்றது.

இந்த அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருப்பதால் வடக்கு - கிழக்கு மக்கள் கடும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். மீண்டும் கைதுகள் இடம் பெறுகின்றன. மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் படையினரின் நிர்வாகம் இடம்பெறுகின்றது. இந்த அவசரகாலச்சட்டத்தால் வடக்கு, கிழக்கில் அரச நிர்வாகம் செயலிழந்து போயுள்ளது.

விதவைகள் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்காக சோரம்போகும் நிலை ஏற்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு இளைஞர்கள் வேறு இடங்களுக்குச் சென்று தொழில் புரிகின்றனர். இந்நிலையில் அவர்கள் சந்தேகத்தில், கைதுசெய்யப்படுகின்றனர்.

வன்னி மாவட்டத்தில் இந்த அவசரகாலச்சட்டம் முப்படையினருக்கும் அமைச்சருக்கும் முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. அரச அதிகாரிகள் சுயமாக வேலை செய்ய முடியாத நிலைமை உள்ளது. அவ்வாறு வேலை செய்தால் அவர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

மீனவர்களும் கடும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். பாஸ் நடைமுறையால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாஸ் முறை இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

விவசாயிகளின் நிலங்களும், பூர்வீக வாழ் நிலங்களும் அபகரிக்கப்படுகின்றன. தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுவது அவசரகாலச்சட்டத்தின் கீழ் சர்வசாதாரண ஒன்றாகிவிட்டது.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் இவ்வாறான கொடுமைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தட்டிக் கேட்டால் அது நிராகரிக்கப்படுகின்றது. இந்த நாட்டில் சிங்கள மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் எமது மக்களுக்கும் உண்டு. அவற்றை அனுபவிக்க அரசு இடமளிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் தமிழர்களின் பிரச்சினைகளுக்காகக் குரல் எழுப்புகின்றது. அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக அரசு பேச்சு நடத்துகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும். - என்றார். (ஒ-சி)

## பாஸ் நடைமுறை நீக்கம்

கொழும்பு, ஜூலை 6

வெளிநாட்டுக் கடவுச்சீட்டு உள்ளவர்கள் ஏ-9 பாதையினூடாக யாழ்ப்பாணம் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே செல்ல வேண் டியிருந் தது. இந்த நடைமுறை நேற்றுமுன்தினம் முதல் தளர்த்தப்பட்டு, எவ்வித அனும தியுமின்றி அங்கு செல்லலாம் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளொன்றுக்கு 210 ரூபாவுக்கும் குறைந்த வருமானத்தையே பெறுகின்றனர்.

அத்துடன், இலங்கை மின்சார சபை 16ஆயிரத்து 800 மில்லியன் ரூபா நட்டத்திலும், ரயில்வே திணைக்களம் நாலாயிரத்து 768 மில்லியன் ரூபா நட்டத்திலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டாயிரத்து 26ஆயிரம் மில்லியன் ரூபா நட்டத்திலும், துறைமுக அதிகார சபை 11ஆயிரத்து 965 மில்லியன் ரூபா நட்டத்திலும் இயங்கி வருகின்றன. இது கடந்த வருடத்தில் வெளிவந்த அறிக்கையாகும்.

375 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டு அம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால், அன்றிலிருந்து இன்றுவரை எந்தவித பிரயோசனமும் பெறப்படவில்லை. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நாளொன்றுக்கு 40 விமானங்கள் வருகின்றன. இருந்தும், கட்டுநாயக்க விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யாமல் பிரயோசனமற்ற அம்பாந்தோட்டை விமான நிலையத்தின் அபிவிருத்திக்கென 300 மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கத் தீர்மானித்துள்ளது.

அத்துடன், அம்பாந்தோட்டை விளையாட்டு மைதானத்துக்காக அரசு 40 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது. ஆனால், அந்த விளையாட்டு மைதானத்தில் ஒரு தடவை மாத்திரமே போட்டி நடத்தப்பட்டது. இது நாட்டுக்குச் சுமையே தவிர, நன்மையல்ல.

இதேவேளை, நாட்டுக்கு எதிராக உள்ள சவால்களை சமாளிப்பதற்கு தற்போதைய அரசால் முடியாதுள்ளது. சவால்களுக்கு முகம் கொடுக்க ஆட்சியிலுள்ள அரசு முயற்சி செய்கிறது. ஆனாலும், அதன் பிரதிபலனாகத் தீமையே ஏற்படுகிறது என்றார் அத்தநாயக்க. (ஒ-சி)


### மரண அறிவித்தல்

### திருமதி அல்பிரட் நிர்மலா (பவா)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அல்பிரட் நிர்மலா (முன்னாள் ஆசிரியர், சென். தோமஸ் கல்லூரி, கொழும்பு) கடந்த 04.07.2011 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னராஜா - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், அருட்பணி அல்பிரட் சின்னையாவின் (இளைப்பாறிய அங்கிலிக்கன் திருச்சபை குரு) அன்பு மனைவியும் ரேச்சல், ஏபேல் ஆகியோரின் பாசமிகு தாயும் ராணி, புஷ்பம், அன்ரன் செல்வரட்ணம் (பெரியண்ணை, மெக்கானிக்), அரியரெட்ணம் (சின்னண்ணை, மெக்கானிக்) ஆகியோரின் சகோதரியும் ரவி, சஞ்சு ஆகியோரின் பாசமிகு மாமியும் இம்மானுவல், எட்வின், சமாயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி எதிர்வரும் (11.07.2011) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வரட்ணம் (பெரியண்ணை, மெக்கானிக்), அரியரெட்ணம் (சின்னண்ணை, மெக்கானிக்) சகோதரர்கள்.

இல.26, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(5515)

குடத்தனை அம்மன் கந்தசுவாமி கோயில்
வருடாந்த கந்தபுராண பூர்த்தி விழாவும் வள்ளி அம்மை திருமணமும்

இன்று 06.07.2011 முற்பகல் 10.00 மணி தொடக்கம் பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து 7.00 மணிவரை பூசைகள் நடைபெற்று இரவு கலை நிகழ்ச்சியின் விசேட நிகழ்வாக:-
யாழ். மண்ணில் புகழ் பூத்த...
சாரங்கா இசைக்குழு வழங்கும்
சாகித்திய சங்கமம்
விழா ஒழுங்கமைப்பாளர்.

### வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.06.2011
செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
அமரர்
இராசலிங்கம்
சிவகாமசுந்தரி (சிவகாமி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (07.07.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் தயவுசெய்து இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு நிகழ்வுக்கு சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.
(3517)
குடும்பத்தினர்.

### உல்லாச விடுதிக்கான பயிலுநர்கள் தேவை

கிறீன் கிறாஸ் உல்லாச விடுதியில் (Green Grass Hotel & Restaurant) உணவு விடுதியில் பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். சுற்றுலாவும் உல்லாச விடுதியும் முகாமைத்துவ பாடசாலையில் பல வருடங்கள் பணியாற்றி, அனுபவமுள்ள, திறமை மிக்க ஆசிரியரான ஆ.கதிர்காமலிங்கம் என்பவரால் பயிற்சியளிக்கப்படும். ஆங்கில அறிவு உடையவரும் 18 இற்கும் 30இற் கும் இடைப்பட்ட வயதுடையவர்களும் விரும்பப்படுவர். இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் நற்சாட்சிப் பத்திரத்துடனும் விண்ணப்பப் படிவத்துடனும் நேரில் சமுகம் தரவும்.

கிறீன் கிறாஸ் ஹோட்டல்
இல.33, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(49,23,24)

### தொழில் வாய்ப்பு

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு வாழ்க்கையில் முன்னேறும் இலட்சியமும் ஊக்கமும் திறமையும் உடைய இளைஞர், யுவதி களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. மாதாந்தம் 22,000/=க்கு மேல் வருமானமாகப் பெற விருப்பம் உள்ளதா? அப்படியானவர்களே எமக்குத்தேவை.

உடனடித் தொடர்புகளுக்கு:-
Mr. R. Hibesan.
T.P:- 0758056596, 021 790 3283.

### கார் விற்பனைக்குண்டு

KN XXXX என்னும் தொடர் இலக்கமுடைய Toyota Axio 141G வெள்ளை நிறமுடைய கார் விற்பனைக்குண்டு.
T.P:- 0772269856


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர்கள் மேடையில் உள்ளனர்.

(ம—8)



# கிராமியப் பொருளாதாரம் மீது அக்கறை கொண்டது மக்கள் வங்கி

## பருத்தித்துறைக் கிளை முகாமையாளர்

பருத்தித்துறை, ஜூலை 6

''கிராமியப் பொருளாதாரம் மீது அக்கறை கொண்ட வங்கியாக மக்கள் வங்கி திகழ்ந்து வருகின்றது. கிராமிய உற்பத்தியை அதிகரிப்பதும் தன்னிறைவு நோக்கி நாட்டைக் கட்டியெழுப்புவதும் அதன் நோக்கமாகவுள்ளது.''

மக்கள் வங்கியின் ஐம்பதாவது ஆண்டு பொன்விழாவையொட்டி பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்ற வைபவத்தில் வங்கி முகாமையாளர் எம்.சிவனேசன் தலைமை வகித்து உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் வாழ்க்கை முறை பொருளாதாரத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மக்கள் வங்கி வடிவமைக்கப்பட்டது.

பணப்பரிமாற்றத்துக்கான ஊடகமாக மட்டும் மக்கள் வங்கி திகழாமல் கூட்டுறவு, கைத்தொழில் விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகளின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் கைகொடுக்கும் வங்கியாக மக்கள் வங்கி செயற்பட்டு வருகின்றது. அதனால் கிராமியப் பொருளாதாரம் மீது அக்கறை கொண்ட வங்கியாக மக்கள் வங்கி திகழ்கின்றது. கிராமிய உற்பத்தியை அதிகரிப்பதும் தன்னிறைவு நோக்கிய நாட்டைக் கட்டியெழுப்புவதும் அதன் நோக்கமாக உள்ளது.

கிராமியப் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி கடற்கரைப் பிரதேசங்களிலும், விவசாய நிலங்களை அண்டிய பகுதிகளிலும் இந்த வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன் முதலாவது கிளை கொழும்பு டியூக் வீதியிலும் 20 ஆவது கிளையும் 31 ஆவது கிளையும் கடற்கரைப் பிரதேசங்களான முறையே முல்லைத்தீவிலும், காங்கேசன்துறையிலும் திறக்கப்பட்டன.

30 ஆவது கிளை யாழ். ஸ்ரான்லி வீதியிலும் 40 ஆவது கிளை வவுனியாவிலும் திறக்கப்பட்டன. பருத்தித்துறை கிளை 285 ஆவது கிளையாக திறக்கப்பட்டது.

இந்த வங்கி 329 கிளைகளையும் 350 சேவை நிலையங்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. அடி மட்ட பொருளாதாரத்திலிருந்து 13 மில்லியன் வாடிக்கையாளர்களை இந்த வங்கி கொண்டுள்ளது. மக்கள் வங்கியின் 50 ஆண்டு காலப் பயணத்தில் வாடிக்கையாளர்களின் பங்களிப்பு மகத்தானதாகும்.

இந்த விழா பொருளாதாரத்தில் சிறந்துள்ள மக்களின் விழாவாக மட்டுமல்ல நலிந்த வாடிக்கையாளர்களினது விழாவாகவும் உள்ளது.

நகர மக்களின் விழாவாக மட்டுமல்ல கிராம மக்களின் விழாவாகவும் அமைகின்றது - என்றார்.

(ம-190)

# சமூகத்துக்கு பயன் தரும் வகையில் மாணவர்கள் உருவாக வேண்டும்

## வேம்படி மகளிர் கல்லூரி அதிபர்

கொழும்புத்துறை, ஜூலை 6

நவீன அறிவியல் முறைகளில் கல்வி வளர்ச்சி பெறுவது போல் ஆன்மிகத்திலும் பற்றுக்கொண்டு மனிதப் பண்புகளை உள்ளத்தின் ஆழத்திலிருந்து வளர்த்து தமக்கும் பிறருக்கும் பயனுள்ளவர்களாக மாணவர்கள் உருவாக வேண்டும் என்று வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலை அதிபர் திருமதி.கே.பொன்னம்பலம் தெரிவித்தார்.

அரியாலை அபிவிருத்திச் சங்கம் முன்னெடுத்துவரும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்டு கடந்த க.பொ.த சா/தா தரப்பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சங்கத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலை அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலும் அவர் உரையாற்றும்போது:

இன்றைய இளையோர் ஆளுமையை வளர்ப்பதோடு, ஒழுக்கம், நற்பழக்கங்களைக் கடைப்பிடிப்பதோடு, பெற்றோரை, பெரியோரை மதித்து எமது விதியை மாற்றக்கூடிய நற்பலனை உருவாக்கி கல்வியில் மட்டுமல்ல இணைப்பாட விதானங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் பொதுநலத் தொண்டுகளில் ஈடுபடும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்வது அவசியம். பொது அமைப்புக்கள் மூலம் உதவிகளைப் பெறுவதன் பிரதிபலனாக தாமும் எதிர்காலத்தில் இவ்வாறான சங்கங்களில் இணைந்து சேவையாற்ற முன்வர வேண்டும் - என்றார்.

(எ-135)

## கதா விருதுக்கு தெரிவானோர்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.இலக்கிய வட்டம் [illegible] செந்தி கதாவிருதுக்கான பெயர விவரங்களை வெளியிட்டுள்ளது.

ஜூன் 2009-2011 வரையான கால கட்டத்தில் ஈழத்தில் வெளிவந்த சிறுகதைகளுக்கே விருதுகள் கிடைக்கவுள்ளன.

தெரிவானோரின் பெயர் விவரம் வருமாறு:

நந்திக்கடல் கரை சிறுகதைக்கு செங்கை ஆழியானுக்கும், நவகண்டம் சிறுகதைக்கு எஸ்.ரஞ்சகுமாருக்கும், கடவுள் உள்ளே மனிதன் வெளியே சிறுகதைக்கு பெனிபே என்பவருக்கும், வைராவெளி பேச்சியம்மன் சிறுகதைக்கு [illegible]ஆனந்தனுக்கும் வழங்கப்படவுள்ளன.

(ம-323)

## நியமனம்

பருத்தித்துறை, ஜூலை 6

பருத்தித்துறை காணி மாவட்டப் பதிவகத்தில் ஏற்பட்ட காணி மாவட்டப் பதிவாளர் வெற்றிடத்துக்கு முல்லைத்தீவு மாவட்டக் காணி மேலதிக மாவட்டப் பதிவாளராகக் கடமையாற்றிய நீ.பிரபாகரன் கடந்த 27 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

**பருத்தித்துறை காணி மேலதிக மாவட்டப் பதிவாளராகக் கடமையாற்றும் திருமதி தி.சரஸ்வதி ஓய்வுபெற்றுச் சென்றதை அடுத்து இந்த நியமனம் இடம் பெற்றுள்ளது.**

(ம)

## பண்டிதமணி நினைவு விருது

யாழ்ப்பாணம், ஜூலை 6

இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக சம்பந்தர் விருது வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் சச்சினாந்தம், எழுத்தாளர் தெளிவத்தை யோசெப், பேராசிரியர் பத்மநாதன், படைப்பாளி சு.வே, பேராசிரியர் சிவலிங்கராசா, பேராசிரியர் சத்தியசீலன், பேராசிரியர் இரா.கனகரத்தினம், பேராசிரியர் விசாகரூபன் ஆகியோர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுக்குத் தகுதியுடையவர்கள் எந்தத் துறையைச் சார்ந்த வராயினும் தமது நூலின் ஒருபிரதியை 'செங்கை ஆழியான், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.'' எனும் முகவரிக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(ம-313)

# வலிகாமம் கல்வி வலய கணித வினாவிடைப் போட்டி முடிவுகள்

சுன்னாகம், ஜூலை 5

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட கணித வினாவிடைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:

**தமிழ்மொழி மூலம்**

**தரம் - 6**

த.கீர்த்தனா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இ.விதுர்சனா ( சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),ம.மேருஜன் (அருணோதயக் கல்லூரி).

**தரம் - 7**

த.சஜீபன் (மகாஜனக் கல்லூரி), து.நுர்மிலா (வயாவிளான் மத்திய ம.வி.), ர.கிருத்திகா ( சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**தரம் - 8**

வி.சங்கீத் ( மகாஜனக்கல்லூரி), ர.லோகிதா ( ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இ.இரஜிவர்ணன் ( மகாஜனக் கல்லூரி).

**தரம் - 9**

த.சாரங்கன் (மகாஜனக் கல்லூரி), கு.காருண்யா (உடுவில் மகளிர் கல்லூரி), அ.அமிர்தவர்த்தினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**தரம் - 10**

சி.தனஞ்சிகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கி.விஷ்ணுகா (மகாஜனக் கல்லூரி) பி.பிரசாந் (பண்ணாகம் மெயகண்டான் ம.வி.)

**தரம் - 11**

கே.கௌசிகன்( மகாஜனக் கல்லூரி), தே.ராகுலன் (யூனியன் கல்லூரி), பு.வைஷ்ணவன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

**ஆங்கில மொழி மூலம்**

**தரம் - 6**

ம.துஷாரா (மகாஜனக்கல்லூரி), வ.வரணிகா (இளவாலை [illegible] ம.வி.), [illegible]யா[illegible]னுகா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 7**

லோ.ஸ்ரீகர்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி), அபினாசியா சேயோன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ர.தர்சிகா( மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**தரம் - 8**

கிறிஸ்ரின் தேவமிர்தா தயாபரன் (உடுவில் மகளிர் கல்லூரி), உ.றம்யா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), வே.பொன்மகள் (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 9**

ம.தரண்யா ( மகாஜனக் கல்லூரி), வி. விதுர்சா (உடுவில் மகளிர் கல்லூரி), பு.ஐங்கரன் ( விக்ரோறியாக் கல்லூரி).

**தரம் - 10**

செ.விருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), ஜெ.மனோஜ் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஜோ.திபுசன் (மெமோறியல்ஆங்கிலபாடசாலை).

**தரம் - 11**


த.விஜித்தா ( உடுவில் மகளிர் கல்லூரி), அற்புதநாதன் பால முரளி கிருஷ்ணா (யாழ்ப்பாணக் கல்லூரி), ச.டனிஷ் (வட்டு. இந்துக் கல்லூரி).

கணிதச் செயற்பாடுகள் போட்டியில் வயாவிளான் மத்திய ம.வி. முதலாம் இடத்தையும், மகாஜனக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.(எ-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு மேற்கு, 4ஆம்
# ஸ்ரீ காளிகா
# கர வருஷ இரதே





**தேர்ப் பவனி: மு.ப. 10.30 – 12 மணி**
மலர் அமைப்பு: புங்கையூர் நவம்
www.punkuduthivu4kalikaambal.com.
T.P: 0213205578

## பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்மன் ஆலய வரலாறு

புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரத்தில் பிட்டியம்பதி என்னும் பதியில் அளப்பரிய மகிமையுடன் வீற்றிருந்த அடியார்கள் இன்னல் களைந்து அருள் பாலிக்கும் அன்னையாக எழுந்தருளி ''காளிகா பரமேஸ்வரி'' என்னும் திருநாமத்தோடு அம்பாள் அருளாட்சி புரியும் சிறப்பான தலமாகத் திகழ்ந்து வருவதுதான் இந்த ஆலயமாகும். இந்த ஆலயத்தில் பிள்ளையார், முருகன், வைரவர் ஆகிய தெய்வங்கள் பரிவார மூர்த்திகளாக இருந்து அருள் பாலிக்கின்றனர்.

இந்த ஆலயம் தோன்றிய காலம் எப்போது என்பது தெளிவாகத் தெரியவில்லை. 200 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்று எண்ணுகின்றோம். பெரிய சோமர் என அழைக்கப்படும் சோமசுந்தரக்குருக்கள் இந்த ஆலயத்தில் நடக்கும் கைங்கரியங்களை முற்பகுதியில் சென்ற நூற்றாண்டு நடத்தி வந்தார். அவரது இயலாமை காரணமாக பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி ஐயரிடம் பூசைக் கிரமம் ஒப்படைக்கப்பட்டு, அவர் ஆலய கைங்கரியங்களைத் திறம்பட நடத்தி வந்தார். இந்த ஆலயத்தில் நவராத்திரி விழாவும், திருவெம்பாவை விழாவும், ஆனி மாதத்தில் பூரநட்சத்திரத்தில் பொங்கல் வேள்வியும் சிறப்பாக நடத்தப்பட்டுவந்தன. இந்த ஆலயம் புளியங்கூடல் மகாமாரியம்மன் ஆலயத்தை ஒத்த கிரியைகளும் அப்படியே நடைபெற்று வருகின்றன.

1950ஆம் ஆண்டு ஸ்ரீ சின்னத்தம்பி ஐயர் தமது முதுமை காரணமாக சிவஸ்ரீ மீனாட்சி சுந்தரக்குருக்களிடம் ஆலய பூசைக் கிரமத்தை ஒப்படைத்தார். அவரது காலத்திலே கோயில் திருத்துவதற்கான பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. ஆலயம் முழுவதும் உடைக்கப்பட்டு, அத்திபாரம் இடப்பட்டு புதிய ஆலயம் அமைக்கப்பட்டு, 1969ஆம் ஆண்டு நயினை பிரதிஷ்டாபூஷணம் ஐ.கைலாசநாதக் குருக்களினால் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டுப் பூசைகள், விழாக்கள் என்பன சிறப்பாக நடத்தப்பட்டு வந்தன. இந்த ஆலயச் சூழலில் சிற்பாஸ்தரிகள் என அழைக்கப்படும் விஸ்வபிரம்ம குல மக்கள் வாழ்கின்றனர்.

இவர்கள் கடின உழைப்பும் கைத்திறனும் நிறைந்த மனமும் கொண்டவர்கள். சக்தியையே குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருபவர்கள். அதனால் மிகப் பழங்காலந் தொட்டே காளி அம்பாளுக்கு ஆலயம் அமைத்து வணங்கி வருபவர்கள். இந்த ஆலய நிர்வாகம் விஸ்வப்பிரம்மகுல மக்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் மகா சபையினால் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களே ஆலயத் திருப்பணி வேலைகளைக் கவனித்து வருகின்றனர்.

1968ஆம் ஆண்டு சிவஸ்ரீ மீனாட்சி சுந்தரக்குருக்கள் தமது இயலாமை காரணமாகத் தமது மருமகன் சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள் (சின்னமணி) அவர்களிடம் பூசைக் கிரமத்தை ஒப்படைத்தார். அவர் இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தி வருகின்றார்.

இந்த ஆலயத்தின் தல விருட்சமாக ஒரு மாவிலங்க மரம் இருப்பதை இன்றும் காணலாம். மரத்தின் அடியில் தான் ஆரம்ப வழிபாடு இருந்ததாகக் கூறுவர். இந்த மரத்திலே ஒரு வைரவர் சூலத்தை வைத்துக் காளியம்மனாகப் பாவனை செய்து பூசைகளும் பொங்கல் வழிபாடும் நடைபெற்று வந்ததாகக் கர்ண பரம்பரைக் கதை வழங்குகின்றது. இன்றும் இந்த மாவிலிங்க மரம் ஆலயத்தின் தெற்கு வாயிலின் அருகே உள்வீதியில் காணப்படுகின்றது. வயதான பெரியோர்களிடம் இந்த மரத்தின் வயது எவ்வளவு இருக்கும் என்று கேட்டால், தாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்த காலத்திலேயே இந்த மரம் இப்படியேதான் இருந்தது என்று கூறுவார்கள். அப்படி ஒரு சிறப்புடன் கூடிய இம்மரத்தின் விசேட அம்சம் என்னவென்றால் இது பருப்பதுமில்லை இதன் கிளைகள் படுவதுமில்லை ஒரே மாதிரியேதான் இருந்து வருகின்றது.

1978ஆம் ஆண்டளவில் திரும்பவும் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்தக் கும்பாபிஷேகத்தின் பின்னர் பல விதத்திலும் சிறப்புகள் பெறத் தொடங்கியது. சுற்றுப்புறக் கொட்டகை போடப்பட்டு உள்வீதி முழுவதும் சிமெந்து போடப்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் திருவிழா ஆரம்பமானது. ஆனி மாதத்தில் வருகின்ற உத்தர நட்சத்திரத்தை (ஆனி உத்தரம்) அந்தமாகக் கொண்ட பத்து நாள்கள் மஹோற்சவம் நடைபெறும். நவராத்திரி விழா, திருவெம்பாவை விழா ஆகியனவும் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஒரு நாளைக்கு மூன்றுகாலப் பூசைகள் ஒழுங்காக நடைபெறும். வெள்ளிக்கிழமைகளில் உற்சவத்தின் போது புங்குடுதீவின் நாலா பக்கங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான அடியார்கள் வருகை தந்து அர்ச்சனை, நூல்கட்டுதல் ஆகியன செய்வித்து தங்கள் இன்னல்களை நீக்கி அம்பாளின் அருளைப் பெற்றுச் செல்வார்கள். இங்கு எழுந்தருளியிருந்து அருளாட்சி செய்து வரும் அம்பாளின் பெருமையும் மகிமையும் அயலூர்களிலும் பிரசித்தமாக இருப்பதால் புங்கையூர் மக்கள் மட்டுமன்றி அயலூர்களிலிருந்தும் அடியார்கள் திருவிழாக் காலங்களில் வந்து வழிபட்டு, தங்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்தி அருள்பெற்றுச் செல்வார்கள். காளியம்மனைத் தரிசித்தால் எல்லா நலன்களும் கிட்டும் என்று அடியார்கள் தங்களுக்குள் உரையாடுவதைக் கேட்கலாம். தீராத நோயுள்ளவர்கள் பலர் இந்த ஆலயத்திலே வந்து தங்கி, மூன்று வேளையும் அபிஷேக தீர்த்தத்தை அருந்தி ஆலயத்திலேயே பத்துப் பதினைந்து நாள்கள் இருந்து நோய் தீர்ந்து திரும்புவார்கள்.

திருவிழாக்காலங்களில் பத்து நாள்களும் பல அடியார்கள் ஆலயத்திலே தங்கி இருந்தும் விரதம் அனுஷ்டிப்பார்கள். இலங்கையில் எந்தப் பாகத்தில் இருந்து தொழில் செய்தாலும் இக்காளியம்மனின் பிரதான பக்தர்களாகிய விஸ்வப் பிரம்ம குலத்தைச் சேர்ந்த அடியார்கள் யாவரும் இந்தப் பத்து நாள்களும் ஊருக்குத் திரும்பி வந்து விழாக்களிலே பங்குபற்றுவார்கள். தேர்த்திருவிழா என்றால் ஒரு தனிச்சிறப்பு. பிள்ளையார், முருகன், அம்பாள் ஆகிய மூன்று மூர்த்திகளுக்கும் தனித்தனி தேர்கள் வீதிவலம் வரும் காட்சி வர்ணிக்க இயலாத ஒன்றாகும். தேருக்கு அம்பாள் எழுந் தருளும் காட்சி, தேரிலே பவனி வரும் சிறப்பு, பச்சையலங்காரங்களோடு தேரில் இருந்து ஆலயத்துக்கு பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வந்து கூடுவார்கள். அன்றைய தினம் சிவலபிட்டி சனசமூகத் தொண்டர்கள் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி வேண்டிய சேவைகளைச் செய்வார்கள். போர்ச் சூழலிலும் எம் ஊர் மக்கள் ஒரு தீங்குமின்றி வாழ அம்பாளின் அருள் வீச்சும் காரணமாகும்.

முன்வீதியில் தீர்த்தத் தடாகம் பெரிய அரசமரம், ஆலமரம் என்பன கோயிலை அழகு செய்கின்றன. முகப்பில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது. இப்போது இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கோயில் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. கூடிய விரைவில் கோயில் கும்பாபிஷேகம்மும், இராஜகோபுரக் கும்பாபிஷேகமும் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அந்தத் திருநாளைப் பெருமிதத்துடன் எதிர்பார்த்து, அம்பிகையின் திருவருள் எல்லா அடியார்களுக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவஸ்ரீ. நாகேந்திரக்குருக்கள், சீ.கு.நல்லையா.**
(நன்றி: 'பூவரசம் பொழுது' - கனடா 2003)

## தேரேறி வருகிறாள் பக்தர்களைக் காக்க!

பிட்டியம்பதி காளிகாம்பாள் தேரேறி வருகிறாள்
தட்டித் தட்டி வணங்குவோருக்கு வாரி வாரித் தருகிறாள்
கட்டிக் கட்டி மண்டபங்கள் தந்தோருக்கு தாராளமாய் வழங்குகிறாள்
முட்டி இடித்து வடம் பிடிப்போர் மனம் மகிழ அருள்கிறாள்

தகதக வெயிலை குளிராக்கி வைக்கிறாள்
கமகம என மணம் கமழ மாலை சூடி மகிழ்கிறாள்
பளபளக்கும் தங்கத்தேரில் பட்டுடுத்தி நகைக்கிறாள்
ஜல்ஜல் என சலங்கை ஒலிக்க அடி எடுத்து வைக்கிறாள்
பொன் கொடுக்கும் தீவகத்தில் ஆட்சிபுரிந்து நிற்கிறாள்
வானுயர்ந்து விருட்ச நிழலில் குளிர்ந்து மனம் மகிழ்கிறாள்
மானெனவே துள்ளித்துள்ளி பக்தர் குறை தீர்க்கிறாள்
கானம் பாடும் பக்தருடன் மகிழ்ந்து தானும் ஆடுகிறாள்

வளம் நிறை தீவதனில் வளைந்து வளைந்து வருகிறாள்
தனமதனில் மக்கள் வாழ உவந்து வரம் அளிக்கிறாள்
களனி செழிக்க அருள்மாரி அகமகிழ்ந்து பொழிகிறாள்
உளம் உருகும் பக்தர் மனை மாட்சி பெற அருள்கிறாள்

மாட்சிமை பொருந்திய அன்னையே
வீட்சியே இலையுன் அருளாலே
காட்சிகள் பலவும் காட்டி நின்று
கட்சி பேதமின்றி மக்களை மனுக்களாக மாற்றுவாயோ.

**ஜோய் மகிழ் மகாதேவன்**
மாவட்ட நீதிபதி, ஊர்காவற்றுறை.

புங்குடுதீவு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி
ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் தேவ
**புதிய சித்திரத்தேர்ப் பவனி - (**

''பயிரவி பஞ்சமி பாசங்குசை பஞ்சபாணி வஞ்
உயிரவி உண்ணும் உயிர்சண்டி காளி ஒளிரும்
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான் மறைசேர் திருநாமங்கள் செப்பு

பார்க்கும் மிடந்தோறும் நீக்கமற நிறைந்து
றலை - பரம் பொருளை வாழ்க்கைமுறை சி
வங்கள் அடிப்படையில் போற்றி வழிபட்டு
பொருளை பெண்ணாக, பராசக்தியாக, தாய்
மனாக, தேவியாக நோக்குவது குறிப்பிடற்
வங்களில் பிரபல்யமாகத் திகழும் காளி அம்ம
லாறு முக்கியமானது.

புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரத்தில் பி
பதியில் அளப்பரிய மகிமையுடன் வீற்றிருந்து
னல் களைந்து அருள் பாலிக்கும் அன்னை
''காளிகாபரமேஸ்வரி'' என்னும் திருநாமத் தோ
ளாட்சி புரியும் சிறப்பான தலமாகத் திகழ்ந்து
ஆலயமாகும். இந்த ஆலயத்தில் பிள்ளையார்,
ஆகிய தெய்வங்கள் பரிவார மூரத்திகளாக இ
கின்றனர். இந்த ஆலயம் உருவாகி த்தாழ
மேல் இருக்கும் என நினைக்கின்றோம். முதலி
ரச மரத்துக்கு கீழ் உருவாகி பின்பு மாவிலங்கை
பாடாற்றியதாக முன்னோர் வாயிலாக அறியக்
வரலாற்றை உறுதியாக கூறமுடியாது என்றாலு
காணியும் சுற்று புறக் காணிகளும் ''கொல்லவள
கொண்டுள்ளன. அவ்விடத்தில் வசித்து வ
சின்னப்பழனி என்ற இரு சகோதரர்கள் அந்த
(இரும்வேலை) செய்யுமிடமாக வைத்திருந்த
இடத்தில் நின்ற மாவிலங்கை மரத்தடியில் தங்
பாட்டுக்காக இரும்பினால் ஆன சூலத்தை வை
கள். அவர்களோடு மற்ற அடியார்களும் சேர்ந்
செய்து வழி பட்டுள்ளார்கள் என்பதை அறியக்
மேற் குறிப்பிட்ட மாவிலங்கை மரம் இப்பொழு
வீதியின் தெற்குப்பக்க வாசலில் நிற்கின்றது
வர்கள் மட்டுமன்றி அம்பாளின் அதிக பற்று
போது ஏதேனும் ஆணையிடும் போது ''கொ
ஆணை'' என்று கூறுவதைக் காணலாம்.

மேலும் வயதான வழிபடுநர்கள் இன்றும் ''
என்று கூறி வழிபடுவதையும் அவதானிக்கலா
கோயிலைப் புதிதாக அமைக்கும் பொருட்
இடித்து அத்திபாரம் வெட்டும் போது அத்திபா
மையான ''கிச்சுக்கிடம் கல்லு'' எனப்படும் கம்
அதிகமாக இருந்தனவாம். மரத்தின்சி றிறு கொ
சூலம், சங்கு, சேமக்கலத்துடன் வழிபாடு ஆ
1939-1940 ஆண்டுகளில் பண்டிகை இல்லாத
பமும் மற்ற மண்டபங்களும் சுண்ணாம்புக் கட
டது. இரும்புச்சூலம், செம்பு சூலமாக மாற்றி
பெற்றது. மூன்றுகாலப் பூசைகளும், விஷேட
நிலை தவறாது செய்து வந்துள்ளார்கள். மஹோ
நடைபெற்று வந்து உள்ளன. பின்பு 1964ஆம்
தானம் நடைபெற்று நாகலிங்கம் என்னும் பி
கோயிலின் அளவு அமைக்கப்பட்டு புதிய வடி
உட்பட யாவும் சாஸ்திர முறையில் அமைக்கப்

மூல விக்கிரகம் கருங்கல்லினால் ஆக்கப்பட்
கும்பாபிஷேகம் நடைபெற்றபோது அதனை சி
ஸ்ரீ ஐ.கைலாச நாதக்குருக்களின் ஆலோசன
தேவி'' என அழைக்கப்பட்டு வந்த அம்பாள் ''
என்னும் திருநாமம் கொண்டு அழைக்கப்பட்
திருநாமம் விஷேடமாக சுலோகத்தில் சேர்க்கப்
வருகின்றது. 1968ஆம் ஆண்டு தொடக்கம் வ
உத்தர நட்சத்திரத்தினத்தன்று தீர்த்த உற்சவமா
சவம் நடைபெற்று வந்தது. முன்னர் பொங்க
நடைபெற்றுவந்தன. 1979ஆம் ஆண்டு புனரா
பிஷேகம் ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள் தலைமை
பெற்றது. பல அடியார்கள் ஆலயத்தில் தங்கி நின்
வரலாறும் இங்கு கவனிக்கத்தக்கது. 1952ஆம்
தருளி விக்கிரங்கள் பிற இடத்திலிருந்து கொண்

இக் கோயிலின் நிர்வாகம் விஸ்வபிரம்ம க
யினரின் வழித்தோன்றல்களாலேயே நடத்தப்பட
ஆம் ஆண்டு நாட்டு நெருக்கடி சூழல் காரணம
லோரும் ஊரை விட்டு வெளியேறினர். மீண்
நடுப்பகுதி தொடக்கம் மீண்டும் பூசை வழிபா
மீண்டும் பாலஸ்தானம் செய்யப்பட்டு புதுப்பொ
இராஜகோபுரம் முன் வீதியில் தீர்த்தக்குளம் யா
செய்து மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இன்று அம்பாளுக்கு ஒரு புதிய சித்திரத்தேர்
சியால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சித்தி
சிற்பாசாரியார் தீவுப் பகுதியைச் சேர்ந்த தி
பிரதீபன் அவ்வூர் சிற்பக் கலைஞர்களோடு
வாக்கியுள்ளார்.

இன்று நடைபெறும் இந்தப் புதிய சித்தி
கண்டு பல சிறப்புக்களை அம்மன் திருவருளினா
'அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம்
**ஆலய பரிபாலனசபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம் வட்டாரம், பிட்டியம்பதி
# ...ா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
# ...தாற்சவ மலர் - 06.07.2011

...ிட்டியம்பதி எம்பிராட்டி
...பாள் தேவஸ்தானம்
...வனி - 06.07.2011

...பாணி வஞ்சகர்
...ி ஒளிரும் கலா
...ாகியென்றே
...கள் செப்புவரே''

... நிறைந்து விளங்கும் பேராற் ...கமுறை சிந்தனைகள், அனுப ...வழிபட்டு வந்துள்ளனர். பரம் ...ாக, தாய்த் தெய்வமாக, அம் ...றிப்பிடற்பாலது. தாய் தெய் ...ளி அம்மனின் வழிபாட்டு வர

...த்தில் பிட்டியம்பதி என்னும் ...ற்றிருந்து அடியார்களின் இன் ... அன்னையாக எழுந்தருளி ...நாமத் தோடு அம்பாள் அரு ... திகழ்ந்து வருவதுதான் இந்த ...ளையார், முருகன், வைரவர் ...களாக இருந்து அருள் பாலிக் ...த்தாழ 20... வருடங்களுக்கு ... முதலில் ...ந்த ஆலயம் பூவ ...ாவிலங்கை மரத்தின் கீழ் வழி ...க அறியக் கிடக்கிறது. ஆரம்ப ...என்றாலும் கோயில் இருக் கும் ...ால்லவளவு'' எனும் பெய ரைக் ...சித்து வந்த பெரிய பழனி, ...கள் அந்த இடத்தில் கம்மாலை ...வத்திருந்தனர். அவர்கள் அந்த ...டியில் தங்கள் குலதெய்வ வழி ...த்தை வைத்து வழிபட்டுள்ளார் ...ளும் சேர்ந்து பொங்கல், பூசை ...த அறியக் கூடியதாகவுள்ளது. ...இப்பொழுதும் கோயிலின் உள் ...ற்கின்றது. கோயிலின் அயல ...க பற்று உடையவர்களும் இப் ...து ''கொல்லன்வளவுக் காளி ...ாம்.

...ன்றும் ''கொல்லவளவு தாயே'' ...ணிக்கலாம். 1964 ஆம் ஆண்டு ...பொருட்டு சிறு கட்டடத்தை ... அத்திபார நிலத்தின் கீழ் முழு ...படும் கம்மாலைக் கல்லுகளே ...றிறு கொட்... கட்டி இரும்பு, ...பாடு ஆற்ற...ந்த காலத்தில், ...இல்லாத மூலத்தானம், மண்ட ...ப்புக் கட்ட...ாக கட்டப்பட் ... மாற்றி கும்பாபிஷேகம் நடை ...விஷேட சக்திபூசைகளும் கால ...ள். மஹோற்சவ திருவிழாவும் ...964ஆம் ஆண்டளவில் பாலஸ் ...ன்னும் பிரபல ஆசாரியினால் ...திய வடிவத்தில் பண்டிகைகள் ...மைக்கப்பட்டன.

...ூக்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டு ...தனை சிறப்புற நடத்திய சிவ. ...ூலோசனைப் படி ''காளிகா ...ம்பாள் ''காளிகாபரமேஸ்வரி'' ...க்கப்பட்டு வருகிறாள். இந்தத் ... சேர்க்கப்பட்டு வழங்கப்பட்டு ...க்கம் வருடாந்தோறும் ஆனி ...ற்சவமாக கொண்டு மஹோற் ... பொங்கல், குளிர்த்தி என்பன ...டு புனராவர்த்தன மகாகும்பா ... தலைமையில் சிறப்பாக நடை ...ங்கி நின்று நோய் தீர்த்து சென்ற ... 1952ஆம் ஆண்டளவில் எழுந் ...து கொண்டு வரப்பட்டுள் ளன. ...பிரம்ம கம்மாளரின் பரம்பரை ...டத்தப்பட்டு வருகின்றது. 1991 ... காரணமாக தீவக மக்கள் எல் ...ர். மீண்டும் 1996ஆம் ஆண்டு ... வழிபாடுகள் நடைபெற்றன. ... புதுப்பொலிவுடன் ஆலயம், ...குளம் யாவும் புனருத்தாரணம் ...ற்றது.

...த்திரத்தேர் அடியார்களின் முயற் ...தச் சித்திரத்தேரை அந்த ஊர் ...சர்ந்த திருவாளர் இராசதுரை ...ளோடு சேர்ந்து திறப்பட உரு...

...திய சித்திரத்தேர் பவனியைக் ...வருளினூடாக பெறுவோமகா. ...திக வரம் பெறலாம்'

...சபையினர், புங்குடுதீவு.

## புங்குடுதீவு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி புதிய சித்திரத் தேரேறி வருகிறாள், வாருங்கள் அவளழகைப் பாருங்கள்

''நாயகி நான்முகி நாராணயிகை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரிசாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
நாயகி யாதி யுடையான் சரண மரணமக்கே''

நம் தேவஸ்தானங்களிலே நிகழ்த்தும் பூசைகள் விழாக்கள் தேவர்களுக்குப் பிரீதியாகவும் மக்களுக்கு நன்மையாகவும் அமைகின்றன. மஹோற்சவ விழாக்கள் இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றைக் குறிக்கின்றன. ''மலைமகள்'' என்று போற்றத் தலையிட்டனர். கடல் அலைகளிலே எழும் தாள ஓசை முத்து திவலைகளைத் தெறிக்கும், எழில் இவற்றில் கண்ட அழகை மற்றொரு பெண் அழகு தெய்வமாக ''அலைமகள்'' என்று போற்றத் தொடங்கினர். ஒவ்வொரு பொருளிலும் உள்ள கலையழகைத் திரட்டி காணும் அழகை ''கலைமகள்'' என்று மற்றொரு பெண் தெய்வமாகப் போற்றினர்.

இம் மூன்று தெய்வங்களையும் ''நவராத்திரி''யின் போது வழிபட்டு வருகின்றோம். இந்த உலகை தோற்றுவித்து, பாதுகாத்து மீண்டும் ஒடுக்கி உயிர்களை உய்விக்கும் வகையில் இறைவன் அருள் பாலித்து வருகிறான். அவன் செய்கின்ற சிருஷ்டி, திதி, சமஹாரம், திரோதானம், அநுக்கிரகம் என்ற ஐந்தொழிலையும் சக்தியின் திருவிளையாடலாகத் திருமூலர் ஆதிசங்கரர் போன்றோர் தம்பாடல்கள் மூலம் அருளியுள்ளார்கள். இதை சிவசக்தி என்று கூறுவார்கள். சிருஷ்டி தொழில் புரியும் பிரமன், காத்தல் தொழில் புரியும் விஷ்ணு, அழித்தல் தொழில் புரியும் உருத்திரன் ஆகிய நால்வரும் அம்பிகை அமர்ந்திருக்கும் பீடத்தின் நான்கு கால்களாகவும் மேல் உள்ள பலகை சதாசிவன் என்றும் அதன் மீது வீற்றிருப்பவள் தான் சிவசக்தி என்று கூறியிருக்கிறார்கள். காசி விசாலாஷி, காஞ்சி காமாஷி, மதுரை மீனாட்சி என அன்னையைப் பல பெயர் கொண்டு அழைப்பார்கள். அபிராமி பட்டரும் அன்னையின் அழகை '' அழகுக்கு ஒவ்வாவல்லி அருமறைகள் பழகி சிவந்த பதாம்புயத்தாள்'' என வியந்து போற்றுகின்றார். துர்க்கையின் வடிவம் தேவர்கள் அளித்த ஆயுதங்களைத் தன் கரங்களில் ஏந்தி தீய சக்தியின் முழு வடிவமான மகிஷாசுரனைச் சம்ஹாரம் செய்தவள் மகிஷாசுரமர்த்தினி எனப்படுவாள், மகிஷாசுரனை சூலத்தால் வீழ்த்தி தன் திருப்பாதத்தின் அடியில் இருக்கச் செய்தது அன்னையின் திரு அருளே. புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தில் பிட்டியம்பதியில் கோயில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டு இருக்கிறாள் ஸ்ரீ காளிபரமேஸ்வரி அம்பிகை. இது இன்னுமொரு சிறப்பான அம்சமாகவுள்ளது. மண் களிக்கும்படி பச்சை வண்ணமேறி மதங்கர் குலப்பெண்களில் தோன்றிய பெருமாட்டி தன் பேரழகே என்பதற்கு இணங்க தீவினை அழித்து அடியார்களுக்கு அருள்பாலிக்க இன்று புதிய சித்திரத்தேர் ஏறி வருகிறாள். வாருங்கள் வந்து பாருங்கள் அவளழகை பெறுங்கள அவள் அருளை.

''கேட்டவரம் தந்திடுவாள் கேதாரநாயகி''

**லயன் கலாநிதி தி.ஐ.கோ.சந்திரசேகரம் (J.P).**

---

புங்கை நகர் மீதுறையும் காளியம்மா

பல்லவி

புங்கை நகர் மீதுறையும் காளியம்மா
புவி முழுவதும் காப்பவளே எங்களம்மா
(புங்கைநகர்......)

அனுபல்லவி

பொங்க லிட்டே படைத்தோம் ஆதியம்மா
பிட்டியம் பதியில் நீதான் அரசியம்மா
(புங்கைநகர்......)

சரணங்கள்

அருளாட்சி புரியுமெம் பரமேஸ் வரித்தாயே
அம்பிகையே என்றும் ஆதார மானவளே
திருவிழிகள் மூன்றும் திருப்புஜங்கள் நான்கும்
திரிசூலமும் கொண்டே காவல் புரிபவளே
(புங்கைநகர்......)

வேண்டும் வரம் வழங்கும் வராகினியே
வீரத்தின் விளை நிலமே வைரவியே
ஆண்டு கொள்வாய் எங்கள் குலமகளே
அற்புதங்கள் அருளும் அன்னையே! எங்கள்....
(புங்கைநகர்......)

ஆதிநாயகியே அநாதியாய் இருப்பவளே

பல்லவி

ஆதி நாயகியே அநாதியாய் இருப்பவளே
அன்பு வடிவானவளே துன்பம் துடைப்பவளே
(புங்கைநகர்......)

அனுபல்லவி

வேதமாய் நின்றுமே நாதமாய் ஒலிப்பவளே
வீரமா காளியே வெற்றி தருபவளே
(புங்கைநகர்......)

### வாழ்த்துச் செய்தி

சேக்கிழார் பெருமானால் சிவ பூமி என்றழைக்கப்பட்ட யாழிசை பெருகிய யாழ்ப்பாணத்திலே தங்கமகாள் தோன்றும் புங்கைமா நகரிலே பக்குவமாய் வீற்றிருந்த பாவ வினை அறுக்கும் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி தாயே! உனக்கு வாழ்த்துரை எழுத அடியேனும் விதிப்பயன் அமைகின்றேன்.

பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரியின் சித்திரத்தேர் வெள்ளோட்டத்துக்கு வாழ்த்துச் சொல்வதற்கு அம்பாளின் மீளா அடியாள் என்ற முறையிலும் அம்பாளின் அருளாட்சி நடைபெறுகின்ற இடத்தை வசிப்பிடமாகக் கொண்டவள் என்ற வகையிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அம்பாளின் கடைக்கண் பட்ட இடமெல்லாம் துன்பங்கள் ஓடி மறையும். இன்பங்கள் ஓடிப் பெருகும். அவளை உள்ளந்தோறும் வழிபடுகின்றவர் நெஞ்சினிலே நல்லாட்சி நடக்கும். இந்த இறுப்பிட்டி பிரதேசமானது நல்வினை கொழிக்கின்ற பெருமை பெற்ற சான்றோர்களை உருவாக்கி உள்ளம் பூரித்திருந்தது ஒருகாலம். கால நீர் ஓட்டத்தினால் இயற்கையும் செயற்கையும் எம்மை அடிக்கடி துரத்தத் தொடங்கியது. மக்கள் வெள்ளத்தினால் நிறைந்த இறுப்பிட்டி விதியின் வலிமையினால் பக்தி வெள்ளம் விலகி ஓட எம்பிரதேசம் அமைதி பெற்றது. தன்னந்தனியே இருந்து எம் தேசம். முழுவதையும் காத்த பெருமை திருவருள் கூடி ''அருள் மழை பொழியும் அம்பாளையே'' சார்ந்தது.

அவளுக்கு இனிது மனம் மகிழ் வெய்தும் சித்திரத்தேர் ஊர்சேர்ந்து உழைத்ததால் இன்று அம்பாள் தேர் ஏறி வருகிறாள். அடியார்களின் பாவவினை அறுக்க பக்தர்களின் பரவசமழையில் நனைய இன்று அவள் வீதி உலா வருகின்றாள்.

எல்லா அடியார்களுக்கும் அம்பிகையின் கிருபாகடாட்சம் பெற எல்லாம் வல்ல ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாளின் பாதாரவிந்தங்களை வேண்டுகின்றோம்.

யா/புங்குடுதீவு,
சேர் துரைச்சாமி வித்தியாலயம்.


## விளம்பர அனுசரணை

யாழ்ப்பாணம் இரும்புத் தொழிற்சாலை
இல.85, பிறவுண் வீதி, கொக்குவில்

சக்திவேல் ஹார்ட்வெயர்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில் T.P-0213006130

ராஜா மரக்காலை
K.K.S. றோட்,
இணுவில்

ஸ்ரீ காமாட்சி அம்பாள் கடைச்சல் தொழிலகம்
கே.கே.எஸ் வீதி, இணுவில்

BALA DIGITAL VIDEO
Thillayampathy Kondavil
T.P. 0602210894

ஆனந்தா கட்டடப் பொருள் வாணிபம்
K.K.S. றோட், இணுவில்

S.L.S கல் உடைக்கும் தொழிற்சாலை
பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

VASHANTH DIGITAL PRINTERS
Kondavil West, Kondavil

கிருஷ்ணா தச்சுத் தொழிலகம்
கே.கே.எஸ் வீதி,
4ஆம் கட்டையடி, கோண்டாவில்.

ஸ்ரீ லக்சுமி ரிறாக்
இணுவில் சந்தி,
இணுவில்.

நுபாணாஸ் ஜூவல்லறி
இல.27, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

அன்னை மரக்காலை
இல. 174 A, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

E.Com.Computer Tearning Center
95A.Temple Road,
Nalluar Jaffna,
K.K.S.Road kondavil, Jaffna.

அனுசா பந்தல் சேவை
கே.கே.எஸ் றோட்
இணுவில் சந்தி, இணுவில்

சு.பாஸ்கரன் சிற்பாலயம்
திருக்கோயில் சிற்பப் பொருள்கள் உற்பத்தியாளர்கள்
479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 0212223515, 0776351805

ரமணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
525, 528, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

பஷன் ஹவுஸ்
65, (203), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புக் கண்ணன் தச்சுத் தொழிற்சாலை
மஞ்சத்தடி, இணுவில்

முத்தொளி
டிஜிற்றல் DVCAM வீடியோ படப்பிடிப்பு
கோண்டாவில், தில்லையம்பதி,
யாழ்ப்பாணம்

கஜமுகன் ஹார்ட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA TRAADERS
யாழ்ப்பாண வணிக நிலையம்
இல.336, 338, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பட்டாபி படமாடம்
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்,
64, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

அம்பிகை இரும்புத் தொழிற்சாலை
கோயில் வாசல்,
K.K.S, றோட், இணுவில்.

சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX
தொடர்புகளுக்கு
021 4650255

THILLAIYAMPATHY MOTORS
Dealers in. Agriculture & Electric Water Pumps, Hugo Power Tools, Engineerng Tools, Generators, Machines & Spare Parts
# 114, Stanley Road, Jaffna,

Varma Hardware,
K.K.S. Road, Inuvil.

அம்பிகாபதி பான்ஷி ஹவுஸ்
66,பெரியகடை, யாழ்ப்பாணம்

சங்குசக்கரம்
இல.111, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்

அம்பிகை அழகுமாடம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பசி தீர்க்கும் மகத்தான பணியில் நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை



வரலாற்றுப் பெருமைமிக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக் கிழமை ஆரம்பமாகவுள்ளதையொட்டி "அமுதசுரபி" அன்னதான சபை மக்களின் பசிபோக்கும் பணிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னதாகவே முடுக்கி விட்டுள்ளது. அம்பாளைத் தரிசிக்கச் செல்லும் அடியார்கள் பசியுடன் திரும்பக் கூடாது என்பதே அமுதசுரபி ஆரம்ப மானதின் கோட்பாடாகும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அன்னையின் தரிசனத்துக்காகத் தீவுப்பகுதியில் மட்டுமன்றி குடாநாட்டிலும் ஏனைய பாகங்களிலும் இருந்துவரும் அடியார்கள் தமது பசியைத் தீர்ப்பதில் பெரும் இடர் பாடுகளைக் கொண்டிருந்தார்கள். உறவினர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள் போன்றவர்கள் உள்ளவர்களின் வீடுகளில் நயினாதீவு உற்சவ காலங்களில் வருபவர்கள் தங்கி வசதியாக உணவு உண்டு அம்பாளின் அருளைப் பெற்றுத் திரும்புவார்கள்.

ஏனையோர் வெளிகளில் தங்கி தமது வசதிக்கேற்ப திருப்தியற்ற உணவை அங்குள்ள கடைகளில்

**லக்ஸ்மன்**

உண்டு அம்பாளைத் தரிசித்துத் திரும்புவர். கடைகளில் விலைகளும் அதிகம் என்பதால் பெரும்பாலானவர்கள் தேனீருடன் பொழுதைப் போக்குவதுமுண்டு.

அம்பாளின் அருளை நாடிவரும் அடியார்கள் உணவுப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியும் அரைகுறை உணவுடன் திரும்புவதையும் பல தடவைகள் அவதானித்தனர்.

நயினாதீவின் பிரமுகர்கள் அன்னையை நாடிவரும் அடியார்கள் திருப்திகரமாக உணவுண்டு, பசிபோக்கி தமது இடங்களுக்குச் செல்வதற்கான வழியை ஏற்படுத்த வேண்டும் என எண்ணினர். இதற்கென அன்னதான சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று திருவுளங்கொண்டு 1960 ஆம் ஆண்டில் கிராமசபைத் தலைவராக இருந்த சி.க.தம்பையாவுடன் ஆரம்பகர்த் தாக்களாக, வே.கந்தையா, ஆர்.ஆர்.பூபாலசிங்கம், வே.பரமலிங்கம், நா.கணபதிப்பிள்ளை, இ.சின்னத்துரை, த.தம்பிமுத்து, இ.குலசேகரம்பிள்ளை, க.கதிரேசு, நா.காராளபிள்ளை, கு.கோபாலபிள்ளை, க.நாகேஸ்வரன், இ.முத்தையா, க.சிவசிதம்பரம், நா.மதியாபரணம், ச.இரத்தினம், க.குமரையா, வே.கந்தசாமி, வே.சிவப்பிரகாசம், த.கிருஷ்ணசாமி, இ.பரமலிங்கம், மு.சண்முகராசா, ந.சுப்பிரமணியம், சி.பரமசாமி, வே.பரமசாமி ஆகி யோரும் இருந்துள்ளனர். இது தவிர கணிசமான பெருமக்களும் இதில் அங்கத்துவம் வகித்து வருகின்றனர்.

அமுதசுரபி குறித்த புராதன தகவலும் உள்ளது. ஆபுத்திரனுக்கு அமுத சுரபியை வழங்கியவர் அன்னை பராசக்தி. பசித்தவர்களுக்கெல்லாம் அமுத சுரபி மூலம் உணவு வழங்கி மகிழ்ந்த ஆபுத்திரனின் தர்மம் பெருகி விடக் கூடாது என அஞ்சிய இந்திரன் பாண்டி நாடு முழுவதும் செல்வம் கொழிக்கும் நாடாக மாற்ற அமுத சுரபிக்கு பயனில்லாது போனதாகவும் ஆபுத்திரன் சாலக நாட்டிற்குச் செல்வதை அறிந்து ஆத்திரமுற்ற இந்திரன் அவன் சென்ற மரக்கலத்தைச் சிதறடிக்க அது மணிபல்லவத் தீவை அடைந்தது.

அங்குள்ள கோமுகிக் கரையில் அநாதரவாகக் காணப்பட்ட அவன் மனிதர்களற்ற தீவில் இந்தப் பாத்திரத்தால் ஒருவரது பசியைக் கூடப் போக்க முடிய வில்லை என மனம் நொந்தான். இதனால் அமுதசுரபியைக் கோமுகிப் பொய்கையிலே போட்டுத் தானும் உயிர் நீத்தான். மணிமேகலை மணிபல்ல வத்தீவுக்கு வரும்வரை கோமுகிப் பொய் கையிலேயே அமுத சுரபி கிடந்ததாகவும் கதையுண்டு.

இது முன்னதாக "நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரிகர்களின் அன்னதான சபை" என்னும் பெயரிலேயே உருவாக்கப்பட்டது. இதற்கு அமுத சுரபி எனப் பெயரிட்டவர் தமிழக அறிஞர் கி.வா.ஜகந்நாதன் ஆவார். அமுதசுரபி பெயர் நயினாதீவின் வரலாற்றுக்கு இணைந்ததாகும்.

(தொடரும்)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 06.04.1958

வாழ்க்கை எனும் தொலை தூரப் பயணத்தில்
இறுதிவரை உற்ற துணையாய் இருப்பீரென்று இறுமாந்திருந்தோம்
ஓராண்டு கடுகதியாய் விரைந்து விட்டதப்பா
எனினும் உங்கள் அழகான புன்சிரிப்பு மறையவில்லை
உங்களின் பிரிவுதந்த பேரிழப்பினை இன்றுவரை
மறக்கமுடியாது வேதனையே வாழ்க்கையாய் வாழ்கின்றோம்
உங்களின் அமைதிக்காய் பிரார்த்திக்கின்றோம்

இறப்பு: 16.07.2010



அமரர்
மயில்வாகனம்
தற்பரநாதன்
திதி: ஷஷ்டி

மனைவி, மகன்.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

(49,21,23)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி
நித்தியானந்தம்
விமலாதேவி



மண்ணகம்
03.10.1952

விண்ணகம்
23.05.2011

உன் விழிகளில் தூசு விழுந்தாலும்
துடைப்பதற்கு ஒரு மகன் கூட
பக்கத்தில் இல்லையென நினைத்தோ
பாதி வாழ்க்கை முடித்து மீதி வாழ்வைக் காணாது
நீ எம்மையெல்லாம் பரிதவித்து சென்றாயோ
வாடுகிறோம் உன் பிரிவால்
நீ பிரியவில்லை என்றும் எம்மில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்.

எமது குடும்பத்தலைவியின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (06.07.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

★ குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகமளிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

வத்திராயன் வடக்கு,
தாளையடி.

(49,19,22)

கணவர் மற்றும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீகம் பற்றி மட்டுமல்ல...




எமக்கு நாணயம் பற்றியும் தெரியும் !

இதை உங்களுக்குத் தெரிவிப்பது இலங்கை மத்திய வங்கி

## நீலதாமரை

நீலதாமரை (Udumbara) மலர்கள் 3,000 வருடத்துக்கு ஒரு தடவை மலர்கின்றதாம். இந்து மதம், பௌத்த மதம் இரண்டும் இதனைப் புனித மலர்களாகப் போற்றி வருகின்றன. மிக மிகச் சிறிய அளவுடைய இந்த மலர்கள் சந்தன வகையை ஒத்த நறுமணம் உடையவை. வெண் நிறம் கொண்ட இந்த நீலதாமரை மலர்கள் 1997 ஆம் வருடம் ஜூலை மாதத்தில் கொரிய நாட்டில் மலர்ந்திருக்க காணப்பட்டது.

நீலதாமரை புத்தபிரான் அவதரித்து 3,024 வருடங்களுக்குப் பின்பு மலர்ந்திருப்பது நல்ல சகுனம் என்று பௌத்த மதத்தினர் நம்புகின்றனர்.

**Uthayan**

**Guest House - I**



*Spend your Holidays with homely hospitality in Jaffna. Located 1 KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.*

**No. 392/6, Navalar Road, Jaffna.**

021 - 2225660, 021 - 5677608, 077 - 7739224

**PHILIPS**

**காலங்காலமாய் எமது நம்பிக்கையை வென்ற உலகத்தரம் வாய்ந்த பிலிப்ஸ் உற்பத்திகள்**

### LCD / LED தொலைக்காட்சிகள்



32PFL3605
- 32" LCD திரை
- முழு HD
- 50000:1 டயனமிக் கொண்டாஸ் ரேஷியோ
- 20W ஒலித்திறன்
- 2 HDMI/USB/PC input

வட்டியில்லா 12 கொடுப்பனவு

ரூ.59,990



42PFL3605
- 42" LCD திரை
- முழு HD
- 50000:1 டயனமிக் கொண்டாஸ் ரேஷியோ
- 20W ஒலித்திறன்
- 2 HDMI/USB/PC input

வட்டியில்லா 12 கொடுப்பனவு

ரூ.109,990



32PFL5605
- 32" LED திரை
- முழு HD
- 100 Hz
- 50000:1 டயனமிக் கொண்டாஸ் ரேஷியோ
- 40W Surround Sound
- 3 HDMI/USB/PC input
- 40% மின் சேமிப்பு

இலவசம் புளூரே டீவீடி ப்ளேயர்

ரூ.109,990

### ஹோம் தியட்டர்கள்



HTS2500
- 300W RMS மின் திறன்
- CD/VCD/DVD
- USB Play-back
- FM ரேடியோ

வட்டியில்லா 12 கொடுப்பனவு


ரூ.17,990



HTS3540
- 1000W மின் திறன்
- HDMI 1080p
- டொல்பி டிஜிடல் மற்றும் Pro Logic II surrounding
- DVD, VCD, CD & USB

வட்டியில்லா 12 கொடுப்பனவு

ரூ.38,990



HTS3530
- 600W RMS மின் திறன்
- HDMI 1080p
- டொல்பி டிஜிடல் மற்றும் Pro Logic II surrounding
- DVD, VCD, CD, FM & USB

வட்டியில்லா 12 கொடுப்பனவு

ரூ.32,990

### கொண்டுசெல்லக்கூடிய ஒளிநாடாக்கள்



AZ102
- CD, CD-R & CD-RW
- கெசட் டெக்
- FM/MW ரேடியோ

ரூ.4,990



AZ382
- USB/MP3/WMA-CD, CD & CD-RW
- FM/MW ரேடியோ

ரூ.6,990



AQ4140

ரூ.3,590
- FW/AM/SW ரேடியோ
- கெசட் டெக்
- பில்ட்-இன்-ப்லட் மைக்

### டீவீடி ப்ளேயர்

DVP3550K




- Play CD, VCD, DVD, DivX MP3, WMA, JPEG Hi-Speed USB 2.0
- கரோக்கி

ரூ.5,990

### புளூரே டீவீடி ப்ளேயர்

BDP2700



- அகன்றத்திரையில் ப்ளூரே டிஸ்க் காட்சிகளை முழு HD 1080p யில் காண்பதற்கு ஏற்றது
- DivX® Ultra for DivX®

விலை ரூ. 18,990

விசேட விலை ரூ.16,990

தெரிவு செய்யப்பட்ட கடனட்டையாளர்களுக்கு வட்டியின்றிய மீள் செலுத்தும் முறைகள்

அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் **A-Z Electronics (Pvt) Ltd.**

**இன்று** **பிலிப்ஸ் இன்னிசை விருந்து**

அக்னி இசைக்குழுவினருடன்

இன்று 06-07-2011 (புதன்கிழமை)
பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில்
மாலை 6.00 மணிமுதல்


*நிபந்தனைகளுக்குற்பட்டது

A-Z: 0773179593, அபான்ஸ்: • சுண்ணாகம்–0777684068, சங்கானை– 0773763503 • JVC-HAIER: 0776163420

நாடெங்கிலும் 100 அபான்ஸ் விற்பனைக்கு பிந்திய

அபான்ஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சீஹொயா மரம்



பூமியில் இருக்கக் கூடிய தாவரங்களில் உயரத்திலும் பருமனிலும் மிகவும் பெரியது சீஹொயா (Sequoia) எனும் மரம்தான். இத்தாவரத்தின் இனத்தை ஒத்த ரெட்வூட் (Red Wood) எனும் மர வகையும் உலகின் மிக உயரமானதும் மிகவும் பிரமாண்டமானதுமாகக் காணப்படுகின்றது.

இந்த மரங்கள் டைனோஸார் எனும் இராட்சத விலங்குகள் வாழ்ந்த காலத்திலிருந்து (200 மில்லியன் வருடங்கள் முன்பு) பூமியில் வாழும் தாவரமாக இருந்திருக்கின்றன என்பது ஆய்வுகள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சாதாரண மனிதர்கள் முதல் தாவரவியல் ஆராய்ச்சியாளர் என அனைவரிடத்திலும் பல வினாக்களையும் ஆச்சரியங்களையும் உருவாக்கி இருக்கிறது சீஹொயா மரம்.

* சீஹொயா (Sequoia) மரங்கள் 180 மில்லியன் வருட காலமாக பூமியில் காணப்படுகின்றன.

* இந்த மரம் அதிகபட்சமாக 310 அடி உயரம்வரை வளர்கின்றன.

* இந்த மரத்தின் அடிப் பகுதி விட்டம் 45 அடிவரை காணப்படுகின்றது. இதனால் இந்த மரத்தைக் குடைந்து போக்குவரத்துக்கான பாதைகளை குகை போல் சில இடங்களில் உருவாக்கியுள்ளனர். பண்டைய காலத்தில் இந்த மரத்தின் உட்பகுதியில் மனிதன் குடியிருப்பாகப் பயன்படுத்தியிருப்பதும் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.




* இந்த மரம் விதை மூலமாகத் தனது இனவிருத்தியைச் செய்கின்றது. இந்த இராட்சத மரத்தின் இலைகளும் விதைகளும் கால் (1/4) அங்குலத்திலும் மிக சிறியதாக உள்ளது.

* இந்த மரத்தின் வயது 3,200 வருடங்களுக்கும் அதிகமாக உள்ளது என்று ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

* நல்ல முதிர்ச்சியான ஹொயாவின் வேர்கள் ஒரு ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படுகின்றன.

* முற்றிய மரத்தின் வெளிப்பட்டை மட்டும் இரண்டு அடியிலும் மேலான தடிப்புடையது.

* இந்த மரங்கள் தற்போது வடக்கு அமெரிக்காவில் அதிக அளவில் காணப்படுகின்றன. இந்த மரங்கள் ஐரோப்பாவிலும் வடக்கு அமெரிக்காவிலும் 135 மில்லியன் வருடம் முன்பு அதிக அளவில் காணப்பட்ட போதிலும் இன்று வடக்கு அமெரிக்காவில் மட்டுமே அதிகமாக உள்ளன.

## ஆயுள் காலத்தை அறிய முடியுமாம்?

ஒரு மனிதனின் ஆயுள் காலத்தை குரோம்சோம்களின் மூலம் அறிந்து கொள்ள முடியும் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஒருவரது குரோம்சோம்களின் நுனிப் பகுதி டெலோமியர் என அழைக்கப்படுகிறது. அவை நீளமாக இருந்தால் ஒருவரது ஆயுள்காலம் அதிகமாக இருக்கும்.

அதே பட்சத்தில் நுனிப் பகுதி சிறிதாக இருந்தால் அவரின் வாழ்நாள் குறைவாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. டெலோமியரின் அளவை கண்டுபிடிக்க ஒரு சிறிய இரத்த பரிசோதனை மட்டுமே போதும்.

இச்சோதனையை மாட்ரிட் நகரில் உள்ள ஸ்பெயின் தேசிய புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த மரியா பிளாஸ்கோ மேற் கொண்டார்.

## அமைதிக்குக் காரணம் என்ன...?


சிலர் எப்பொழுதும் அமைதியாகவே இருப்பார்கள். இவர்கள் அமைதியாக இருப்பதற்கான காரணம் என்னவென ஜப்பானிய மற்றும் ஐக்கிய அமெரிக்க ஆய்வார்கள் ஆராய்ந்துள்ளனர்.

நபர் ஒருவரின் அமைதிக்கான காரணம் மரபணுக்களே என ஆய்வின் முடிவு வெளியிடப்பட்டுள்ளது. எனினும் சில குறிப்பிட்ட மரபணுக்கள் மட்டுமே அமைதியாக உள்ளன என்றும் ஏனையவை அவ்வாறு இல்லாமல் இருப்பதற்கான காரணம் குறித்தும் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## மரத்தையே அறிந்தவனுக்கு அதன் இலையைக் காட்டுவதா...




அறிவுடையார் எல்லாம் உடையார்
அறியாதார்க்கு இழப்பே மிஞ்சும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org